





... பக்கம் 08

தாககுதல் பக்கம் 09

மட்பு பக்கம் 17

வெற்றி பக்கம் 23



20.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 32

# உதயன்

சுடர் 27
கதிர் 161

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 23 சனிக்கிழமை (05/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# தமிழர் தீர்வுக்கு இந்தியாவின் உறுதியான ஆதரவு அவசியம்

## இலங்கை வந்த இந்திய நாடாளுமன்றக்குழு பிரதமர் மன்மோகனிடம் வலியுறுத்தல்

புதுடில்லி, மே 5

இலங்கையில் சிறுபான்மையினர் அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ள மேற்கொண்டு வரும் முயற்சிக்கு இந்தியா உறுதியான ஆதரவை - பின்புலத்தை வழங்க வேண்டும் என்று இலங்கைக்குப் பயணம் செய்த இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்றக் குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேற்று வலியுறுத்தியுள்ளது.

இலங்கை வந்த இந்தியக் குழுவுக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போதே இந்தியக் குழுவினர் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். பிரதமர் மன்மோகன் சிங்குடன் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், மாநிலங்கள் துறைஅமைச்சர் நாராயணசாமி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். சுமார் 45 நிமிட நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

இந்தியக் குழுவினர் தமது 5 நாள் இலங்கைப் பயணம் குறித்து இந்தியப் பிரதமரிடம் விரிவாக விளக்கினார்கள்.

ஒன்றிணைந்த இலங்கைக்குள் உரிமைகளை மதித்து வாழக் கூடிய சூழல் வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னைச் சந்தித்த வேளை தன்னிடம் வலியுறுத்தியதாக எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறினார். அத்துடன் இலங்கைப் பயணம் தொடர்பானவிரிவான அறிக்கை 04


தமிழர் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தீர்களா?
கே.பியிடம் ஒரு கேள்வி
(விவரம் 2ஆம் பக்கத்தில்)


### கொள்கலன் மோதி ஒருவர் சாவு

கொள்கலன் ஒன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார். நேற்று பியகம பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் மிதலாவயைச்சேர்ந்த பிரதீப் ஜயசிங்க (வயது - 23) என்பவரே உயிரிழந்துள்ளார்.

### காலவரையறை இன்றி மூடப்பட்டது சிகிரியா

சிகிரியாப் பிரதேசத்தில் குளவி தாக்குதலுக்கு இலக்கான எட்டுப் பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிகிரியா சிங்ககட்டப் பிரதேசத்திலேயே இவர்கள் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இவர்களில் ஒருவர் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி எனவும் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுக் காலை 11.30 மணியளவிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாகச் சிகிரியாவுக்கு நுழையும் வீதி காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு காட்டில் மரம் வெட்டியவர்கள் கைது

முல்லைத்தீவு, வல்லிபுரம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரம் வெட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் முல்லைத்தீவுப் பொலிஸார் நடத்திய சோதனையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் காட்டுப் பகுதியில் வெட்டி எடுத்துச் செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த நான்கு மற்றும் ஏழு அடி உயரமான மரக்குற்றிகள் ஒரு தொகையும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த மரங்களின் தற்போதைய பெறுமதி இரண்டு லட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

### மர்மப் பொருள் வெடித்து சிறுவன் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யானைகட்டிய வெளிப் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் சிறுவனொருவன் படுகாயமடைந்துள்ளான். நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யானைகட்டியவெளியைச் சேர்ந்த அரசரட்ணம் இன்பராசா (15வயது) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார். குறித்த சிறுவன் தமது மாடுகளைக் கட்டுவதற்காக, மாடு மேய்க்கும் பகுதியில் நிலத்தைத் தோண்டியபோது அதற்குள் இருந்த பொருள் ஒன்று வெடித்துள்ளது.

# பறக்கும் விலைவாசி பாவம் பொதுமக்கள்

## எரிவாயு, பால்மா, சிமெந்து விலைகள் நேற்று எகிறின

கொழும்பு,மே 05

சமையல் எரிவாயு, பால்மா மற்றும் சிமெந்து ஆகியவற்றின் விலைகள் நேற்று திடீரென அதிகரிக்கப்பட்டன. இதனால் மக்கள் கடும் அதிருப்தியும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 350 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 400 கிராம் எடையுடைய பால்மா வகை 63 ரூபாவாலும், ஒரு கிலோ எடையுடைய பால்மா வகை 163 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஒரு பக்கெட் சீமெந்தின் விலை 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதால் அதனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிங்கள மக்கள் இன்று வெசாக் 04

# சம்பந்தனின் அறிவிப்பை சரியாகப் பயன்படுத்துங்கள்

## அமைச்சர் ராஜித அரசுக்கு ஆலோசனை

கொழும்பு,மே 05

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஏற்படுத்திக் கொடுத்துள்ள பொன்னான சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனா 04

## சம்பந்தனைக் கூட்டிவாருங்கள்

கொழும்பு, மே 5

தேசியக் கொடியை ஏந்த வைத்ததுபோல், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் சம்பந்தனை அழைத்து வந்து அரசியல் தீர்வைக் காண்பதற்கு ரணில் உதவவேண்டும் என இலங்கை அரசு நேற்றுப் பகிரங்கமாகக் 04

# பரந்தனில் ஒருவர் வெட்டிப் படுகொலை

கிளிநொச்சி, மே 5

கிளிநொச்சி பரந்தன் கமறிக்குடாப் பகுதியில் கோரமான முறையில் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் கிளிநொச்சியில் பெரும் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் கமறிக்குடா பகுதியில் தனிமையில் வசித்து வந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் அடையாளம் தெரியாதவர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புலம் பெயர்ந்து வெளிநாடொன்றில் வசித்து விட்டு கடந்த மீளக்குடியமர்வின் போது இவர் தனது சொந்த இடத்தில் குடியமர்ந்தவர். இவர் சம்பவ தினத்தன்று இரவு 8.15 மணியளவில் அயல் வீடொன்றில் இரவு உணவு எடுத்துக் கொண்டு வீட்டுக்கு சென்றார் என்றும் இரவு 9 மணியளவில் இவர் குளறும் சத்தம் கேட்ட போது 04

# சகாவைச் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் மாய்த்தார் சிப்பாய்

## யாழ். நகரில் நேற்றுக் காலை சம்பவம்



யாழ்ப்பாணம், மே 5

யாழ். நகரப் பகுதியில் நேற்றுக்காலை சக இராணுவச் சிப்பாய் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுப் பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் மற்றொரு இராணுவச் சிப்பாய்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாகவுள்ள காவலரணை அண்மித்து நேற்றுக்காலை 6 மணிக்கு இடம்பெற்றது.

சம்பவத்தில் அநுராதபுரம் கொரவெத்பொத்தானையைச் சேர்ந்த விக்கிரமரத்ன சுமித் (வயது 28), மாத்தறையைச் சேர்ந்த 04


உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட




SINGER POWER ஜெனரேட்டர்கள்
இன்றே விரையுங்கள்

Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. 0774685771
சங்கானை 077 2208232
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
சுன்னாகம். 021 224 0555
மானிப்பாய். 021 225 5343
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
நெல்லியடி. 021 226 4937
சாவகச்சேரி 021 227 0197



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உரிமைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தீர்களா?

## கே.பியிடம் ஒரு கேள்வி



தமிழர் விடுதலைப் போராட்டத்தை நான் ஒருபோதும் காட்டிக் கொடுக்கவில்லை. அப்படிச் சொல்வது அப்பட்டமானபொய் என விடுதலைப் புலிகளின் ஆயுத முகவராகச் செயற்பட்டுவந்தவரும் தற்போது இலங்கை அரசின் பாதுகாப்பில் உள்ளவருமான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்தார். உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர்ஒளிக்கு' வழங்கிய செவ்வியிலேயே அவர் இப்படிக் கூறினார். அந்தக் கேள்விக்கு அவர் வழங்கிய பதில் இங்கே-

**கே:- தமிழ் மக்கள் மனங்களில் உள்ள முக்கியமான கேள்வியொன்றை நான் கேட்க விரும்புகிறேன். அதை பகிரங்கமாக கேட்டு உங்கள் பதிலையும் பகிரங்கப் படுத்த வேண்டியது எனது ஒரு பொறுப்பு என்றும் கருதுகின்றேன். தமிழர் விடுதலைப் போராட்டத்தை நீங்கள் இறுதி நேரத்தில் காட்டிக் கொடுத்து விட்டீர்கள்? நீங்கள் துரோகி என்பது தான் தமிழர்களின் மனநிலை. உங்களின் பதில் என்ன? நீங்கள் குற்றவாளியா, இல்லையா?**

ப:- பிரபாகரன் என்னும் எனது உயிர் நண்பனுடன் சேர்ந்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களில் நானும் ஒருவன். நானே அந்த இயக்கத்தை ஆரம்பித்து எனது வாழ்நாளில் 30 வருடத்திற்கும் மேலான காலத்தை அதற்காகச் செலவிட்டிருக்கிறேன். நான் ஒரு மரக்கொப்பில் இருந்துகொண்டு அந்தக் கொப்பை நானே வெட்டுவேனா? முதலாவதாக, ஒரு ஆத்மரீதியான உறவு அந்தப் போராளிகளுக்கும், எனக்குமிடையில் இருந்தது. இவர்கள் சொல்லும் குற்றச்சாட்டைப் பார்த்தால் நான் எனது தாயைக் காட்டிக்கொடுத்தது போல் தான் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை நான் எனது வாழ்க்கையில் சந்தித்த ஒரேயொரு உயிர் நண்பன் பிரபாகரன். அவரைக் காட்டிக் கொடுத்ததாக சொல்வது அப்பட்டமான பொய். தமிழர்களைப் பொறுத்தவரை போர் ஏன் தோற்றது என்பது புரியாத புதிராக இருக்கிறது. பிரபாகரனை அவர்கள் கடவுளாகப் பார்த்தார்கள். அரசனாகப் பார்த்தார்கள். அவர் தோற்க மாட்டார் என்று அவர்கள் மனதில் வைத்துவிட்டார்கள். திடீரென்று தோற்றுவிட்டார். இதற்கு என்ன காரணம். யாரோ பின்னணியில் இருந்து காட்டிக் கொடுத்துவிட்டார்களோ என்று சந்தேகம். இதில் புலம்பெயர் சமூகத்தில் இருக்கும் ஒருசில குழப்பவாதிகள் கே.பி. தான் இதற்கு காரணமென இலகுவாகக் கூறிவிட்டனர். அதனை அப்பாவி மக்களின் ஒருசிலரும் நம்பி கே.பி. தான் காட்டிக்கொடுத்துவிட்டாரோ என்று நம்புகின்றனர். நான் மலேசியாவில் ஒரு அறைக்குள் தனியே இருந்தேன். பிரபாகரன் இங்கு எத்தனை தளபதிகள், எத்தனை ஆயுதங்கள் எத்தனை தாங்கிகளுடன் நின்றிருந்தார். நான் மலேசியாவிலிருந்து காட்டிகொடுத்து அவர் போரில் தோற்றார் என்பது நிஜம் அல்லவே! யதார்த்தமாக நீங்கள் சிந்தியுங்கள். கருணா வெளியேறினார். கருணா வெளியேறியவுடன் பிரபாகரன் தோற்றாரா? கருணாவுக்குத் தெரியாத விடயங்கள் எனக்குத் தெரிந்ததா? இல்லையே... கருணா தலைவரின் பக்கத்தில் இருந்தவர். அவர் விலகும்போது அவரால் பிரபாகரனை அழிக்க முடிந்ததா? இல்லையே. இதே குற்றச்சாட்டை முன்வைக்கும் அரசியல்வாதிகள் தான், பிரபாகரன் மீண்டும் வருவார் என்கின்றனர். ஒரு பக்கத்தில் கே.பி. காட்டிக்கொடுத்துதான் பிரபாகரன் அழிந்துவிட்டார் என்றும் கூறும் அதே ஆட்கள்தான் மறுபுறம் பிரபாகரன் மீண்டும்வருவார், மீண்டும்போர் வெடிக்கும் என்று கூறுகின்றனர். இவர்கள் உண்மையைப் பேசுவதில்லை. அதுதான் முக்கியமான காரணமேயொழிய வேறொன்றுமில்லை. இதை நினைக்கும் போதே மனதுக்கு கவலையாக இருக்கிறது. நான் நேரத்துக்கு நேரம் ஒரு கதை பேசி இருப்பவன் அல்ல. எனது மக்களுக்காக 35 வருட காலமாக வேலை செய்துகொண்டிருப்பவன். இவர்கள் போல் நேரத்துக்கு நேரம் பேசும் மனிதன் அல்ல. அப்படியான சூழலில் நான் வளரவும் இல்லை. அரசியல்வாதிகள் போல் பொய்கூறி நான் மக்களிடம் செல்லவும் இல்லை. இது ஒரு அப்பட்டமான பொய்..

**கே:- போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தீர்களா என்று நான் கேட்டபோது நீங்கள் பதிலளிக்கையில் உங்களது கண்கள் கலங்குவதைக் கண்டேன். அந்த கேள்விக்கு பதிலளிக்கும் போது ஏன் அந்த உணர்ச்சிபூர்வம்?**

ப:- (மீண்டும் கண்கலங்குகிறார்) மனித வாழ்க்கை அற்புதமானது. எனது வாழ்க்கையை எனது மக்களுக்காக அர்ப்பணித்துள்ளேன். ஆனால், இவர்கள் கூறும் அப்பட்டமான குற்றச்சாட்டு. எனது நட்பையே வியாபாரமாக பார்க்கிறது. அது வியாபாரம் அல்ல.... அது அரசியல் அல்ல... அவற்றிற்கும் அப்பாற்பட்டது. ஆத்மரீதியான நட்பு. அதனை இவர்கள் கொச்சைப் படுத்துகின்றனர். (நா தழுதழுக்கிறது) இதனை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**கே:- பிரபாகரன் உங்கள் நல்ல நண்பன் என்கிறீர்கள். திரும்பி வரமாட்டார் என்கிறீர்கள். அவரின் மறைவு தமிழர்களின் அரசியல் அல்லது அரசியல் போராட்டத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதா?**

ப:- அந்த பிரபாகரனின் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அது உண்மை. காரணம் இது அரசியல் போராட்டம் மட்டுமல்ல. அவர் உருவாக்கிய சமூக கட்டமைப்பு பல சீர்குலைந்துவிட்டன. இன்று பார்த்தீர்களானால் யாழ்ப்பாணத்தில் அல்லது வன்னியில் எத்தனையோ சமூக விரோத செயல்கள் மலிந்து போயுள்ளன. ஆனால், அவர் இருக்கும்போது அவை நடக்கவில்லை. தமிழ் மக்களுக்குரிய சரியான தலைமைத்துவம் இல்லாமல் போயிருக்கிறது. அது கவலைக்குரிய விடயம். இதனை நிவர்த்தி செய்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

**கே:- மக்கள் சேவைக்காக உங்களை அர்ப்பணித்துள்ளதாகக் கூறுகிறீர்கள். அந்தச் சேவையை ஒருபடி மேலே சென்று செய்வதற்காக அரசியலுக்கு வரும் நோக்கம் எதுவும் இருக்கிறதா?**

ப:- என்னைப் பொறுத்தவரை நான் இப்போது செய்வது மனிதாபிமான சேவை. அரசியலில் நான் இறங்கும் போது இவை பாதிக்கப்படும். இது வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கப்படும். என்னைப் பொறுத்தவரை அரசியலில் நான் நாட்டமில்லாதவன். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதே எனது இலட்சியம். ஆனால், இந்த மக்களைத் தொடர்ந்து தமிழ் அரசியல் தலைமைகளும், தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்களும் ஏமாற்றி, வாட்டி வதைப்பார்களானால் நான் சிலதை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவேன்.

**கே:- நீங்கள் நேரடியாக அரசியலுக்கு வரப் போகின்றீர்கள் என நான் எடுத்துக் கொள்ளலாமா?**

ப:- அது நேரடியாகவா, மறைமுகமாகவா என்பதை முடிவாக என்னால் சொல்ல முடியாது. ஆனால், இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய ஒரு கடப்பாடு எனக்குள்ளது. அது அரசியலில் இறங்கித்தான் செய்ய வேண்டுமென்றால் - வேறு வழியில்லை. இறங்கித்தான் ஆக வேண்டும். மக்களைத் தொடர்ச்சியாக இப்படியான அவலத்தில் வைத்திருக்க முடியாது.

**கே:- தேவைப்பட்டால் நீங்கள் அரசியலுக்கு வருவீர்கள் என்கிறீர்கள். அது வட மாகாணசபைத் தேர்தலாக இருக்குமா?**

ப:- ( சத்தமாகச் சிரிக்கிறார்) நீங்கள் பெரிய குண்டையே தூக்கிப் போடுகின்றீர்கள். அப்படி எதனையும் இதுவரை என் மனதில் யோசிக்கவில்லை. இன்று வரை இல்லை. ஆனால், எனது மக்களைக் காப்பாற்ற வேண்டிய தேவை வந்தால், தொடர்ந்தும் எமது மக்களைத் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றினால், அதுதான் ஒரே வழியென்றால் நான் மறு பரிசீலனை செய்துதான் ஆகவேண்டும்.

## மாகாண மட்ட பயிற்சி பரீட்சை ஒத்திவைப்பு


சித்திரை பௌர்ணமி மற்றும் வெசாக் தினமான இன்று சனிக்கிழமை இடம்பெற ஏற்பாடாகியிருந்த தரம் 5 மாணவர்களுக்கான மாகாண மட்ட பயிற்சிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று தரம் ஐந்து மாணவர்களுக்கான இந்த வருடத்துக்கான முதலாவது பயிற்சிப் பரீட்சை நடத்துவதுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சித்திரைப் பௌர்ணமி தினத்தில் பிதிர்க்கடனை நிறைவேற்றவுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் இந்த பயிற்சிப் பரீட்சையில் தோற்ற முடியாத நிலை இருந்தது.

இந்த நிலையில் இலங்கை ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண ஆளுனருக்கு நிலைமையை தெளிவுபடுத்தி பயிற்சி பரீட்சையை ஒத்திவைக்குமாறு அழுத்தங்களை அடுத்தே பயிற்சிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாக அந்த சங்கம் தெரிவித்தது. (த-03)

## தண்ணீர்ப் பந்தல் தீக்கிரை



யாழ்ப்பாணம், மே 5

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றத்தினால் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் பந்தல் நேற்றுமுன்தினம் இரவு விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் தேர்த் திருவிழா நடைபெற்றது. அதனையொட்டி பக்தர்களுக்கு தாக சாந்தி வழங்குவதற்காக இந்தத் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு நேற்றுமுன்தினம் நள்ளிரவு இனந்தெரியாதோர் தீ வைத்துள்ளனர். அதனால் அது எரிந்து முற்றாக நாசமானது.

இதன்பின்னர் நேற்று அதிகாலை உடனடியாக அந்த இடத்தில் மீண்டும் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டு அடியார்களுக்கு தாக சாந்தி வழங்கப்பட்டது. (த-17)

## அதிக குதிரை வலுக் கொண்ட படகில் பயணித்தவருக்குச் சிறை

வவுனியா, மே 5

அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடிய குதிரை வலுக் கொண்ட இயந்திரப் படகின் மூலம் மன்னார்க் கடலில் பயணம் செய்த நபருக்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் மூன்றுமாத கடூழியச் சிறைத் தண்டனையும் 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது வ்வுனியா மேல் நீதிமன்றம்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருந்த 2007 ஆம் ஆண்டு கலப்பகுதியில் 10 குதிரை வலுவுக்கு உட்பட்ட இயந்திரப் படகு மூலமே பயணிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதற்குக் கூடிய வலுவுடைய படகில் பயணித்த குற்றத்துக்காக 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி மில்றோய் நியூமன் றோய் அப்புகாமி என்பவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின் வவுனியா மேல் நிதிமன்றத்தில் இவருக்கு எதிரான வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை நேற்று விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் அவருக்கு மூன்று மாத கால கடூழியச் சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் அறிவிட்டதுடன் தண்டப்பணம் செலுத்தத் தவறின் மேலும் மூன்று மாத கால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

அவசரகாலச் சட்டம் கடந்த 2010 ஆம் ஆண்டு நீக்கப்பட்டாலும் அது நடைமுறையிலிருந்த காலத்தில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டதனால் அந்தக் கால அளவையும் கருத்தில் கொண்டே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-16)

### உருக்குலைந்த நிலையில் மூன்று சடலங்கள்

கொழும்பு,மே 05

வெல்லம்பிட்டிய நீர் கொழும்பு மற்றும் எத்திமலை ஆகிய பகுதிகளில் இனந்தெரியாத ஆண்களின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மூன்று சடலங்களும் 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களுடையதெனத் தெரிவிக்கப்படுவதுடன் அந்தந்த பகுதி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மூன்று சடலங்களும் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி நியமனத்துக்கு 3 ஆயிரம் விண்ணப்பங்கள்

## இரட்டைப் பட்டத்துடன் ஆயிரத்து 500 பேர்

யாழ்ப்பாணம், மே 5

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்துக்காக யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரம் பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் ஆயிரத்து 500க்கு மேற்பட்டவர்கள் இரட்டைப் பட்டங்களைப் பெற்றவர்கள் என யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த விண்ணப்பத் திகதி முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், இதுவரையில் நியமனங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் நாடளாவிய ரீதியில் பட்டதாரிப் பயிலுநர் நியமனத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்த விண்ணப்பங்கள் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்களுக்கு அனுப்பப் பட்டன.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரம் பட்டதாரிகள், பயிலுநர் நியமனத்துக்காக விண் ணப்பித்துள்ளனர். இவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இரண்டு பட்டங்களைப் பெற்றவர்களாவர்.

இந்த விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதித் திகதி கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்துள்ளது. இருப்பினும் இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்கான நேர்முகத் தேர்வுகள் குறித்து எதுவிதமான தகவல்களும் இது வரையிலும் தெரிவிக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-5)



யாழ். ஆஸ்பத்திரி வீதியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பாதசாரிகள் குறியீட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ம-3)

# குடாநாட்டு வங்கிகளில் முண்டியடிக்கும் மக்கள்

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததே காரணம்

யாழ்ப்பாணம், மே 5

***டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதால், வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவுக்கு மாற்றுவதற்காக குடாநாட்டு வங்கிகளில் மக்கள் முண்டியடித்து வருகின்றனர்.***

கடந்த ஒரு வார காலமாக யாழ்ப்பாணத்தில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் பிரதான செயற்பாடாக வெளிநாட்டு நாணய பரிவர்த்தனையே இடம் பெறுகின்றது என்று வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக குறித்த வங்கி அதிகாரி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்து மக்கள், புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமது உறவினர்கள் அனுப்பும் வெளிநாட்டு நாணயங்களை உடனடியாக வங்கிகளில் மாற்றாது சேமித்து வந்துள்ளனர்.

ரூபாவின் பெறுமதி டொலருக்கு எதிராக வீழ்ச்சி அடையும் காலங்களில் இத்தகைய, வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவதால் வழமையைவிடவும் அதிக இலாபம் கிடைக்கும். இதற்காகவே அவர்கள் வெளிநாட்டு நாணயங்களை உடனடியாக மாற்றுவது இல்லை.

தற்போது ஒரு அமெரிக்க டொலர் 132 ரூபாவரை வங்கிகளால் வாங்கப்படும் நிலையில் தம்மிடம் உள்ள வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவதற்கு அதிக எண்ணிக்கையான மக்கள் தினமும் வங்கிகளுக்கு வருகிறார்கள். இதன் மூலம் அவர்களுக்கு முன்னரைக் காட்டிலும் பெறுமதி கூடிய பணத்தொகை கிடைக்கின்றது.

வங்கிகளுக்கும் குறித்த தரகு பணம் கிடைப்பதால் வங்கிகளுக்கும் மக்களுக்கும் லாபம் ஏற்பட்டாலும் உண்மையில் இத்தகைய செயற்பாட்டால் எதிர்காலத்தில் பணவீக்கம் ஏற்படுவதற்கான சாத்தியத்தையும் மறுக்க முடியாது.

இதேவேளை, ரூபாவின் பெறுமதி இன்னமும் வீழ்ச்சியடையும் என்று எதிர்வு கூறப்படுவதால் எதிர்வரும் வாரங்களில் வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்- என்று அவர் தெரிவித்தார். (ங)

# சிறைச்சாலைக் கைதிகளுக்கு சுயதொழில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு கைத்தொழில் கல்வி ஒன்றை மேம்படுத்துவதற்காக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் செனத் பண்டாரா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.சிறைச்சாலையில் தற்போது ஆண், பெண் என்று இரு பாலாரும் உட்பட 300 கைதிகள் உள்ளனர். இவர்களை அபிவிருத்தி அடையச் செய்யும் நோக்குடன் சுயதொழில் ஆற்றலை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி உதவியை அந்த அமைச்சே பொறுப்பேற்கிறது. முதற்கட்டமாக இந்தக் கைதிகளுக்கு பனை ஓலை கைப்பணி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

இதற்கான பயிற்றுநர்கள் கொழும்பிலிருந்து வரவழைக்கப்படவுள்ளனர். சிறைக்குள் இருக்கும் கைதிகள் தமது வழக்கு தொடர்பாகவும், உறவுகள் நிலைமைபற்றியும் சிந்தித்துக் கொண்டிருப்பதால் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

சிறைக்குள் இருக்கும் வேளைகளில் தமது காலத்தை வீணாக்காது இவ்வாறான சிறு கைத்தொழிலைக் கற்றுக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த நிலையை எட்ட முடியும் என்னும் நோக்கில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. - என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

### வாய்கொடுத்து வாங்கினார் அடி

நான்கு பிள்ளைகளின் தாயாரான 35 வயதுப் பெண் ஒருவரை வீதியில் வழிமறித்துத் தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்திய மூன்று பிள்ளைகளின் தந்தையான 30 வயதுடைய ஒருவரை கோப்பாய்ப் பொலிஸார் நையப்புடைத்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இருபாலை பழைய வீதியில் குறித்த பெண் சென்று கொண்டிருந்தபோது மூன்று பிள்ளைகளின் தந்தையான பிரஸ்தாப நபர், தன்னைத் திருமணம் செய்யுமாறு கூறி வற்புறுத்தியதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸார் குறித்த நபரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து நையப்புடைத்து அனுப்பியுள்ளனர். (10-03)

# போக்குவரத்துச் சபையால் வடக்குக்கு ஏழு புதிய பஸ்கள்

## இன்று இரண்டு கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 5

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகம் ஏழு புதிய பஸ்களை வடபிராந்திய சாலைக்கு வழங்கவுள்ளதாக சாலையின் பிரதம முகாமையாளர் எஸ்.அஸ்ஹர் தெரிவித்தார்.

அதில் இரண்டு பஸ்கள் இன்று எம்மிடம் கையளிக்கப்படவுள்ளன என்று பிராந்திய பிரதம முகாமையாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வவுனியா ஆகிய இரண்டு சாலைகளுக்கும் அந்த இரண்டு பஸ்களும் கையளிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப் படும்.

**யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, வவுனியா, கிளிநொச்சி ஆகிய ஐந்து சாலைகளுக்குக் கையளிக்கப்பட்டு அவை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.**

எதிர் வரும் 8 ஆம் திகதி ஏனைய ஐந்து பஸ்களும் எம்மிடம் கையளிக்கப்படவுள்ளன.

அவை யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, வவுனியா, கிளிநொச்சி ஆகிய ஐந்து சாலைகளுக்குக் கையளிக்கப்பட்டு அவை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

போக்குவரத்து சபை தலைமையகத்தால் வழங்கப்படும் இந்த ஏழு பஸ்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எம்மிடம் வழங்கவுள்ளார் என்று மேலும் தெரிவித்தார். (ம-3)

# நிகழ்வுகள் இன்று

**இரத்ததானம்**

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலை கைதிகள் முற்பகல் 10 மணிக்கு இரத்ததானம் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் பவாணி, ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ம-13)

**நூல் அறிமுகம்**

அநாதரட்சகனின் நிமிர்வு சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகம் பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வீதி நாவலர் கலாசார மண்டபத்தில் கலாநிதி செ.நாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**ஆண்டு நிறைவு**

கொடிகாமம் வடக்கு ஐயனார் சமூக முன்னெடுத்தல் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவு விழா பிற்பகல் 2 மணிக்கு ஐயனார் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது. திருமதி யூட்சுரேஸ்குமார் நகுலேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலாளர் செல்வி ந.ரஞ்சனா கலந்து கொள்வார். (ம-14)

**பூர்ணிமா தினம்**

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பான உள்ள சத்தியசாயி சேவா நிலையத்தின் பூர்ணிமா தினம் காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி சிவகௌரி சிவகுருநாதன் விசேட சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-14)

**கௌரவிப்பு**

யாழ்.கொட்டடி சனசமூக நிலையம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழாவும் சான்றோர் கௌரவிப்பும் மாலை 6.30 மணிக்கு நிலைய கலையரங்கில் நடைபெறவுள்ளன. நிலையத் தலைவர் பொ.சிறீராஜபுலேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனாநந்தா கலந்துகொள்வார். (ம-14)

# பிறந்த குழந்தையை புதைத்த தாய் பொலிஸாரால் கைது

*யாழ்ப்பாணம், மே 5*

*பிறந்த சிசுவை நிலத்தில் புதைத்த இளம் தாயொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*பளைப் பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*3வருடங்களுக்கு முன்னர் கணவனை இழந்த பெண்ணே, கடந்த 30 ஆம் திகதி குழந்தையைப் பிரசவித்துள்ளார். பிறந்தவுடனேயே குழந்தையை மண்ணில் புதைத்துள்ளார். பின்னர் விலங்குகளால் குறித்த சிசுவின் உடல் வெளியே இழுக்கப்பட்டதைத் தொடர்ந்து [illegible] தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.*

*இதனடிப்படையில் மேற்படி குழந்தையைப் புதைத்த தாயை [illegible] நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-5)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி சிலை உடைப்பு விவகாரம் இந்திய நாடாளுமன்றில் கேள்வி

புதுடில்லி,மே5

மட்டக்களப்பில் மகாத்மா காந்தி சிலை சேதமாக்கப்பட்ட விவகாரம் குறித்து இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் காந்தி சிலை உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இந்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று மேலவை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இதற்கு நேற்று முன் தினம் இந்தியாவின் வெளிவிவகார இணை அமைச்சர் அகமட் எழுத்து மூலம் பதிலளித்துள்ளார்.

**இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், சேதப்படுத்தப்பட்ட சிலை திருத்தியமைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.**

காந்தி சிலை உடைக்கப்பட்ட சம்பவம் பற்றி அறிந்ததும், அது தொடர்பாக இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக இலங்கை அரசுடனும், கிழக்கு மாகாண சபையுடனும் இந்தியா தொடர்பு கொண்டு, இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், சிலையைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டது.

இதையடுத்து இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், சேதப்படுத்தப்பட்ட சிலை திருத்தியமைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் இலங்கையில் மகாத்மா காந்தி சிலை, சேதமாக்கப்பட்ட சம்பவங்கள் ஏதும் இடம் பெறவில்லை என்று இந்தியாவின் வெளிவிவகார இணை அமைச்சர் அகமட் தனது எழுத்து மூலமான பதிலில் கூறியுள்ளார். (த)

# பரந்தனில் ஒருவர் வெட்டிப் படுகொலை

01↘ அயலவர்கள் ஓடிச்சென்று பார்த்த போது குறித்த நபர் சடலமாக காணப்பட்டார். இதையடுத்துப் பொலிஸாருக்கும் கிராம அலுவலருக்கும் தகவல் வழங்கப்பட்டது சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்துக்குக் கிளிநொச்சி மாவட்டப் பதில் நீதிவான் எஸ்.விஜயராணி சென்று விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மகேந்திரராஜா என்பவரே உயிரிழந்துள்ளார். (க-6)

# சம்பந்தனைக் கூட்டிவாருங்கள்

01↘ கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன், தேசியக் கொடியை சம்பந்தன் கையிலேந்தியதையிட்டுத் தாம் சந்தோஷமடைகின்றோம் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, நடந்து முடிந்த மேதினக் கூட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அமைச்சரவையின் பதில் பேச்சாளரும், ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது மேதினக் கூட்டங்கள் சாதகமாக அமைந்தன. அரசின் மேதினக் கூட்டங்களில் சுமார் 10 லட்சம் பேர் வரை கலந்துகொண்டனர்.

அரசின் பங்காளிக்கட்சிகளும் எம்முடன் இணைந்து மேதினத்தை அனுஷ்டித்தன. கொழும்புக்கு வெளியிலும் மேதினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலும், மலையகத்தில் தொண்டமான் தலைமையிலும் நடத்தப்பட்டன.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை நடத்தியது. இதனையிட்டு நாம் சந்தோஷமடைகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள ஜனநாயக நிலைமைகளை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டிய ஐ.தே.கவுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முன்னர் யாழ்ப்பாணத்திற்குச் சென்று கூட்டங்களை நடத்துவதற்குத் தயங்கினர். ஆனால், யாழ்ப்பாணத்தை சுதந்திரமடையச் செய்து நாம் அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டினோம். இந்நிலையில், எதிர்க்கட்சியினர் அங்கு மேதினத்தை சுதந்திரமான முறையில் நடத்தி நாட்டின் சுமுகமான நிலையை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.

### நாடாளுமன்றத் தெரிவுக்குழு

யாழில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சிங்கக்கொடியைக் கையில் ஏந்தியதையிட்டு நாம் சந்தோஷமடைகின்றோம். நாடாளுமன்றில் மூத்த உறுப்பினரும் பழுத்த அரசியல்வாதியுமான சம்பந்தனின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. அவர் அரசுக்குச் சாதகமான சமிக்ஞையைக் காட்டியுள்ளார்.

சம்பந்தனைத் தேசியக் கொடியை ஏந்த வைத்தது போல், அவரை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் ரணில் விக்கிரமசிங்க அழைத்துவந்து அரசியல் தீர்வைக் காண்பதற்கு உதவ வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கவில்லை என ரணில் கூறுகின்றார். ஆனால், அது குறித்து நாம் அனைத்து தரப்பினருக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு கொண்டுவருவதற்கு ரவூப் ஹக்கீமும் பேச்சுகளில் ஈடுபட முன்வந்துள்ளார் - எனக் குறிப்பிட்டார் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன.

# தமிழர் தீர்வுக்கு இந்தியாவின் உறுதியான ஆதரவு அவசியம்

01↘ ஒன்றை அவர் பிரதமரிடம் கையளித்தார். கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்க வைப்பதற்கு இந்தியா கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் கூறியதாக சுஷ்மா மன்மோகனிடம் மேலும் கூறினார்.

இந்தியக் குழுவில் பங்குபற்றியிருந்த ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பிரதமர் மன்மோகன் சிங் இந்தச் சந்திப்பின்போது தனித்தனியே பேசினார். அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அவர் கவனமாக செவிமடுத்தார்.

இந்தியக்குழுவின் இலங்கைப் பயணம் பொருத்தமான நேரத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தருணத்தில் இடம்பெற்றுள்ளது என பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்ததாக இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர் மாணிக்கதாகூர் கூறினார். இந்தியா இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றது என்றும் தமிழ் மக்களுக்கு உறுதியான ஆதரவை இந்திய அரசு வழங்கும் என்றும் மன்மோகன் கூறியதாக தாகூர் சொன்னார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அவசியத்தை பிரதமர் மன்மோகன் சிங்குடனான இந்தச் சந்திப்பின் போது சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா ''இது மிகப் பயனுள்ள காத்திரமான பயணம். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இந்தியா கொண்டுள்ள கவலையை பகிர்ந்து கொள்வதற்கான பயனுள்ள பணிகளை இந்தப் பயணம் செய்துள்ளது.'' என்றார்.

''அவர்களுடைய இலங்கைப் பயணம் குறித்த அறிக்கையில் என்ன உள்ளது என்பதையும் அவர்களுக்கு ஏற்பட்ட மனப்பதிவுகள் குறித்தும் என்ன செய்யப்பட வேண்டும் என்பது பற்றிய அவர்களுடைய கருத்துக்களை நாங்கள் அவர்களது வாயால் கேட்டோம்.'' என்றும் கிருஸ்ணா கூறினார்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில், பொது மக்கள் நடமாடும் இடங்களில் இராணுவ அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்றும் பொலிஸ் பிரசன்னத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பின் போது இந்தியக் குழுவினர் மன்மோகனிடம் கூறினார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. வடக்கில் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் தேர்தலை நடத்தவும் இந்திய அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று மன்மோகன் சிங்கிடம் சமர்ப்பித்த அறிக்கையில் இந்தியக் குழு வலியுறுத்தியுள்ளது.

(உ-த)

# பறக்கும் விலைவாசி பாவம் பொதுமக்கள்

01↘ தினத்தைக் கொண்டாட இருக்கின்ற நிலையில் இவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் அம்மக்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். அரசு தமக்கு வழங்கும் வெசாக் பரிசு இதுதானா என்று கேள்வி எழுப்பியுள்ளனர். வெசாக் தினத்தையொட்டி அரசு தமக்கு ஏதாவது சலுகை செய்யும் என்று எதிர்பார்த்திருந்த எமக்கு இந்த விலை அதிகரிப்பு கடும் ஏமாற்றத்தையும் கவலையையும் தந்துள்ளது என அவர்கள் கூறிப் புலம்புகின்றனர்.

# சகாவைச் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் மாய்த்தார் சிப்பாய்

01↘ இலங்கம் தேவாலாகே நலிங்க எதிரிசிங்க (வயது 26) ஆகிய இரு கோப்ரல்களுமே மரணமானவர்களாவர்.

இருவருக்கும் இடையே நீண்டகாலமாக இருந்து வந்த பகையே இதற்குக் காரணம் என ஆரம்ப விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்தில் கடைத் தொகுதி ஒன்றின் மேல் மாடியில் இருந்து இரும்புக்கம்பியினாலான ஏணி ஒன்றின் வழியாக சுமித் என்ற சிப்பாய் சிவில் உடையில் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார். கீழே நின்றிருந்த எதிரிசிங்க என்பவர் சுமித்தை நோக்கி சரமாரியாகச் சுட்டார். இதன்போது சுமித் அந்த இரும்பு ஏணியில் சரிந்தவாறே மரணமானார். அதன் பின்னர் இராணுவ உடையில் நின்ற எதிரிசிங்க தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

சுமார் 12 இற்கும் மேற்பட்ட ரவைகளின் வெற்றுக் கோதுகள் சம்பவ இடத்தில் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. சுட்டுக்கொல்லப்பட்ட சுமித்தின் சடலம் ஏணியில் தொங்கிய நிலையில் காணப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அங்கு சென்ற யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா மரணவிசாரணை மேற்கொண்டார். சம்பவ இடத்துக்கு சட்டவைத்திய அதிகாரி எஸ்.சிவரூபனும் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினார். நீதிவான் உத்தரவுக் கமைய சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை -

கடந்த மாதமும் இதே போன்ற ஒரு சம்பவம் தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்றது. இரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் இருவரை சுட்டுக்கொன்று விட்டுத் தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்

# சம்பந்தனின் அறிவிப்பை சரியாகப் பயன்படுத்துங்கள்

01↘ ரட்ன ஆலோசனை வழங்கியுள்ளார். மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய மேதினக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் மிக்க அரசியல் தீர்வை அரசு வழங்குமானால் அதற்கு ஒத்துழைக்கக் கூட்டமைப்பு தயார் எனத் தெரிவித்திருந்தார்.அவர் தெரிவித்த கருத்துக்கள் குறித்துப் பேசியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் முக்கியத்தும் வாய்ந்தவையாகும். அதாவது தீர்வுகாணப்படாமல் இருக்கின்ற தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பொன்னான சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது என எம்மால் கூற முடியும்.

அரசுடன் பேச்சு நடத்துவதுடன் தீர்வுச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என சம்பந்தன் கூறியுள்ளார். இது சிறந்த அடையாளமாக காணப்படுகின்றது. ஏதோ ஒருவகையில் அதிகாரம் பகிரப்படவேண்டியது அவசியமாகும். அந்த வகையில் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும் என்ற கூட்ட மைப்பின் கோரிக்கை தொடர்பிலும் பேச்சு நடத்த முடியும். கிழக்கு மாகாண முதல்வருடன் கூட்டமைப்பு நடத்தும் பேச்சுக்களில் இந்த விடயம் குறித்து ஆராயப்படலாம்.

எனவே குறிப்பாக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் தீர்வுத் திட்டம் அவசியமாகும். இந்தியாவும் இதனையே விரும்புகின்றது.அண்மையில் இலங்கை வந்த இந்தியக் குழுவின் தலைவியும் இந்திய எதிர்க்கட்சி தலைவியுமான சுஷ்மா சுவராஜும் 13 ஆவது திருத்தம் குறித்து பேசியிருந்தார். உண்மையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நாட்டின் பெரும்பாலான மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர். அரசினுள் பெரும்பாலான ஆதரவு காணப்படுகின்றது.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து அனைத்துக் கட்சிகளுடனும் பேசித் தீர்வுத் திட்டம் ஒன்று எட்டப்படுமாயின் அதனை நடைமுறைப்படுத்த முடியும். பெரும்பான்மையான தரப்புக்கள் விரும்பினால் ஒரு சில கட்சிகளின் எதிர்ப்புக் குறித்து நாம் கவலையடையவேண்டியதில்லை. எனவே, அரசினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவ்க்குழுவில் இணைந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கின்றேன் -என்றார் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த செல்நெறியை நாடுவது எப்போது ?

பத்து நாள்கள் இடைவெளியில் மீண்டும் மூன்று பிரதான பாவனைப் பொருள்களின் விலைகளை அரசாங்கம் உயர்த்தி உள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இருபத்தி நான்காம் திகதி, நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையான மக்களின் உணவுப் பொருள்களில் ஒன்றான கோதுமை மாவின் விலையை கிலோ ஒன்றுக்கு 8 ரூபாவால் உயர்த்தியது அரசு. இரண்டு நாள்களின் பின்னர் வழமைப் பிரகாரம் பாணின் விலையும் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாவால் உயர்ந்தது.

இப்போது, பால்மா வகைகளின் இறக்குமதிக் கட்டணம் கிலோ ஒன்றுக்கு 92 ரூபாவால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. (குழந்தைகள் பால்மாவுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது)

அதுமட்டுமன்றி, எரி வாயுவின் (சிலிண்டர் ஒன்றின்) விலை 350 ரூபாவால் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அவை இரண்டோடும் சிமெந்து பைக்கற் ஒன்றின் விலையும் 70 ரூபாவால் நேற்று நள்ளிரவு முதல் விலை உயர்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உலகச் சந்தையில் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் உயரும் போது, உள்நாட்டில் விலைகள் உயர்த்தப்படுவது தவிர்க்கமுடியாதது என்று காரணம் காட்டி, இங்கும் விலைகளை உயர்த்துவது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வழமையான கிரந்தம்.

இலங்கை ரூபாவின் பெறுமதி அடிக்கடி வீழ்ச்சி கண்டு வருகிறது. சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர், கடந்த (ஏப்ரல்) மாதம் முதல் வாரத்தில், நாட்டின் பணவீக்கம் 5.5 சதவீதம் உயர்ந்ததால், ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சி கண்டது. அதனால் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் உயர்வதைத் தடுக்கமுடியாது. அதன் பிரகாரம் இறக்குமதிப் பொருள்கள் பலவற்றின் விலை உயர்வுகளைத் தடுக்க முடியாது என்பது ஒருவகையில் இந்த நாட்டின் நிரந்தரமான பொருளியல் வாய்ப்பாடாகிவிட்டது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு அடிக்கடி வீழ்ச்சி கண்டு வருகிறது. இதனை ஒரே மட்டத்தில் வைத்திருப்பது என்பது இலங்கை அரசின் கைகளை மீறிவிட்ட நிலைக்கு வந்து விட்டது. இந்த மாதம் முதலாம் திகதி பணவீக்கம் 6.1 சதவீதமாக உயர்ந்துவிட்டது.

ஆகையால், அதனையொட்டிய விலை உயர்வுகளும் தவிர்க்க முடியாதவை என்பது எவராலும் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒன்றே. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 8.8 லிருந்து 8.2 ஆக இறங்கு முகமாகி விட்டதால், அதன் பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கான, தவிர்ப்பதற்கான அரசின் அணுகுமுறைகள், வழிமுறைகள் பொது மக்களின் நாளாந்த வாழ்க்கைச் செலவை உயர்த்தும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கட்டி எழுப்புவது எங்ஙனம் என்று தெரியாது, அரசு திக்குமுக்காடும் நிலைமை தோன்றியுள்ளது. அதனைத் தவிர்ப்பதற்கான, தடுப்பதற்கான செயல்வடிவங்களை இனம் காண்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

கால வர்த்தமானங்களுக்கு ஏற்ப, நாடுகளின் பொருளியல் கொள்கைகள் மாறுவது இயல்பே. எழுபதுகளின் பின்னர் அப்போதைய அரசுகளின் மூடிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் விவசாயம் மற்றும் பல்துறைசார் உற்பத்திகளை ஊக்குவிப்பதாக அமைந்தது. எனினும், பொருளியல் வளர்ச்சி கண்ட நாடுகளிடமிருந்து உதவித் திட்டங்கள் மற்றும் கடன் வசதிகளைப் பெறுவதற்காக, மூடிய பொருளாதாரத்துடன் திறந்த பொருளாதாரக் கொள்கைகளையும் சந்திரிகா அரசு அறிமுகப்படுத்தியதாக ஞாபகம். அதுவே இன்னமும் தொடர்கிறது.

ஆயினும் நாட்டின் பொருளாதார நிலை, இன்னமும் மக்களின் வாழ்க்கை நிலையை வேண்டிய அளவுக்கு, சராசரி அளவுக்கேனும் உயர்த்தக்கூடிய நிலையை எட்டவில்லை என்பதே யதார்த்தம்.

அதற்கான காரணம் முப்பது வருடப் போர் என்று அமைச்சர்களும் அவர்களின் (அரச) அதிகாரிகளும் மேடைக்கு மேடை முழங்கி, பொருளியல் கட்டமைப்பின் குறைபாடுகளையும், தோல்விகளையும் மூடி மறைத்துத் தென்னிலங்கை மக்களுக்குச் 'சொர்க்கம்' காட்டி வருகிறார்கள்.!

கலப்புப் பொருளாதாரத்தை முறையாகக் கைக்கொள்ளும் இந்தியா போன்ற நாடுகள் தமது பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கை நிலையையும் உயர்த்தி உள்ளன. அதனை இலங்கை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வைக் கண்டு, அதாவது தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளை பிறழ்வு இன்றி வழங்கி, அவர்களின் பூர்வீக வாழ்விடங்களைச் சூறையாடுவதை நிறுத்தி -

நாட்டின் எல்லாப் பகுதிகளையும் சமமட்டத்தில், சமாந்தரமாக, வளர்ச்சி காண வழி வகுத்தால், அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கினால்-

பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற அப்பழுக்கற்ற, பாகுபாடற்ற நோக்குடன், இலக்குடன், இதய சுத்தியுடன் செயற்பட்டால்-

அதற்காக மனதார உழைத்தால் -

நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையையும் தரத்தையும் உயர்த்தலாம்.

அந்தச் செல்நெறியில் இப்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படாவிடில், தென்னிலங்கை மக்களிடமிருந்து ஒரு பொருளாதாரப் புரட்சி நாடிய வேட்கை எழுவதனைத் தவிர்க்க முடியாது போகும். வெறுமனே காரணங்களைக் காட்டி அவர்களை நீண்ட காலத்துக்கு ஏமாற்ற முடியாது என்றால் அது தப்பன்று.

# வடக்கு, கிழக்கு முஸ்லிமுக்கு இந்திய உதவிகள் அவசியம்

### விடயம் மன்மோகனின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மே. 5

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கும் இந்திய உதவிகள் அவசியம். முஸ்லிம் சமூகத்தை தமிழ்த் தேசியத்தின் ஒரு பகுதியாக இனங்கண்டு கொள்ள வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழு ஊடாகவே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் தலைவர் எஸ்.ஏ.சீ.முபீன் இந்த விடயத்தை கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இந்தியப் பிரதமருக்காக இது குறித்து அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண முஸ்லிம்களாகிய நாங்கள் நாடாளுமன்றத்தில் முறையான பிரதிநிதித்துவமின்றி கடந்த 30 வருடங்களாக அரசியல் அநாதைகளாக வாழ்ந்து வருகிறோம்.

சொந்த இடங்களுக்குத் திரும்பியபோது எமது மக்களின் சொந்த வீடுகள் அனைத்தும் வாழ்வதற்குப் பொருத்தமற்றதாகக் காணப்பட்டன.

எனவே இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளமைப்பதற்காக இந்தியா உதவி வருகிறது. அந்த உதவிகள் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்- என்றுள்ளது. (ம-3)

# அரசியல்வாதிகள் போன்று செயற்படும் அரச அதிகாரிகள்

### அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், மே 5

அரச அதிகாரிகள் அரசியல்வாதிகளைப் போன்று செயற்படுகின்றனர். அரச அதிகாரிகள் வெவ்வேறு கொள்கைகளை உடையவர்களாக இருந்தாலும் அரசின் வேலைகளை ஒழுங்காகச் செய்து முடிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வடமாகாண அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், மாகாண சபையின் செயலர்கள் முன்னிலையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

வடமாகாண சபையின் 2011 ஆம் ஆண்டு அடைவுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் அண்மையில் இடம் பெற்றது.

இதில் வடமாகாணத்தின் சகல அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், மாகாண சபையின் செயலர்கள் மற்றும் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுந்தரப்பு ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலிலேயே அமைச்சர் ரிஷாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிகாரிகள் ஒழுங்காகச் செயற்படுவதில்லை. அரசியல்வாதிகள் போன்று செயற்படுகின்றனர். நீங்கள் தேர்தலில் நிற்கப் போகின்றீர்களா? உங்களுக்கு வெவ்வேறு கொள்கைகள் இருந்தாலும் அரசின் வேலைத் திட்டங்களை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கலந்துரையாடலில் முதலில் மாகாண சபை தொடர்பிலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் கல்வி, விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் பற்றி மட்டுமே கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் செயலாளர்களால் விளங்கப்படுத்தப்பட்ட போதும் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்களால் சரமாரியாக கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதுவரை மேற்கொண்ட வேலைத் திட்டங்களில் ஏற்பட்ட குறைகள் மற்றும் வேலைகள் செய்து முடிக்கப்படாமை தொடர்பிலேயே கேள்விகள் எழுப்பப்பட்டன. இதற்குச் செயலாளர்கள் தடுமாற ஆளுநர் அவர்களை சமாளித்தார். (ம-5)

# தமிழரை அகதி நிலைப்படுத்தும் சிங்களக் குடியேற்றங்கள்

### கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்க்கரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

வடக்கு, கிழக்கில் அத்துமீறி மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் காலங்காலமாகக் குடியிருந்த தமிழ் மக்களை அகதி நிலைக்குக் கொண்டு வருவதையே எடுத்துக் காட்டுகிறது. இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்க்கரா விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூன்று தசாப்தகால அகிம்சைப் போராட்டம் முடிவுக்கு வந்து 3 வருடங்கள் கடந்தும் தமிழ் மக்களின் இன்னல்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. அத்துடன் அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளன.

இந்த நிலையில் பல லட்சம் மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்படாத நிலையில் அவலத்தில் வாழ்கின்றனர். தமிழ் மக்கள் இன்னும் அடிமை வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஓமந்தை இராணுவச் சோதனை நிலையம் பறைசாற்றுகின்றது.

வடக்கு முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் யாழில் இருந்து வருபவர்களை ஓமந்தையில் சோதிக்க வேண்டிய தேவை என்ன?

அரசு தன்மீது மேற்கொள்ளப்படும் போர்க்குற்றச்சாட்டில் இருந்து மீள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் சமயத் தலங்கள் மீது கைவைத்தவர்களையே விட்டுவைத்துள்ளது.

குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த அரசு ஆவன செய்ய வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ம-14)

# தொற்றா நோய்களால் ஆசிய நாடுகளில் அதிக பாதிப்பு

### சுகாதார வைத்திய அதிகாரி தகவல்

வவுனியா, மே 5

இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் தொற்றும் நோய்களை விடத் தொற்றா நோய்களே மக்களை அதிகளவில் பாதிக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியான மருத்துவ [illegible]

நேற்றுமுன்தினம் பிற்பகல் 10 மணியளவில் வவுனியா சுகாதாரப் பணிமனையில் இடம்பெற்ற மருத்துவ தாதிகள் தின நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும், குடும்பநலத் தாதியர்களும் சமுதாயத்தின் இரு கண்களைப் போன்றவர்கள். இவர்களின் சீரிய சேவைகளை நாம் பாராட்ட வேண்டும். தற்போது நாம் வாழுகின்ற இலங்கையைப் போன்ற ஆசிய நாடுகளில் தொற்றும் நோய்களை விடத் தொற்றா நோய்களே மக்களை அதிகளவில் பாதித்து வருகின்றன. இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் மருத்துவ உலகம் முனைப்புக் காட்ட வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் குருதிக் கொடை

மன்னார், மே 5
உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த வருடத்துக்கான உலக செஞ்சிலுவைத் தினமானது இளைஞர்களை இலக்காகக் கொண்டு கொண்டாடப்படுவதால் 'மனிதாபிமானப் பணிக்காக அர்ப்பணித்த இளைஞர்கள்' என்ற தொனிப் பொருளுடன் இடம்பெறுகின்றது. (க-12)

# வயலில் வெடிபொருள் அச்சத்தில் விவசாயிகள்

மழை வெள்ளத்தில் அள்ளுண்டு வெடிபொருள்கள் வன்னேரிக் குளத்தைச் சென்றடைந்திருக்கக் கூடும் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அக்கராயன், மே 5
கிளிநொச்சி வன்னேரிக் குளம் வயல் நிலங்களில் வெடி பொருள்களின் அச்சுறுத்தல் உள்ளதாக இங்கு மீளக்குடியமர்ந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வன்னேரிக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இங்குள்ள ஒன்பதாம் வாய்க்கால் பகுதியிலுள்ள வயல் நிலத்தில் வெடிக்காத நிலையிலுள்ள எறிகணை ஒன்றை விவசாயி ஒருவர் கண்டெடுத்துள்ளார்.

இதனை அடுத்தே வெடி பொருள் அச்சம் பரவ ஆரம்பித்துள்ளது.

வெடிபொருள் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பாகக் கண்ணி வெடியகற்றும் பிரிவினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதி போரின் போது இங்குள்ள காடுகளில் பெரும் போர் இடம்பெற்றது.

இதனால் மழை வெள்ளத்தில் அள்ளுண்டு வெடி பொருள்கள் வன்னேரிக் குளத்தைச் சென்றடைந்திருக்கக் கூடும் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். ஆனால் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

அத்துடன் ஏவப்பட்ட வெடிபொருள்கள் வயல் நிலங்களில் புதையுண்டு இருப்பதையும் நிராகரிக்க முடியாது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் மக்கள் குடியமர்ந்த சில பகுதிகளில் வெடிபொருள்கள் வெடித்ததால் உயிரிழப்புக்களும், காயங்களும், அங்க இழப்புகளும் ஏற்பட்டுள்ள நிலையில் வன்னேரிக்குளம் விவசாயிகள் வயல் நிலங்களுக்குச் செல்லும் போது அச்சத்துடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது என்கிறார் எமது செய்தியாளர். (க-18)

## தொலைபேசிக் கம்பத்தை இடமாற்றக் கோரிக்கை

சிறீலங்கா ரெலிக் கொம் நிறுவனத்தால் நடப்பட்டுள்ளது.

நெளுக்குளம், மே 5
பாடசாலை வீதியொன்றில் இடையூறு விளைவிக்கும் வகையில் காணப்படும் தொலைபேசிக் கம்பத்தை அகற்றி வீதியின் ஓரத்தில் அமைக்குமாறு வவுனியா தெற்குப் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா மதீனா நகர்ப் பாடசாலை வீதியிலேயே இந்தத் தொலைபேசிக் கம்பம் சிறீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால் நடப்பட்டுள்ளது.

தற்போது நெல்சிப் வேலைத் திட்டத்தின் கீழ் மதீனா நகர் பாடசாலை வீதி தாரிட்டுப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வேலைகளுக்கு இடையூறாக இந்தத் தொலைபேசிக் கம்பம் இருப்பதால் இதனை அகற்றி வீதியோரத்தில் நடுமாறு ரெலிக்கொம் நிறுவனத்துக்குப் பிரதேச சபைத் தலைவர் கடிதம் எழுதியுள்ளார்.

இனிவரும் காலங்களில் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளில் தொலைபேசிக் கம்பங்களை நடும் போது பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (க-402)

## போக்குவரத்து அவலத்தில் கிராஞ்சி மக்கள்

அக்கராயன், மே 5
கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, கிராஞ்சி மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் பஸ்ஸை எதிர்பார்த்து மூன்று மணித்தியாலத்துக்கும் மேலாக பல்லவராயன்கட்டுச் சந்தியில் காத்து நிற்கின்றனர்.

கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

ஆனால் இங்குள்ள மக்கள் அரச பஸ்களைக் கண்ணால்கூடக் கண்டதில்லை. தமது போக்குவரத்துச் சிரமங்களை நீக்கும் பொருட்டு அரச பஸ் சேவையை இந்தப் பகுதியில் ஏற்படுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)




பூநகரி ஜெயபுரத்தில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களைச் சேகரித்து அழிக்கும் பணியில் போதகர் ம.லூக்ஜோன் தலைமையில் சிறுவர்கள் உட்பட ஏனையோரின் பங்களிப்புடன் ஈடுபட்டுள்ளார். (18)

## பெறுபேற்றுப் பத்திரப் பிரதிகள் கிளி. முருகானந்தாக் கல்லூரியில்

கிளிநொச்சி, மே 5
கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியிலிருந்து 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அவற்றுக்கான பெறுபேற்றுப் பத்திரங்களின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாமெனப் பாடசாலை அதிபர் சி.வரதன் அறிவித்துள்ளார்.

போரின்போது இங்குள்ள பலர் தமது முக்கிய ஆவணங்கள் பலவற்றை இழந்த நிலையில உள்ளனர். இதில் இந்தப் பெறுபேற்றுப் பத்திரங்களும் அடங்கும்.

இதனால் பலர் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். பலர் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலையும் ஏற்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு முருகானந்தாக் கல்லூரி அதிபர் பரீட்சைத் திணைக்களத்துடன் பல முறை தொடர்பு கொண்டதன் பயனாக இந்தப் பெறுபேற்றுப் பத்திரங்களின் பிரதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தப் பெறுபேற்றுப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதைப் போன்று ஏனைய பாடசாலைகளுக்கும் இந்தப் பெறுபேற்றுப் பத்திரங்கள் கிடைக்கப் பெற்றால் மிகவும் உதவியாக இருக்குமென இங்குள்ள பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-405)

## மா, பாண் விலையேற்றங்களால் வன்னி மக்களுக்கு பெரும் அவலம்

முல்லைத்தீவு, மே 5
கோதுமை மா மற்றும் பாணின் விலையேற்றம் வன்னி மக்களைப் பெருமளவில் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்புடுகின்றது.

பாடசாலை செல்லும் மாணவர்களும், கூலிவேலை செய்வோரும் தமது காலை உணவாகப் பாணையே உட்கொள்கின்றனர். இரவு வேளையில் கோதுமை மாவை உபயோகித்து உணவுப் பொருள்ககளைத் தயாரிக்கின்றனர்.

தற்போது இவற்றின் விலைகள் சாதாரண மக்கள் எட்டிக்கூடத் தொட முடியாத உயரத்தில் உள்ளதால் இங்கு வாழுகின்ற வசதி குறைந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில் தற்போது பாணும் அதில் சேர்ந்துள்ளதால் மக்களின் கஷ்டங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (க-500)

# மகாதேவா சைவச்சிறார் இல்லத்துக்கு ரூ. 50 லட்சம் செலவில் புதிய கட்டடம்

### யாழ். வணிகர் கழகம் அமைத்து வழங்கும்

அங்குள்ள சிறுவர்களில் பெரும்பாலானோர் போரின் போது உடம்பில் சன்னங்கள் பாய்ந்த நிலையிலும் மன உளைச்சலுக்கு ஆளான நிலையிலும் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், மே 5
கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்துக்கு யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் 50 லட்சம் ரூபா செலவில் கட்டடம் ஒன்று அமைத்து வழங்கப்படவுள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள கழகத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

"அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தபோது குறித்த சிறுவர் இல்லத்தை நேரில் பார்வையிட்டோம். அதன்போது இல்லம் கட்டடங்கள் அழிவடைந்து பலத்த சேதத்துடன் காணப்பட்டது. அங்கே 2 வயது தொடக்கம் 16 வயது வரையான 314 சிறுவர்கள் தங்கியுள்ளனர்.

அங்குள்ள சிறுவர்களில் பெரும்பாலானோர் உடம்பில் சன்னங்கள் பாய்ந்த நிலையிலும் மன உளைச்சலுக்கு ஆளான நிலையிலும் காணப்படுகின்றனர்.

சிறுவர்களின் வாழ்வாதார நன்மை கருதி முதற்கட்டமாகக் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கவுள்ளோம். இதற்கான அடிக்கல் நடும் விழா இந்த மாதம் நடைபெற வுள்ளது'' என அவர் மேலும் தெரிவித்தார். (க-13)

## வவுனியா நகரப் பகுதியில் வாகனங்கள் நிறுத்தத் தடை

வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படுகின்றது.

வவுனியா, மே 5
வவுனியா நகரப் பகுதியை அண்டிய இடங்களில் வாகனங்கள் நிறுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதேவேளையில் நகரத்தை அண்டிய பகுதியில் உள்ள பாடசாலை, கோயில், பிரதேச செயலகம், பொதுச் சந்தை, வங்கி என்பவற்றுக்கு முன்னால் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

இதனால் மேற்படி இடத்துக்குத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கெனச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை, எதிர்கொள்கின்றனர்.

இதனைத் தடுக்கும் விதமாக வீதிப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்படி இடங்களில் அறிவித்தல் பலகைகள் இடப்பட்டு வாகனங்கள் நிறுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (க-421)

## பாலமொன்றை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி,மே5
பரந்தன்-முல்லைத்தீவுப் பக்கமாக உள்ள எட்டாம் ஒழுங்கையில் பாலமொன்றை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழை காலங்களில் வெள்ள நீரை வெளியேற்றும் பொருட்டு இந்த ஒழுங்கையின் குறுக்கே வாய்க்கால் வெட்டப்படுவது வழமையாகி விட்டது. இதனால் இதனூடாகப் பயணிப்பதில் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்த ஒழுங்கையின் ஒரு கிலோ மீற்றர் வரையான பகுதி திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

ஆனாலும் இந்த வீதியின் 350 மீற்றர் வரையான பகுதி திருத்தியமைக்கப்படாமல் குன்றும், குழியுமான நிலையில் காணப்படுகின்றது.

திருத்த வேலைகள் மூன்று மாதத்திற்கு மேலாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆனாலும் இந்த வீதியின் மீதியாக உள்ள (350 மீற்றர்) வரையான பகுதியையும் திருத்தி அமைத்து உதவ உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்ஸ்மி திருமண சேவையில்

உள்நாடு, வெளிநாடு,
திருமணமாகாதவர்களுக்கும் திருமணம்
பொருத்தித் தரப்படும். தரகர்களும்
தொடர்பு கொள்ளலாம். மண்டப,
சாப்பாடு ஒழுங்குகள் செய்துதரப்படும்.
தொடர்பு:
செ.கனகரத்தினம்,
லக்ஸ்மி திருமண சேவை,
கல்லூரியடி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
021 3217785

## திருமண சேவை

★ 62 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 36 பாவம் உடைய விவாகரத்துப் பெற்ற கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
★ 68 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 18 பாவமுடைய விவாகரத்துப் பெற்ற லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
★ 85 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 24 பாவமுடைய ஜேர்மன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★78 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 15 ½ பாவ முடைய விவாகரத்துப் பெற்ற கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு உள்நாட்டில் படித்த விவாகரத்துப் பெற்ற மணமகன் தேவை.
தொடர்பு : கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 320, கோயில் வீதி, நல்லூர். 077 6070862

## அச்சுகள் விற்பனைக்கு

தரமாகச் செய்யப்பட்ட அச்சுகள்
(பாவித்தவை)
தூண் அச்சு - 9'×5''×5''
கல் அச்சு - 12''×6''×4 - (5 கண்)
தொடர்புக்கு : 0778503176

## கோழிக்கூடு விற்பனைக்கு

இரும்புப் பட்டங்களை வெல்ட்பண்ணிச் செய்யப் பட்ட, ஒவ்வொன்றும் 6 சதுர அடிப் பரப்புடைய 4 அறைகளை உள்ளடக்கிய, நான்கு தட்டுக்களை உடைய, மொத்தம் 12' நீளம், 3' அகலம், 5' உயரம் கொண்ட, பாதுகாப்பாக 48 கோழிகளை இலகுவாக cull பண்ணி வளர்க்கக் கூடிய கூடு விற்பனைக்கு உண்டு. பார்வையிட இல.67, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:- 0773561991

## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 kg மேல்
வளர்ச்சியடையக் கூடிய
No - 1 BAHIRAHA புறொயிலர்
குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
விலை 90/=
றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.


## அக்கராயன் பல நோ.கூ.சங்கம் (வ-து) அக்கராயன்குளம்

# பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

பதவி : (1) பொதுமுகாமையாளர்
பதவிக் குறியீட்டு எண் : 101/06
சம்பள அளவுத் திட்டம்: 11950 - 15300 / 155 x 10 - 180 x 10 (கூ.ஊ.ஆ. குழுவின் சுற்றுநிருபம் 66/ 200 இன்படி)

தகைமைகள்:

அ) கூட்டுறவு ஊழியர் 7 ஆவது சம்பள குறியீட்டின் பதவியில் 3 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளக் குறியீட்டின் பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனங்களில் முகாமைத்துவ தர பதவியில் 8 வருட பணி அனுபவம். இதில் குறைந்தது 02 வருடம் சிரேஷ்ட முகாமையாளர் தர பதவியில் பணியாற்றிய அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரச் சான்றிதழ்/ க.பொ.த. (உயர் தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனங்களில் முகாமைத்துவப் பதவியில் 10 வருட அனுபவம் இதில் 2 வருடம் சிரேஷ்ட முகாமையாளர் தர பதவியில் பணியாற்றிய அனுபவம்.

பதவி (2) கணக்காளர்
பதவிக் குறியீட்டு எண் 104/08
சம்பள அளவுத்திட்டம் 11200 - 14100 / 140 x 10 - 150 x 10 (கூ. ஊ. ஆ. குழுவின் சுற்றுநிருபம் 66/ 2006 இன்படி)

தகைமைகள்:

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளக் குறியீட்டின் பதவியில் கணக்காளர்/ உள்ளக கணக்காய்வாளர் பதவியில் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளக் குறியீட்டு இலக்கத்தில் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் 6 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) பட்டய கணக்காளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையில் சித்தி அல்லது இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில் சார் கிரய முகாமைத்துவ டிப்ளோமா அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காளர்/ கணக்காய்வாளர் பதவியில் 2 வருட அனுபவம்.

வயதெல்லை - 21 - 50 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

பிணைப்பணம் - சங்கத்தால் கோரப்படும் ரொக்கம், ஆதனப்பிணை செலுத்த வேண்டும். பதவி நிரந்தரமானது, இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதுமாகும்.

நிபந்தனைகள்-

அ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற நற்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்படவேண்டும். விண்ணப்பப் படிவங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

மேற்குறிப்பிட்ட இரண்டு பதவிகளுக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து தலைவர், அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அக்கராயன் குளம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 15.05.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பத்துக்கான பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

நெறியாளர் குழு ஆணைப்படி,
தலைவர்.
அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அக்கராயன்குளம்,
கிளிநொச்சி.


HAPPY BIRTHDAY

1 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
05.05.2012

WISH YOU

சாவகச்சேரி தபால் நிலைய வீதியைச் சேர்ந்த
திரு.திருமதி ர.சதீஸ் தம்பதியரின்
செல்வப் புதல்வன்
ச.சஜீஷ்
தனது முதலாவது பிறந்த நாளை இன்று (05.05.2012) பிற்பகல் 4.00 மணிக்குக் கைதடி - நுணாவிலில் அமைந்துள்ள எலைற் என்ரரைண்மன்ட்டில் வெகு சிறப்பாகக் கொண்டாடும் ச. சஜீஷ் அவர்கள் சகல கலைகளும் பெற்று நூறாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்கள்.
தபால் நிலைய வீதி, சாவகச்சேரி.





## நகராட்சிமன்றம், சாவகச்சேரி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 23.05.2012 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு, நிர்மாணப் பயிற்சி நிலையத்தில், 31.08.2012 வரை வலுவுள்ள (ICTAD) தரம் C 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்வி கோருவதற்குத் தகைமையுடையவராவர்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (+VAT) |
|---|---|---|---|
| 01 | மீசாலை பொது நூலகத்திற்கான குழாய்க் கிணறு மற்றும் தண்ணீர் தாங்கி நிர்மாண வேலைகள் | 4700/= | 1,120 |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தில் 21.05.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி தவிசாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்படவேண்டும். இணைப்பிரதி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 23.05.2012 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி
04.05.2012.

இறப்பிபோல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், முன்னாள் சமாச இயக்குநர் சபை உறுப்பினரும், செல்வா சி.க.கூ.ச. பொருளாளருமாகிய

### மு. கனகரத்தினம் முருகையா

(04.05.2012) அன்று இறைபதம் அடைந்துள்ள நிலையில் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்
யாழ். மா.பி.க.கூ.ச.சமாசம்

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா குமாரசுவாமி



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி நல்லம்மா குமாரசுவாமி (03-05-2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் கந்தையா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வளர்மதி, வரதராசா (பிரான்ஸ்), லீலா, கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், துரைராசா (கட்டடத் தொழிலாளி), குமாரகுலசிங்கம் (பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி), றெஜினாசாந்தி (பிரான்ஸ்), லீனஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், மிருஷா (MRTC), பவிதன், பிரமிலன், (யா/ வைத்தீஸ்வரா கல்லூரி, A/L 2012, 2013 மாணவர்கள்), சுதர்மிலன் (யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆண்டு 7 மாணவன்), புளோறா (பிரான்ஸ்), றுத்திகா (பிரான்ஸ்), வலந்தன் (பிரான்ஸ்), விபூசன் (பிரான்ஸ்), அபிஷன் (பிரான்ஸ்), அர்ஜ்ஜயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு வில்லூண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.145, கடற்கரை வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம். (17694) (2-9-6)

தகவல்: மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேர்மன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், பொக்சர் பெண் நாயும், காலிக்குயின் பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும், அல்சேசன் குட்டிகளும், பொக் கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், மணிதாரா, வான்கோழி, நல்ல இனப் பசுக்கன்று.
தொடர்பு:- லி.மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக. பூதவராயர் கோயிலடி, டயலொக் ரவர் அருகில்.

## தவறிவிட்டது

முருகமூர்த்தி வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி சிறீதரன் சத்தியபாபா ஆகிய எனது கைப்பை பின்வரும் பொருள்களுடன் 30.04.2012 இல் தவறிவிட்டது. தேசிய அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் மற்றும் சில பொருள்களுடன் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0777075057

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்,
#. 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## மணமக்கள் தேவை

70 ஆம் ஆண்டு CIMA லண்டன் சிற்றிசன் 1இல் செவ்வாய் 81 பாவம் கௌரவ குல மணமகனிற்கு படித்த மணமகள் தேவை.

80 ஆம் ஆண்டு R.C அரச தொழில் கௌரவ குல மணமகனிற்கு குடும்ப பாங்கான மணமகள் தேவை.

87 ஆம் ஆண்டு 4இல் செவ்வாய் லண்டன் டாக்டர் மணமகனிற்கு படித்த வடிவான மணமகள் தேவை.

79 ஆம் ஆண்டு செவ்வாய் இல்லை 80 பாவம் ஆயிலியம் சொந்த தொழில் மணமகனிற்கு மணமகள் தேவை.

துர்க்கா திருமணசேவை,
021 321 1814, 077 8185978

## உற்பத்தி முகாமையாளர் பதவி

எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலைநாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுப் பூர்த்திசெய்து 15.05.2012 ஆம் திகதி பிற்பகல் 04.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதவி :** உற்பத்தி முகாமையாளர் (ஒப்பந்தம்)
**சம்பளம் :** பேசித் தீர்மானிக்கப்படும்
**தகைமைகள் :** (1) யாழ்ப் பல்கலைக்கழகத்தில் உணவு விஞ்ஞானமும் போசனையும் ( Food Science and Nutrition) பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் வெலிசறை/குண்டசாலை இரண்டு வருட டிப்ளோமா பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்
(2) ஆங்கிலத்தில் தேர்ச்சி (எழுத, வாசிக்க) பெற்றிருத்தல் மற்றும் சிங்களம் பேசத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(3) கணினி அறிவுடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

பொது நிபந்தனைகள்:
1. வயது 15.05.2012 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்
2. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
3. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூரத்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

02.05.2012

பொதுமுகாமையாளர் : யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### கயிலைலிங்கம் முருகதாஸ்



(மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்,
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை, கிளிநொச்சி)

அன்னார் கடந்த (03.05.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், யாழ். மாவட்டம்.

(17714)(6.9.45)

## மரண அறிவித்தல்

### இராசமணி வைரமுத்து



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து இராசமணி (28.04.2012) இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமணி - சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், வைரமுத்து (கிளி - இளைப்பாறிய இ.போ.ச. நடத்துநர்) வின் பாசமிகு மனைவியும், மதன்மோகன் (ரமேஷ் - ஜேர்மனி), அறிவழகன் (வரேஷ் - கனடா), காலஞ்சென்ற ராஜ்மோகன் (நரேஷ்) மற்றும் நிறைவழகன் (தினா - யாழ்.தபாற் திணைக்களம்), பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தாயும், சுஜித்தா (லக்சியா- உப விடுதிக் காப்பாளர், யாழ்.பல்கலைக்கழகம்), தர்சியா (கனடா) ஆகியோரின் மாமியும், கமலாதேவி, பத்மாவதி, ஸ்ரீதேவி, புஸ்பராணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (17716) (2-9-6)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### வீரகத்திப்பிள்ளை ரவீந்திரதாஸ்



வல்வெட்டித்துறையை
பிறப்பிடமாகவும், அமெரிக்
காவை வசிப்பிடமாகவும்
கொண்ட வீரகத்திப்பிள்ளை
ரவீந்திரதாஸ் (03.05.2012)
வியாழக்கிழமை இறைவனடி
சேர்ந்த செய்தி கேட்டு
இருவிழி வழி நீர் பொழிய
இடர் என சேதி ஒன்றும்
வந்ததுவோ!
ஒருகணம் தானும்
மறவா உறவு
இந்த உலக வாழ்வும்
துறந்தது என்றே!
அன்னாரின் ஆத்மா சாந்திய
டைய இறைவனைப் பிரார்த்
திக்கின்றோம்.

உங்கள் நீங்காதநினைவுகளுடன்
சகோதரி,
(அமரசேனாபதி- சுதர்மராணி)

ஆம்பிள் வெதுப்பகம்,
வல்வெட்டித்துறை.
(17715)(6.9.45)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது மைதானமாக மாநகர சபை வளாகம்

## புதிய கட்டடம் எப்போது அமையும்?

யாழ்ப்பாணம்,மே 5

யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள யாழ்.மாநகர சபை வளாகம் பொது நிகழ்வுகளுக்கான மைதானமாக மாறி வருகின்றமை குறித்துப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். அண்மைக் காலமாக இந்த வளாகம் பொது நிகழ்வுகளை நடத்துவதற்கு மாநகரசபையால் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது மாநகர சபைக்கான புதிய கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டதுடன் அதற்கான வரைபடமும் அங்கு நாடப்பட்டிருந்தது. அந்தக் கட்டடத்துக்கான கட்டுமாணப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை. அத்துடன் அங்கு நாட்டப்பட்டிருந்த கட்டடத்தின் வரைபடமும் தற்போது அகற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது இந்த வளாகத்தில் பொது நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் பாடசாலை மாணவர்களும் இந்த வளாகத்தை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மாநகர சபைக்கான புதிய கட்டடத்தை அமைப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் அந்த வளாகத்தை பொது நிகழ்வுகளுக்கான மைதானமாகப் பாவிப்பது குறித்து பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து யாழ்.மாநகர சபை எதுவித அக்கறையுமின்றிச் செயற்பட்டு வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதுடன் விரைவில் கட்டடத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.சரவணபவனிடம் கேட்டபோது:-

யாழ்.மாநகர சபைக்குரிய வளாகத்தில் சபைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி இதுவரை கிடைக்கவில்லை. விரைவில் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதுவரை வளாகம் பயனற்று இருக்கக் கூடாது என்பதற்காக நிகழ்வுகள் நடத்த அனுமதித்து வருகிறோம்- என்று தெரிவித்தார். (த-17)

## கொழும்புத்துறை மயானங்களை நிர்வகிக்க நடவடிக்கை

கொழும்புத்துறை, மே 5

கொழும்புத்துறைப் பகுதி யில் உள்ள மயானம் மற்றும் இடுகாட்டுப் பகுதிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை அந்தப் பகுதிகளில் உள்ள இந்து அமைப்புக்கள் மேற்கொண்டுள்ளன.

அதன் முன்னோடியாக கொழும்புத்துறை துண்டி இந்து மயானம், மாதர்காட்டு சிறுவர் இடுகாடு ஆகிய வற்றுக்குப் புதிய பரிபாலன சபையை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன.

இதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை கிழக்கு சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மயானப் பகுதிகளை இறுதிச் சடங்குகளுக்காகப் பயன்படுத்தும் கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, சுண்டுக்குளி, பாண்டியன்

முன்னோடியாக
கொழும்புத்துறை
துண்டி இந்து
மயானம், மாதர்காட்டு
சிறுவர் இடுகாடு
ஆகிய வற்றுக்குப்
புதிய பரிபாலன
சபையை
உருவாக்கும்
முயற்சிகள் இடம்
பெற்றுவருகின்றனர்.

தாழ்வு, கொழும்புத்துறை கிராமங்களைச் சேர்ந்தவர்களை இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இயங்கிவந்த பரிபாலன சபையின் செயற்பாடுகள் இந்தப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளையடுத்து செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

## கடைகள் உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம்,மே 5

அரியாலை மாம்பழம் சந்தியில் உள்ள 3 கடைகளில் நேற்று முன்தினம் அதிகாலை கதவு உடைத்து பணம், சிகரெட் என்பன திருடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர்கள் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

2 கடைகளில் கதவுடைத்தும் மற்றைய கடையின் கூரை பிரித்தும் உள்நுழைந்து சுமார் 15 ஆயிரத்து 700 ரூபா பணம் மற்றும் ஒரு தொகை சிகரெட் என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



மானிப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் ஆனைக்கோட்டையில் நடத்தப்பட்ட நடமாடும் பொலிஸ் சேவையில் யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபேசிங்க பாடசாலை மாணவன் ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கிறார். (100)

## குடும்ப நல உத்தியோகத்தருக்கு சுகாதாரப் பணிப்பாளர் வாழ்த்து

யாழ்ப்பாணம்,மே 5

சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர்கள் தினமான இன்று யாழ்.மாவட்ட குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து அவர்களுக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படும் குடும்ப நல உத்தியோகத்தர் தினத்தில் இந்த வாழ்த்துச் செய்தியை அவர் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் மிக மோசமாக குடும்ப நல உத்தியோத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்ற போதும், நெருக்கடியான போர்ச் சூழ்நிலையிலும் அர்ப்பணிப்போடு ஆற்றிய பணிகள் நினைவு கூரப்பட வேண்டிய தேவையுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் தாய், சேய் மரண வீதங்களை குறைப்பதிலும், குழந்தைகளின் போஷாக்கு நிலையை மேம்படுத்துவதிலும் சிறந்த பணிகளைக் குடும்பநல உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர் என்று அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ம-14)

## குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு இரு பிரிவில் போட்டி

யாழ்ப்பாணம்,மே 5

குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய இரத்த வங்கியால் நடத்தப்படும் கவிதை, சிறுகதை, சித்திரம் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கான போட்டி, திறந்த போட்டியாளர்களுக்கான போட்டி என இரு பிரிவுகளாக இந்த போட்டி நடத்தப்படவுள்ளது.

ஆர்வமுடையவர்கள் ''இரத்த தானமும் இரத்தத்திற்கான தேவைகளும்'' எனும் எண்ணக்கருவில் ஆக்கங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக பிராந்திய இரத்த வங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-14)

## தெல்லிப்பழையில் திருத்தப்பட்ட கட்டடங்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், மே 5

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் புனரமைப்புச் செய்யப்பட்ட முன்பள்ளி மற்றும் பொதுநோக்கு மண்டபங்கள், பொதுக்கிணறுகள் என்பன கடந்த 2 ஆம் திகதி பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் ஜெய்க்கா நிறுவனத்தால் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் முன்பள்ளிகள் இரண்டும், பொதுக்கிணறுகள் இரண்டும் 5.9 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுகையளிக்கப்பட்டன.

நகுலேஸ்வரத்தில் அமைந்துள்ள முன்பள்ளி மற்றும் கூவில் பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளியும் பொது நோக்கு மண்டபமுமே 5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பொதுக் கிணறுகள் இரண்டு, கொல்லன் கலட்டி, மாவை கலட்டியில் 9 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. இவற்றை ஜப்பான் தூதரக ஆலோசகர் நிசா விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்துவைத்தார். (ம-5)

## காக்கைதீவு இறங்கு துறையிலுள்ள மீன் சந்தையை இடம் மாற்றுங்கள்

### கடற்றொழில் அமைச்சுக்கு கடிதம்

வலி.தென்மேற்கு,மே 5

கடற்றொழிலாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் காக்கைதீவு இறங்கு துறைக்கு அண்மையில் வலி.தென் மேற்குப் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தையை மீனவர்களின் நலன் கருதி வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு சாவற்கட்டு கிராமிய கடற்றொழில் அமைப்பின் தலைவர் என். பொன்னம்பலம் கடற்றொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சந்தையால் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து கடற்றொழில் அமைப்பின் தலைவர் அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, நவாலி, காக்கை தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மீனவர்கள் காக்கை தீவுக் கடலில் தொழில் செய்து வருகிறார்கள்.

இறங்கு துறைக்குச்
சற்று தூரத்தில்
கடற்கரையோரமாக
யு.என்.எச்.சி.ஆர்.
நிறுவனத்தால் பல
வருடங்களுக்கு
முன்பு கட்டப்பட்ட
கட்டடம்

இவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு முன்பும் தொழில் முடிந்து வந்த பின்பும் தொழிலுக்குப் பயன்படுத்திய வலைகளைக் கூறுவிலை மண்டபத்துக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் வைத்துச் செப்பனிடுவதும், வெயிலில் காய விடுவதும் வழக்கம்.

மீனவர்களின் நலன் பற்றிச் சிந்திக்காமல் கூறுவிலை மண்டபத்துக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள இடத்தில் வலி.தென் மேற்குப் பிரதேச சபையால் மீன் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. இது மீனவர்களுக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இறங்கு துறைக்குச் சற்று தூரத்தில் கடற்கரையோரமாக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் பல வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம் இருந்த போதிலும் அதைப் பயன்படுத்தாமல் புதிய சந்தை அமைத்திருப்பது விசனத்தை ஏற்படுத்தும் செயலாகும்.

எமது பயன்பாட்டிலுள்ள பகுதியில் எமது அமைப்புடன் தொடர்பு கொள்ளாமலும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியில்லாமலும் அமைக்கப்பட்டுள்ள இச் சந்தையை தொழிலாளர்களின் நலன் கருதி வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். - என்றுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## மா விலை உயர்வால் சிவப்பு அரிசியில் நாட்டம்

மா விலை அதிகரித்ததைத் தொடர்ந்து குடாநாட்டில் அரிசியின் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் மா விற்பனையிலும் பாணின் விற்பனையிலும் மந்தநிலை ஏற்பட்டுள்ளது. அரசு மாவின் விலையை எட்டு ரூபாவால் அதிகரித்ததைத் தொடர்ந்து பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் தற்பொழுது சிவப்பு பச்சை அரிசியில் நாட்டம் கொண்டுள்ளனர்.

காலை, இரவு உணவாக மாவையும் பாணையும் பயன்படுத்தி வந்த மக்கள் மாவின் விலை அதிகரிக்கப்பட்டதால் பச்சை அரிசியை வாங்கி உணவு தயாரித்து வருகின்றனர். இதனால் பாணின் விற்பனையிலும் கோதுமை மாவின் விற்பனையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள அதேநேரம் அரிசியின் விற்பனை அதிகரித்துள்ளது.

இதேநேரம் தேநீர்ச் சாலைகளிலும் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தன எதால் வியாபாரத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு வல்வை ஸ்ரீ மு

# தேர் சிறப்பு



### பிரதம குருவின் ஆசிச்செய்தி

வல்வை நகரின் சிறப்பிற்கும் மகிமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவை ஆலயங்களாகும். அதில் முக்கிய இடம் வகிப்பவை அம்மை அப்பன் ஆலயங்களாகும்.

கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை இன்றும் போற்றும் வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்கும், அன்னை முத்துமாரியின் நந்தன வருட பிரம்மோற்சவத்தின் ரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

இன்றைய பொன்னான நன்னாளில் அம்பாள் அழகிய சித்திர வேலைப்பாடுகள் பொருந்திய சித்திரத் தேரில் ஆரோகணித்து வரும் காட்சியைக் காண ஆயிரங்கண்கள் போதாது.

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்ற முதுமொழிக்கிணங்க அம்பாள் அடியவர்கள் எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒன்று கூடி வடம் பிடித்து தாங்கள் வேண்டிய வரங்களை பெற்று ஆனந்தம் அடைகிறார்கள்.

அருட்பணியில் அடியேன் பொன்விழாக் காணும் இந்தப் பொன்னான நன்நாளில் அனைத்து அம்பாள் அடியவர்களும் ஷேம தைரிய விஜய வீர்ய ஆரோக்கியம் கிட்ட அவள் பாதம் பணிந்து எனது உள்ளார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''
லோகா சமனிதா சுகினோ பவந்து''
சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (J.P)
''சிவாகம சித்தாந்த ஞான பானு''
''பிரதிஷ்டா லங்கார சித்தாந்த ஸாகரம்''
''பிரதிஷ்டா சிரோமணி''
இந்து மத குருபீடாதிபதி
பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.



### மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி

எல்லாம் வல்ல வல்வை ஸ்ரீ முத்துமாரி யம்மன் அம்பிகைக்கு இன்று ரதோற்சவம். தேரேறி வரும் அன்னை ஸ்ரீமுத்துமாரி உலகெங்கிலுமுள்ள தனது அடியவர்களுக்கு அருள் பாலிக்க அம்பிகையை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ .மு. தயாபரக்குருக்கள்
மகோற்சவகுரு



### அழகென்ற சொல்லுக்கு.....

அழகே உருவானவள் எங்கள் முத்துமாரி. நேரம் ஒரு பட்டுப்புடைவை உடுத்தி அலங்கார நாயகியாய் அழகென்றால் முத்துமாரி, முத்துமாரி என்றால் அழகானவள். அந்த மகமாரிதான் இந்த வருட உற்சவ காலமான 14 ஆம் நாள் தேர்த்திருவிழாவான இன்று ஆன்மாக்களின் ஆணவமலத்தை அழித்து நல்லருள் புரிவதற்காக அம்பாள் தேரேறி வருகின்றாள். அடியவர்கள் எங்கள் அலங்கார ரூபினியாக

இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும்மென்று அன்னை ஸ்ரீமுத்துமாரியம்மன் அம்பாளின் பாதம் தொழுது வேண்டி நிற்கிறோம்.

தாள் பணிந்து அம்பாளின் பேரருளை பெற்று.
ஓம் தாயே மகமாரி சுலோகத்தை
ஆபாரணமாக தாங்கியவள்

தர்மகர்த்தா சபையினருக்காக (தலைவர்)



### வாழ வழி சமைத்தருள் தாயே

தேரேறி வலம் வரும் அன்னை முத்துமாரியே!
போரின் வதைகளினால் தன் தாள் சேர்ந்தோர்!
தரணியில் வாழ வழயின்றி அல்லலுறுவோர்!
உறவுகளை இழந்தும், பிரிந்தும் வாடுவோர்!
புலம் பெயர்ந்தும் வாழ வழியின்றி
துன்பப்படுவோர்!

இன்னோரன்ன உறவுகள் உலகெங்கும்
மன அமைதியுடன் வாழ வழி சமைத்தருள் தாயே !
உட்பூசல், வெளிப்பகை என்பன நீங்கி - நாட்டில்
நல்லாட்சி நிலவ வரம் கொடம்மா!

ந. சிவரத்தினம்
சர்வதேச இணைப்பாளர்
வல்வை மாலுமிகள் நலன்புரிசங்கம்,
வல்வெட்டித்துறை (VaiSWA)







## அன்னை முத்துமாரி ரவல்ஸ்

அம்பாள் பணியில் ஐம்பது வருட நிறைவு
பொன்விழாக் காணுகின்ற சோமஸ்கந்த

### சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் ஐயா

அவர்களுக்கு அன்னை முத்துமாரி ரவல்ஸ்
நிர்வாகத்தினரின் வாழ்த்துக்கள்



காஞ்சிபுரத்துக் கச்சியப்ப சிவாச்சாரியார் போல, சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஐயா அவர்களும் அம்பாள் திருமேனி தீண்டி, அபிஷேகித்து, ஆராதித்து, பூச்சொரிந்து செய்யும் பணியானது ஐம்பது வருடங்கள் கழிந்தும் தொடர்கிறது என்பது கற்பனைக்கு எட்டாத ஒரு சாதனை. எந்த மண்ணிலும், எந்த ஊரிலும், எந்தக் கோயிலிலும் நிகழாத ஓர் அற்புதம். இது தாஸிந்தா மணல்த் தாய் கொடுத்த வரம். குருக்கள் ஐயாவுக்கு நீடித்த ஆயுளும், நிறைந்த வாழ்வும், இன்னும் பல தசாப்தங்கள் அம்பாள் பணி தொடர எல்லாம் வல்ல அன்னை முத்துமாரியைப் பிரார்த்திக்கின்றேன்.

சு.ஆ. பாலசுப்பிரமணியம் (ராசா)

உதட்டழகு காட்டி கிளிவாகனத்தில் எழுந்தருளும் கிளிமொழியாளே!
கற்பூரத் திருவிழாவில் பெருங்குளிர்த்தி ஏற்கும் – " அன்னை முத்துமாரியே"
அற்புதமாக வாக்குரைத்து, தப்பாமல் கேட்ட வரமெல்லாம் தந்து,
உன் நாமத்தில் பேருந்துகள் அருளிய அன்னைக்கு நமஸ்காரம் செய்யும்

S. ஆறுமுகசாமி குடும்பத்தினர், மக்கள், மருமக்கள்,
அம்பாள் வரமருளிய முத்துக்களான பேரப்பிள்ளைகள்: விஷ்ணுசரன், விரான் (சுவிஸ்)

அன்னை முத்துமாரி பஸ்ஸிற்கு பதிவு செய்யும் இடங்கள்:

THE PHONE SHOP - நெல்லியடி
அம்பாள் கொமினிகேசன் - மந்திகை
ராஜன் சைக்கிள் வேக்ஸ் - பருத்தித்துறை
SKY NET - நெல்லியடி
நித்தியா ரேடேர்ஸ் - நெடியகாடு
ஆனந்தா பாமசி - வல்வெட்டித்துறை
V.K. வீடியோ - வல்வெட்டித்துறை
கீரன் புத்தகசாலை - வல்வெட்டித்துறை
யசல வீடியோ - வல்வெட்டித்துறை
கரன் பூட்சிற்றி - உடுப்பிட்டி
துளசி மல்ரி கொம்பிளெக்ஸ் - உடுப்பிட்டி
சீலைன்ஸ் - உடுப்பிட்டி
பீடாகடை - உடுப்பிட்டி
லிபேட்டி - அச்சுவேலி-
லைரா - ஆவரங்கால்
நீர்வேலி பார்மசி - நீர்வேலி
கஜமுகன் கொமினிக்கேசன் - கோப்பாய்
உஷா ஸ்ரோர்ஸ் - இருபாலை
வறணி மிசன் - யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டுச் சந்தையில் தாக்குதல்

## நைஜீரியாவில் 56 பேர் பரிதாபச் சாவு



யோபே,மே 5
நைஜீரியாவின் வடக்கு கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மாட்டுச் சந்தையொன்றில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 56 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

யோபே மாநிலத்திலுள்ள பொட்டிஸ்கம் நகரிலுள்ள மாட்டுச்சந்தை தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்திலேயே சுமார் 56 பேர் இறந்துள்ளனர் என்று வைத்திய சாலை வட்டாரம் தகவல் தெரிவித்துள்ளது.

மர்மக் கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவனைப் பிடித்த வர்த்தகர்கள் அவன் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துக் கொளுத்திக் கொன்றனர். இதற்குப் பழிவாங்கும் முகமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் செய்தி தொடர்பாளர் டோயின் பாடஜ்சின் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலில் 20 வெடி குண்டுகள் மற்றும் ஒரு துப்பாக்கி பயன்படுத்தப்பட்டன. இறந்தவர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாகத் தெரிவிக்க முடியவில்லை. எனினும் 60 இற்கும் மேற்பட்ட மக்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**மர்மக் கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவனைப் பிடித்த வர்த்தகர்கள் அவன் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துக் கொளுத்திக் கொன்றனர். இதற்குப் பழிவாங்கும் முகமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.**

# பல்கலை மாணவர் நால்வர் சிரியாவில் சுட்டுக்கொலை

டமாஸ்கஸ், மே. 5
சிரியாவில் அலெப்போவில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 4 மாணவர்கள் அந்த நாட்டு இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக சிரியாவின் 2ஆவது பெரிய நகரான அலெப்போவில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் மிகப் பெரிய பேரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த இராணுவம் நள்ளிரவு பல்கலைக்கழக வளாகத்துக்குள் புகுந்து மாணவர்களை கைது செய்ய முயற்சித்தது. மாணவர்கள் எதிர்த்து கலவரத்தில் இறங்கினர். இதையடுத்து மாண வர்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 மாணவர்கள் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். 28 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தத் தகவலை மாண வர் களின் போராட்டக் குழு தலைவர் முகமது அல் ஹலாப தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் சிரிய மாணவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. டெர் எஸ்கார், டாரா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் நாட்டில் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

# வான் சமிக்ஞைகளுக்கு வடகொரியா இடையூறு

## 250 விமானங்கள் பாதிப்பு என்கிறது தென்கொரியா

சியோல்,மே 5
வடகொரியா தமது விமான நிலைய சமிக்ஞையில் தடங்கல் ஏற்படுத்தி வருகின்றது. இவ்வாறான தடங்கலால் இதுவரை 250 விமானங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளன என்று தென்கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

இந்தச் சமிக்ஞை தடங்கலால் கடந்த சனிக்கிழமை முதல் 9 தென்கொரிய மற்றும் 9 சர்வதேச விமான சேவைகள் பாதிக்கப்பட் டுள்ளன என்று தென் கொரிய போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வடகொரியா எமது சமிக்ஞை முறையில் தடங்கலை ஏற்படுத்துகிறது என்பதை எம்மால் உறுதியாகக் குறிப்பிட முடியும் என்று தெரிவித்த தென் கொரியத் தொலைத்தொடர்பு ஆணைக் குழுவின் துணை இயக்குநர் லுகியுங் தெரிவித்தார்.

எனினும் இந்தத் தடங்கலால் விமானப் பறப்புகளுக்கு இதுவரை எந்த அபாயமும் ஏற்பட வில்லை என்றார்.

இதற்கு முன்னர் 2010 ஆகஸ்ட் மற்றும் 2011 மார்ச் மாதங்களிலும் தென் கொரியா இதேபோன்ற குற்றச்சாட்டை சுமத்தியமை குறிப்பிடத்தக்கது.

1950 - 1953 ஆம் ஆண்டு கொரியப் போருக்குப் பின்னர் இரு நாட்டுக்கும் இடையில் தொடர்ந்து முறுகல் நிலை நீடித்து வருகிறது.

# சீனாவில் நிலச்சரிவு: 1,000 பேர் மீட்பு


பீஜிங், மே. 5
உலகப் புகழ்பெற்ற மலை சுற்றுலாத் தலமான ஷென்னோன்ஜியா அமைந்துள்ள மத்திய சீனாவின் ஹுபேய் மாகாணத்தில் கடந்த 2 நாள்களாகப் பெய்த கன மழை காரணமாக நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

பெரிய பெரிய பாறைகள் சரிந்து விழுந்ததால் முக்கிய வீதிகள் துண்டிக்கப்பட்டன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் அங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இதையடுத்து வீதிகளைச் சீர்செய்யும் பணிகள் முழுவீச்சில் நடத்தப்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். இந்த நிலச்சரிவில் உயிர்ச்சேதம் ஏதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

**கிழக்கு சீனாவிலும் கடும் மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக அங்கு இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர்.**

5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 34 ஏக்கர் பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்துள்ளன, 5,700 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் இடிந்து விட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின்(இடது), மொஸ்கோவுக்கு வந்துள்ள உக்ரைன் பிரதமர் யூலியா டைமோசனை வரவேற்றார்.

# எகிப்தில் நியாயமான தேர்தல்

## இராணுவ உயர்மட்டம் நம்பிக்கை


எகிப்தில் இந்த மாதம் இறுதியில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல், ஒளிவு மறைவில்லாமல் நியாயமாக நடக்கும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எகிப்தில் ஹோஸ்னி முபாரக் ஆட்சி, மக்கள் புரட்சி மூலம் முடிவுக்கு வந்தது. இதையடுத்து இராணுவ உயர் மட்டக் குழு தலைமையில் இடைக்கால ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த மாதம், 23 மற்றும் 24ஆம் திகதி ஜனநாயக முறைப்படி தேர்தல் நடை பெற உள்ளது.

ஏழு முக்கிய கட்சிகள் இந்த் தேர்தலில் போட்டியி டுகின்றன. தேர்தல் ஆணையமும், இடைக்கால இராணுவ உயர்மட்டக் குழுவும் தேர்தலை முறைப்படி நடத்த நடவடிக்கை எடுக்க வில்லை எனக் கூறி, சில கட்சிகள் தேர்தலை புறக்கணித்து விட்டன. இதற்கிடையே தலைநகர் கெய்ரோவில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தை கண்டித்து சில கட்சியினர் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் கலவர மாக மாறியதில், 20 பேர் கொல்லப்பட்டனர். 150 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்துள்ள இராணுவ உயர் மட்டக் குழுவின் மூத்த அதிகாரி முகமது அல் அசார் "எதிர் வரும் 23 மற்றும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் ஒளிவுமறைவில்லாமல் நியாயப்படி நடக்கும். இந்தத் தேர்தலைச் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த, 40 இற்கும் அதிகமான கண்காணிப்பாளர்கள் பார்வையிட உள்ளனர். எனவே இந்தத் தேர்தல், 100 சதவீதம் நியாயமாகவே நடக்கும்" - என்றார்.

# இரு பெண்களுடன் காதல் பின் ஒரேநாளில் திருமணம்



ஈராக் நாட்டு விவசாயி ஒருவர் ஒரே நேரத்தில் இரு பெண்களைக் காதலித்து ஒரே நாளில் திருமணம் செய்துள்ளார்.

மத்திய ஈராக்கில் சிறிய கிராமம் ஒன்றை சேர்ந்த ஒருவரே இவ்வாறு திருமணம் செய்துகொண்டவர்.

மணப் பெண்கள் இருவரும் இவருக்கு உறவு முறை உடையவர்கள்.

கடந்த 6 ஆம் திகதி இந்தத் திருமணம் நடைபெற்றது. இரு மணப் பெண்களினதும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் இந்த வைபவத்தில் பங்கேற்று மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தினர்.

வீட்டில் கடைசிப் பிள்ளையான இந்த ஆண் இரு உறவுக்காரப் பெண்களையும் ஒரே நாளில் திருமணம் செய்ய விரும்புகின்றார் என்று வீட்டில் பெற்றோருக்குக் கூறினார். பெற்றோரும் இவரை மேலும் உற்சாகப்படுத்தினர். ஆயினும் உறவினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கின்றனர். எனினும் அந்தப் பெண்கள் உறவு முறையினராக இருந்ததால் இந்தத் திருமணம் எதிர்ப்புக்களையும் மீறி நடைபெற்று முடிந்துள்ளது.

இரு பெண்களையும் எப்போதும் சமமாக நடத்துவேன் என்று உத்தரவாதம் கொடுத்து இருக்கின்றார் மணமகன். இந்த உத்தரவாதத்தின் பேரிலேயே இரு பெண்களும் சம்மதித்து இருக்கின்றனர்.

ஓர் ஆண் நான்கு பெண்களை திருமணம் செய்கின்றமையை இஸ்லாம் அனுமதிக்கின்றது. ஆனால் நான்கு பெண்களையும் அவர் சமமாக நடத்த வேண்டும்.

# லிபியாவில் மத சார்பு கட்சிகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

லிபியாவில் மத, இன மற்றும் பிராந்திய அடிப்படையில் அரசியல் கட்சி அமைக்க விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள முதலாவது சுயாதீன தேர்தலில் இஸ்லாமிய கட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்படும் என்று லிபிய இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

லிபிய அரசியல் கட்சிகள் தொடர்பாக அந்த நாட்டு இடைக்கால அரசு கொண்டு வந்துள்ள புதிய சட்டம் [illegible] நீதிபதிகள் குழு நேற்று முன்தினம் அறிவித்தது. இதில் கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட மத அடிப்படையிலான அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்கும் சட்டம் உள்ளடக்கப்படவில்லை.

லிபியாவில் மக்கள் கிளர்ச்சியின் மூலம் மும்மர் கடாபி அரசு ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதன் பின் அங்கு முதல் முறையாக சுயாதீன தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.

200 ஆசனங்களுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் 80 ஆசனங்கள் அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதோடு எஞ்சிய ஆசனங்கள் சுயாதீன வேட்பாளர்களுக்கு [illegible]ப்படவுள்ளன. இந்தத் தேர்தல் மூலம் லிபியாவில் நிரந்தர அரசு மற்றும் புதிய அரசமைப்பை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் லிபியாவில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு பலம் வாய்ந்த அமைப்பாக இயங்கி வருவதாக அரசியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். ஏற்கனவே டுனிஷியா, எகிப்து மற்றும் மொரோக்கோ நாடுகளில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிக்கு பின்னரான சுயாதீன தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

எனினும் லிபியாவில் மும்மர் கடாபி அரசுக்கு ஆதரவாகச் செயற்படவோ, பேசுவதற்கோ தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை மீறுபவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என இடைக்கால அரசு எச்சரித்துள்ளது.

மும்மர் கடாபிக்கு, அவரது அரசுக்கு, சிந்தனைக்கு மற்றும் அவரது குழந்தைகளுக்கு ஆதரவாகச் செயற்படுவது சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று இடைக்கால அரசு கொண்டு வந்துள்ள புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, பெப்ரவரி 17 மக்கள் எழுச்சி மற்றும் இஸ்லாம் மதம் அல்லது நாட்டை அவமதிக்கும் வகையில் செயற்படுவது சிறைத் தண்டனைக்குரிய குற்றம் எனவும் புதிய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீரணி நாகபூஷணி அ

## சீரணி, சண்

# ஆலய இரதோற்சவ

### தேவஸ்தான குருவின் ஆசியுரை



அகிலத்தையாளும் அகிலாண்ட நாயகியாம் சீரணி அம்பாளின் தேர்த்திருவிழா இன்று பார்போற்றும் தெய்வீக அன்னையாம் நாகபூசணி அம்மை ஆயிரம் ஆயிரம் அடியவர்கள் தொழ இன்று தேரேறி வருகிறாள். வானுயர்ந்த கோபுரங்களும், மணிமண்டபங்களும் சிறந்து விளங்கி ஆலயச் சூழல் எங்கும் சோலைகளாக நெடிதுயர்ந்த மரங்களோடு தெய்வீகத் திருத்தலமாம் சீரணிப்பதி இவ்வாலயத்தின் மஹோற்சவம் கடந்த 25ம் திகதி ஆரம்பித்து இன்று சித்திராப் பௌர்ணமி நன்நாளில் விநாயகரும் முருகனும் அருகருகே வர அன்னை தன் சிங்காரத் தேரேறி அடியவர்களுக்கு அருள்புரியும் பெருநோக்கோடு இன்று தேர்வலம் வருகிறாள் தேர்திருவிழா சிறக்கவும் அடியவர்கள் நன்மை பெறவும் எமது நல்லாசிகள்.

**பிரம்மஸ்ரீ.கு.சோமாஸ்கந்தக்குருக்கள்**
*(தேவஸ்தான குரு)*

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



நந்தன வருட சித்திரை மாத சித்திரைப் பௌணர்மி தின இன் நன்நாளில் ரத ஆரோகணம் மேற்கொள்ளும் சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

திருவருட் செல்வங்கள் பொலிந்து விளங்கும் ஈழவள நாட்டின் யாழ்ப்பாண நன்நகரின் வடமேல் பாகத்தில் சண்டிலிப்பாய் சீரணிப் பகுதியில் கோவில் கொண்டு வீற்றிருக்கும் சீதள நாயகியாம் ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை தேரேறி நம் அடியார்களுக்கு இஷ்ட சித்திகளை அள்ளி வழங்க அன்னையை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு எஸ். முரளிதரன்**
*பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.*

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் நிறைந்த, சீரணி அம்பாள் திருத்தேர் விழாக்குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். இயற்கை எழில் மிக்க சண்டிலிப்பாய் கிராமத்தில் அற்புதம் நிறைந்த அம்பாள் வீற்றிருக்கும் சீரணியின் திருவருளை அறியாதவர்கள் இல்லை பலவூர் பக்தர்களும் பக்தியோடு நாடி வந்து நேர்த்தி செய்யும் புண்ணியதலமாகிய இத்திருத்தலத்தின் சிறப்பு தனித்துவமானது. அம்பாளைத் தரிசிக்க வருபவர்கள் பரவசமாகி ஆடுவார்கள், பாடுவார்கள் ஆனந்தக்களிப்பில் ஆச்சி ஆச்சி என்று குரல் எழுப்பிக் கும்பிடும் காட்சி வர்ணிக்க முடியாத சிறப்பு எனலாம். சீரணி அம்பாளின் திருத்தேர் விழாச் சிறக்க நல்வாழ்த்துக்கூறி அம்பாள் அடியார்கள் சகல வளங்களுடனும் சிறந்து வாழப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"


**கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.*

### பிரதேசசபை செயலாளரின் வாழ்த்துரை



சீரணி என்றாலே சீரணிப்பதியுறையும் நாகபூசணி அம்மை ஆலயம் தான் மனக் கண்முன் தோன்றும். சித்ராப்பௌர்ணமி நன்நாளிலே சித்திரத்தேரேறி வேண்டுவோர் வேண்டும் வரம் அருள கம்பீரமாக அம்பிகையானவள் பவனிவரும் இக்காட்சியைக் காண்பவர்கள் பாக்கியசாலிகள். அம்பிகையின் நல்லருள் அனைவரையும் சென்றடைய பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.புஸ்பமலர் சிவலிங்கம் (செயலாளர்)**
*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை*
*மானிப்பாய்.*



### ஆலய வ

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அ
சேர்ந்த மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இர
வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்த
பிள்ளை, அன்னப்பிள்ளை, நன்னிப்பிள்ளை, மயில்வ
ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அ
ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இ
தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய எ
செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.
வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையி


ஐங்கரன் மோட்டோர்ஸ்



சியாட் ரயர், Fevicol தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள். ஆட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, வாட்டர்பம் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்.
சந்தை முன்பாக, மானிப்பாய்.



லீலா வெதுப்பகம் சுவையகம்
சீரணி, சண்டிலிப்பாய்

அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி.

லம்போதரன் மோட்டோஸ்
பலாலி வீதி, டிப்போ அருகாமை,
கோண்டாவில்



சுந்தர்சன்
பிரதான வீதி, மானிப்பாய்

கம்சா களஞ்சியம்
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

சக்தி எலக்ரிக்கல்ஸ்
சந்தைச் சதுக்கம், சங்கானை.

ஆசைப்பிள்ளை அன் சன்
நகை மாடம்
இல.10 பஸ் நிலையம், சங்கானை.

கந்தசாமி அன் சன்ஸ்
சந்தைச் சதுக்கம், சங்கானை.

இரதோற்சவம் சிறப்

நியூ சண்முகானந்தா ரெக்ஸ்
23, (58) பெரிய கடை,
யாழ்ப்பாணம்

கணபதி ஹாட்வெயர்ஸ்
தொட்டிலடி, சங்கானை.

COMPUTER WORLD & PRINTERS
All Kinds of Computer Works
7ம் கட்டை, சண்டிலிப்பாய்.

தரம் 6 முதல் O/L வரை யாழ்நகரின்
நம்பர் 01 கல்வி நிறுவனம்
எடிஷன் அக்கடமி
யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில்,
வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்பாள் தேவஸ்தானம்

## ...ண்டிலிப்பாய்

## ...வ சிறப்பிதழ் - 2012






### மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி - தேரேறி வரும் தாயைத் தொழுவோம்......




யாழ்ப்பாணத்தின் திவ்ய தேசமாய் சண்டிலிப்பாய் சீரணி எனும் அருட்பதியில் ஆனந்தஆட்சி புரியும் தாய்க்கு தேர்த்திருவிழா அகிலத்தை யாழும் அகிலாண்ட நாயகி அருட்கோலம் கொண்டு நம்மைக் காக்க தேரேறி வரும் தெய்வீகக் காட்சியைக் காணக் கண் ஆயிரம் வேண்டுமன்றோ. ஆயிரம் ஆயிரம் அடியவர்கள் கூடி வடம் பிடித்து தேர் இழுத்து அன்னையின் உள்ளத்தில் இடம்பிடிக்க எத்தனை நாட்கள் தவம் இருந்தனரோ தேராட மணியாட காவடியும் ஆட அன்னையும் மகிழ்வோடு அசைந்தாட தேர்த்திருவிழா இனிதே சிறக்க மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

**மகோற்சவ குரு சிவஸ்ரீ .பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள்**
மருதடி விநாயகர் ஆலயம்
மானிப்பாய்.

### அம்பிகையின் அருள் பெருகட்டும்

ஆரணி பூரணி அபிராமித் தாயே கடைக்கண் பாராயோ. ஆயிரம் கண் உடையாள் சீரணி மக்களின் துயரம் தீர்க்காயோ அபிராமித் தாயே. உன் பாதம் மலர் போட்டுத் தொழுவோம் அம்மா. வீதியில் உலாவும் பசுக்கள் எல்லாம் பால் அபிஷேகம் செய்ய நான் காணும் காட்சி எல்லாம் உள்ளம் சிலுசிலுக்க வைக்குதம்மா தாயே. மக்கள் குறை எல்லாம் தீர்ப்பாய் அம்மா. மக்கள் தூய்மையான-செயலாற்ற மக்கள் மழை பொழிய அருள் மக்கள் காட்சியளிக்க அருள் மழை பொழிய காற்றோடு காற்றாக வந்தாய் அம்மா. உன் பாதம் சரண் அடைந்தேன் அம்மா.

**தம்பையா பரஞ்சோதி**
**(ஆதீன கர்த்தா)**
*சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்*




### ... வரலாறு

... அமைந்துள்ள பதியில் வாழ் இன்புற்ற வேளாளகுலத்தைச் ... இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து ...ழுத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப் ...ல்வாகனம், பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் ...ி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ...ன் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் ...ய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை ... இம்முறைப்படி இன சன மக்கள் எல்லோரும் சேர்ந்து ...ரயினர் பரிபாலித்து வருகின்றனர்.

### வண்ணத் தேரேறி வலம் வரும் சீரணித்தாய்



அல்லல்கள் போக்கிடவே
அன்னையவள் தேர் ஏறி
நல்லவர் வாழ்வு பெற
நயமுடனே வலம் வருவாள்
சிங்காரத் தேரேறி
திருவீதி வலம் வந்திடும்
சீரணித்தாய் நாகபூசணியின்
சிரம் போற்றி அருள் பெறுவோம்.



**இ.சிறிதரன்**
*(தலைவர்) இந்து இளைஞர் மன்றம்*

## ...ப்புற வாழ்த்துவோர்

**MANIYAM IMPEX**
இல.75 (121A),
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**PKI TRAVELS**
யாழ் - கொழும்பு வான் சேவை
Tel : 0778445840, 0774018495

**YASO TEX**
பிரதான வீதி, நெல்லியடி.

**நவரத்தினம் ஸ்ரோர்ஸ்**
சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்

**பாக்கியரட்ணம் ஹாட்வெயர்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.

**தரன் ரேடர்ஸ்**
130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**ITALY TRAVELS**
யாழ் - கொழும்பு வான் சேவை
Tel : 0776272189, 0750686850

**ரஞ்சனிஸ் ஹாட்வெயர்ஸ்**
யாழ் வீதி, மருதடி விநாயகர் கோவிலடி, மானிப்பாய்.

**சீரணி நாகபூஷணி ரவல்ஸ்**
DS Office Lane, Sandilipay. Tel : 0778175822

**நாகபூசனி அரிசி ஆலை**

**ஐடியல் அக்கடமி**
தரம் 6 முதல் A/L வரை திறமையும் அனுபவமும்
வாய்ந்த ஆசிரியர் குழுவுடன்
தலைமையகம் : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.
கிளை 1 : இடைப்பிட்டி, காரைநகர்
கிளை 2 : கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், கிளை 3 : மானிப்பாய்

**ELITE ENTERTAINMENT & HOTEL**
A9, Road Chavakachcheri. Tel : 0212270500

எலைட் சோடா, பிஸ்கட் வகைகள்
**கலாபா இன்டஸ்றீஸ்**
வல்லை வீதி, சங்கானை

**உதயன் கட்டடப் பொருள் வாணிபம்**
பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட ஆட்சியாளர் விடுதலை



மாவோயிஸ்ட்டுகளால் கடத்திச் செல்லப்பட்டிருந்த சத்தீஸ்கர் மாநிலத்தின் சுக்மா மாவட்ட ஆட்சியாளர் அலெக்ஸ் பால்மேனன் நேற்று முன்தினம் வியாழக் கிழமை விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அலெக்ஸ் பால்மேனன் கடந்த 21 ஆம் திகதி மாவோயிஸ்ட்டுகளால் கடத் திச் செல்லப்பட்டார். 12 நாள்களுக்கு பின்னர் அவர் நேற்று முன்தினம் விடு தலை செய்யப்பட்டார்.

மத்தியஸ்தர்கள் சிலரால் நடத்தப் பட்ட சமரச முயற்சியை அடுத்து கிளர்ச் சிக்காரர் களின் கட்டுப் பாட்டில் இருக்கும் காட்டில் இருந்து மாவட்ட ஆட்சி யாளரான அலக்ஸ் போல் மேனன் மோட்டார் சைக் கிளில் வெளியே கொண்டு வரப்பட்டார்.

அலெக்ஸ் பால் மேனன் விடுதலையானதில் அவரது மனைவி ஆஷா மற்றும் அவரது பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

விவசாயிகள் மற்றும் வறிய பழங்குடியின மக்க ளுக்காக தாம் போராடு வதாகக் கூறிக்கொள்ளும் மாவோயிஸ்ட் கிளர்ச்சிக் காரர்களால், தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ஆள்கடத் தல்களில், இந்தக் கடத்தல் இறுதியாக நடைபெற் றுள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய உள்நாட்டுப் பாது காப்பு அச்சுறுத்தல் என்று இந்த மாவோயிஸ்ட்டுகளை இந்தியப் பிரதமர் மன் மோஹன் சிங் வர்ணித் துள் ளார். (வ)

## வாங்கிய லஞ்சமோ ரூ.250 தண்டனை ஒருவருட சிறை

குடிதண்ணீர் குழாய் இணைப்புக்கு ரூ.250 லஞ்சம் வாங்கிய சுகாதார ஆய்வாளருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

12 ஆண்டுகளுக்கு முன்னர் கடந்த 2000ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி ஷிவன்னா என்பவர் தன்னுடைய தாயார் கட்டி வந்த வீட்டுக்கு குடி தண் ணீர் இணைப்பு வழங்கு வதற்காக சுகாதார ஆய்வா ளராகப் பணிபுரிந்து வந்த பாபண்ணா என்பவர் ரூ.250 லஞ்சம் கேட்டார்.

அலுவலக வாசலில் லஞ்சப் பணம் பெறும் போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு லோக் ஆயுக்தாவின் கீழ் விசாரணை நடத்தப் பட்டு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் மூன்று பிரிவுகளில் தண் டனை விதித்தனர்.

அதன் படி முதல்பிரிவில் ஆறுமாதம் சிறைத்தண் டனை மற்றும் 2 ஆயிரம் ரூபா அபராதமும், அபராதத் தொகை கட்டதவறினால் கூடுதலாக 15 தினங்கள் சிறை தண்டனையும், இரண் டாவது பிரிவில் ஒருவருட சிறைத் தண்டைனையுடன் 5ஆயிரம் அபராதமும் விதிக் கப்பட்டது. (வ)

## இந்திய சினிமாவின் மதிப்பு 2014 இல் 5 பில்லியன் டொலர்

### அமெரிக்க நிறுவனம் தெரிவிப்பு

சென்னை, மே.5

இந்திய சினிமாவின் மதிப்பு 2014 ஆம் ஆண்டளவில் 5 பில்லியன் டொலர்களை எட்டும் என்று இந்தியாவில் இயங்கும் அமெரிக்க நிறுவனம் 'எர்னஸ்ட் அண்ட் யங்' தெரிவித்துள்ளது.

இந்திய சினிமாவின் தற்போதைய வர்த்தக மதிப்பு 3.2 பில்லியன் டொலர் ஆகும்.

எர்னஸ்ட் அண்ட் யங் நிறுவனம் உலக அளவில் வர்த்தகம் மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆலோசனை வழங்கி வருகிறது. இந்தநிறுவனம் இந்திய சினிமா குறித்த ஒரு அறிக்கையை வெளியிட் டுள்ளது.

அதில் ஹொலிவுட்டுடன் சேர்ந்து இயங்கினால் இந்திய சினிமா துறை மேலும் விரைவாகவும் பெரிய அளவிலும் வளர வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளது. மேலும், தற்போது இந்திய சினிமாத் துறையின் வளர்ச்சி 14 .1 சதவீதமாக இருப்பதாக இந்த நிறுவனம் தெரிவித் துள்ளது.

இந்தியாவில் சினிமா தற்போது பொழுதுபோக்கு, வினோதமான காட்சி, பயணம், மற்றும் சுற்றுலா, மற்றும் சினிமா கல்வி என பல துறைகளாக பரிணமிக் கிறது. இவ்வாறு வளர்ந்து வரும் சினிமா துறை ஹொலிவுட்டுடன் இணைந்தால் இதன் வளர்ச்சி மேலும் உயரும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் காங்கிரஸுக்கு மம்தா ஆதரவு

டில்லி, மே.5

ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுக் கும் நடவடிக்கைகள் தொடர் பாக, காங்கிரஸ் தலைவர் சோனியாவுடன் நேற்று முன்தினம் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆலோசனை நடத்தினார். அப்போது, காங்கிரஸ் சார்பில் பிரணாப் முகர்ஜி அல்லது ஹமீது அன்சாரி என, யார் நிறுத்தப்பட்டாலும், அவர் களை ஆதரிக்கத் தயார் என்று மம்தா பானர்ஜி தெரிவித் துள்ளார்.



இதன் மூலம், ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் தாங்கள் நினைத்ததைச் சாதிக்கும் சூழ்நிலை காங்., கட்சிக்கு உருவாகியுள்ளது. தற்போ தைய ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் பதவிக்காலம் வரும் ஜூலை 24 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து, புதிய ஜனாதி பதியைத் தேர்ந்தெடுப் பதற்கான நடவடிக்கைகள் விரைவாக இடம்பெறுகின்றன.

காங்கிரஸ் சார்பில் மத் திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியையோ அல்லது தற் போதைய துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரியையோ, வேட்பாளராக நிறுத்தப் பட்டால், அவர்களை ஆத ரிக்க மாட்டோம் என்று பாரதிய ஜனதா கட்சி கூறியது. ஆனாலும், பா.ஜ., தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தளமோ, மேற்கண்ட இருவரில் யாரை நிறுத்தி னாலும், ஆதரிக்கத் தயங்க மாட்டோம் எனக் கூறியுள்ள தோடு, இந்தப் பதவி விவ காரத்தில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டியது அவசியம் எனக் கூறியுள் ளது. இந்தநிலையில், ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளர் தொடர்பாக, பிரதமர் மன்மோகன் சிங்குடன் நேற்றுமுன்தினம் காலை, நாடாளுமன்ற வளாகத்தில் காங்., தலைவர் சோனியா ஆலோசனை நடத்தினார்.

அந்த ஆலோசனையின் போது, பிரணாப் முகர்ஜியும் உடனிருந்தார். இதன்பின் செய்தியாளர்கள் அவரிடம், ''ஜனாதிபதி வேட்பாளரைத் தேர்வு செய்வதில் குழப்பம் நீடிக்கிறதா?' எனக் கேட் கப்பட்டது. அதற்கு பதில ளித்த அவர், ''குழப்பம் எதுவும் இல்லை. பொறுமை யாக இருங்கள்; இன்னும் கால அவகாசம் இருக்கி றது,'' -என்றார். இதன் பின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் சோனி யாவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அப் போது, ஜனாதிபதி வேட் பாளர் பற்றி விவாதித் துள்ளதாகத் தெரிகிறது. இருந்தாலும், சோனியா விடம் பேசிய விவரங்களை வெளியிட மறுத்து விட்டார். ''மரியாதை நிமித்தமாகவே சோனியாவைச் சந்தித்தேன். அவரின் உடல் நிலை பற்றி கேட்டறியவே வந்தேன்' -என்றார். பிரணாப் அல்லது அன்சாரி என, இருவரில் ஒருவரை ஜனாதிபதி வேட் பாளராக காங்கிரஸ் நிறுத் தினால் ஆதரிப்பீர்களா எனக் கேட்ட போது,''நான் தான் வேட்பாளர்' என்று மம்தா கேலியாகத் தெரிவித்தார்.

இதேவளை காங்கிரஸ் வட்டாரங்களோ, ''ஜனாதி பதி பதவிக்கான வேட்பாளர் என, யார் பெயரும் இறுதி செய்யப்படவில்லை. பிரணாப் முகர்ஜியின் பணி, கட்சிக்கு முக்கியமானது எனினும், ஜனாதிபதி பத விக்கான போட்டியில் அவ ரும் உள்ளார்' எனத் தெரி வித்துள்ளன. (வ)

## தென்னாபிரிக்க சிறையில் காந்திக்குச் சிலை



சுமார் 100 ஆண்டுக ளுக்கு முன்பு காந்திஜி அடைக் கப்பட்டிருந்த தென்னா பிரிக்காவின் ஜோகன் னஸ் பர்க் பழைய கோட்டைச் சிறையில் தற்போது அவ ருக்குவைக்கப்பட்ட சிலையை இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

1908-1913 வரையிலான காலகட்டத்தில் 4 முறை இந்தச் சிறையின் 4ஆம் எண் அறையில் காந்திஜி அடைக் கப்பட்டிருந்தார். அதே இடத் தில் இப்போது அவருக்குச் சிலைவைக்கப்பட்டிருக்கிறது.

நிறவெறி ஆட்சி மாறிய பின்னர், தென்னாபிரிக்கா வின் அரசியல் சாசன நீதி மன்றமாக இந்தச்சிறை மாற் றப்பட்டுவிட்டது. (வ)



ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழுவின் தலைவர் கிரஹம் வாட்சன், தலைமைச் செயலகத்தில், முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார்.

## அரசியலில் களமிறங்கமாட்டேன்

### இராணுவத்தளபதி கருத்து

அனுமன்கர், மே.5

ஓய்வு பெற்ற பின்னர் அரசியலில் சேரும் எண் ணம் இல்லை என்று இராணு வத் தலைமைத் தளபதி வி.கே.சிங் தெரிவித்தார்.

இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங் இந்த மாதம் இறுதியில் ஓய்வு பெறுகிறார். தனது பிறந்த திகதி தொடர்பாக மத்திய அரசுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக, டட்ரா வாகன முறைகேடு, இராணுவத் திடம் போதிய ஆயுதங்கள் இல்லாதது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை அவர் ஏற்படுத்தினார்.



இதில், டட்ரா வாகன முறைகேடு பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், டில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட வி.கே.சிங்கிடம், ஓய்வு பெற்ற பிறகு என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்? என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர் பதிலளிக்க மறுத்து விட்டார். அரசியலில் சேரும் எண் ணம் உள்ளதா? என்ற மற் றொரு கேள்விக்கு, அப் படிப்பட்ட எண்ணமே எனக்கு இல்லை - என்றார். இராணுவத்தில் நடந்த முறை கேடுகள் பற்றிய கேள்வி களுக்கு, இராணுவத்தில் அண்மையில் நடந்த சம்ப வங்கள் மிகவும் சிக்கலா னவை. அவற்றுக்கு வெளிப் படையான அணுகுமுறை யில் தீர்வு காணப்பட வேண் டும் என்று பதிலளித்தார்.(வ)

# தீவிரவாத தடுப்பு நிலையம் குறித்து விவாதிக்க டில்லி செல்கிறார் ஜெ.

தேசிய தீவிரவாத தடுப்பு நிலையம் பற்றி விவாதிக்க தமிழகு முதல்வர் ஜெய லலிதா இன்று டில்லிக்குச் செல்லவுள்ளார் என்று தமி ழக அரசின் செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தீவிரவாதச் செயல்களை கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நட வடிக்கைகளை எடுத்து வரு கிறது. தீவிரவாதத்தை ஒழிப் பதற்காக, தேசிய தீவிரவாத தடுப்புமையம் அமைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்தது. இந்த நிலையம் அமைப்பது மாநில அரசுகளின் உரிமை யைப் பறிக்கும் செயல் என்று கூறி இதற்கு, முதலமைச்சர் ஜெயலலிதா, குஜராத் முத [illegible] பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது மிகவும் முக்கிய மான பிரச்சினை என்பதால், இது குறித்து தனியாக முதல மைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி விவாதிக்க வேண்டும் என்று மத்திய அரசை முதலமைச்சர் ஜெய லலிதா கேட்டுக்கொண்டார். இதேபோல், மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர் ஜியும் கோரிக்கை விடுத்தார்.

இந்தக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு, தேசிய தீவிரவாத தடுப்பு நிலையம் அமைப்பது பற்றி விவாதிக்க மே மாதம் 5 ஆம் திகதி (இன்று) தனியாக முத லமைச்சர்கள் மாநாடு கூட் டப்படும் என்று அறிவித்தது. அதன்படி, டெல்லியில் மாநாடு, இன்று நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்வதற் காக, முதலமைச்சர் ஜெயல லிதா டில்லிக்குச் செல்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரியம்மன் கோயில் மலர் – 05.05.2012





## அன்னை முத்துமாரியம்மன் வரலாறு

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திற்கு முன்பும் அவர்களது ஆட்சியின் பின்பும் நீராவிக்கப்பல் வரும் வரைக்கும் தென் இந்தியாவுக்கும், வட இலங்கைக்கும் இடையேயான தொடர்பு குறிப்பாக வல்வெட்டித்துறையின் துறைமுக வழியாகவே இருந்தது. இந்தியாவின் கோடிக்கரைக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையிலான சீரான கடற்பயணம் வல்வெட்டித்துறை மக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தென் இந்தியாவுக்கான தபால் போக்குவரத்தும் கூட வல்வெட்டித் துறை ஊடாகவே நடைபெற்றது.

இவ்வாறு தபால் போக்குவரத்து நடைபெற்று வந்த காலத்தில் ஒரு நாள் கோடிக்கரையில் இருந்து தபால் கொண்டு செல்வதற்கான வள்ளம் புறப்படுவதற்கு ஆயத்தமான போது, ஒரு வயோதிபப்பெண் வள்ளக்காரரின் முன் தோன்றி தன்னையும் வள்ளத்தில் கொண்டு சென்று இலங்கைக்கரையில் விடும்படி கேட்க ஆச்சரியப்பட்ட வள்ளக்காரன் இலங்கைக்கு எங்கே போகப்போகின்றீர்கள் ? என்று கேட்டதும் வல்வெட்டித்துறைக்கு போகவேண்டும் என்று அந்த வயதான மூதாட்டி கூறினார். அங்கே உங்களுக்கு யார் இருக்கின்றனர்? என்னவேலை ? என்ற அவர்களது வினாக்களுக்கு அந்த மூதாட்டியிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. எனினும் அதற்குப்பின்னர் எதுவுமே எவரும் பேசிக்கொள்ளவில்லை. அந்த மூதாட்டியுடன் வள்ள ஓட்டிகள் வல்வெட்டித்துறைக் கரையை அடைந்ததும் அந்த மூதாட்டி அவர்களுக்கு ஆசி கூறி அவர்களைப் பிரிந்து சிறிதுதூரம் சென்று மறைந்து விட்டார்.

அந்தச் சம்பவம் நடந்த சில நாள்களின் பின் தற்போது வல்வை முத்துமாரியம்மன் கோயில் கற்பக் கிருகம் இருக்கும் இடத்தில் இரவு நேரங்களில் ஒரு ஒளிக்கீற்று காணப்பட்டதாக அந்தப்பகுதி மக்கள் கூறி அந்தத்திசையை நோக்கி வணங்கி வந்தனர். அந்த வெளிச்சத்தைப் பலமுறை கண்டு பரவசமடைந்த வல்வை வாசி ஒருவர் அவ்விடத்தில் ஒரு சிறிய கொட்டில் கட்டி பக்தியுடன் பூசை செய்து வழிபட்டு வந்தார்.

இதுவே வல்வை முத்துமாரியம்மன் ஆலய வரலாற்றின் மூலமாகக் கருதப்படுகின்றது.

அந்த வகையில் நல்லூர் இராஜதானி உச்சம் பெற்றிருந்த காலத்தில் கூளங்கை சிங்கையாரியன் வந்த காலம் தொடக்கம் அம்பாளின் வணக்கமுறைகள் இடம் பெற்று வருகின்றன.

அம்மன் கோயிலின் வரலாறு கோயில்களின் இடாப்பில் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயில் 1795 இல் புண்ணியர் என்பவரால் கட்டப்பட்டது எனக் காட்டப் பட்டுள்ளது.

அன்று தொடக்கம் வல்வை மக்களால் காலத்திற்கு காலம் கோயில் கோபுரம் மற்றும் மண்டபங்கள் புனரமைக்கப்பட்டு, அழகூட்டப்பட்டு வந்து இன்று ஒரு இராஜதானி போன்று அற்புதமான கட்டடத்தில் அம்பாள் குடியிருந்து அருளாட்சி புரிந்து வருகின்றார்.

சித்திராபௌர்ணமியில் தீர்த்தோற்சவம் வரும் வகையில் நிகழும் 15 நாள் உற்சவம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஈழத்திலும், தமிழகத்திலும் வல்வை முத்துமாரியம்மன் வழிபாட்டிற்கும் என ஒரு தனித்துவம் இருப்பதை இன்று காணலாம். இன்று மூன்று அழகிய சித்திரத்தேர்களில் அம்பாள், முருகன், பிள்ளையார் ஆகிய தெய்வங்களுடன் காத்தவராயரும் வீதி உலாவரும் காட்சி அற்புதமாக இருக்கும். அன்னையின் வீதி உலா வருகை உலகத்தமிழினத்திற்கு அருள்பாலிக்கும் வருகையாக இருக்கவேண்டும்.

தொகுப்பு : ந. அனந்தராஜா
ஆதாரம்: வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் சரித்திரம்

## தேரேறி அருட்கடாட்சம் புரியும் அருள்மிகு வல்வை முத்துமாரியம்மன்



காலம் வரையறுத்துக் கூறமுடியாத பூர்வீகம் கொண்ட இந்தக் கோயிலின் சில குறிப்புக்களை ''வரலாற்றில் வல்வெட்டித்துறை'' எனும் நூலிலிருந்து அறியக்கூயதாக உள்ளது. அதன்படி இந்த ஆலயத்தில் கோயில் கொண்டிருக்கும் அம்மன் இந்தியாவின் தென்கோடிக் கடற்கரையிலுள்ள ''கோடியாக்கரை'' எனும் கிராமத்திலிருந்து மூதாட்டி வடிவில் வல்வை மக்களால் நடத்தப்பட்ட சிறிய பாய்மரக்கப்பல் சேவையினூடாக இங்கு வந்து உற்பத்தியானதாக அறியக்கிடக்கின்றது. பறங்கியர் ஆட்சிக்காலத்திற்கு முற்பட்டதாக கருதப்படும் இந்தக்கோயில் ஆங்கிலேயர் காலத்தில் அரச பதிவுகளுக்கு உள்ளானதாகவும் சான்றுகள் பகர்கின்றன.

இங்கு ஆண்டாண்டு காலமாக சித்திரை மாதத்தில் மிக ஆசாரமாக வல்வை மக்களால் சிறப்பாகவும் அயல் கிராம மக்களால் பொதுவாகவும் திருவிழாக்காலம் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. உலகில் வாழும் ஊர்மக்கள் ,இந்தக் காலத்தை தங்கள் புனித நாள்களாக கடைப்பிடிப்பதுடன் இந்நாள்களிலேயே தமது ஊருக்கு வந்துபோகும் சிறந்த காலமாகவும் கருதுகின்றனர்.

தேர்த்திருவிழாவை அடுத்துவரும் நாள் தீர்த்த திருவிழா நடைபெறுகிறது. இது ''இந்திரவிழா'' என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு ஒழுங்கையும், சகல வீதிகளும் விழாக்கோலம் கொண்டு இந்த விழாவை கொண்டாடுகின்றனர்.

இந்திரவிழாவில் புகைக்கூண்டு, மின்சார விளக்கு அலங்காரங்கள் மற்றும் வானளாவிய (திரு) உருவ அமைப்புக்கள் (CUTOUTS) என்பனவற்றைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் பல திசைகளிலிருந்தும் வருகை தருவது வழக்கம்.

போர்ச்சூழ்நிலையால் பல தடங்கல்கள் ஏற்பட்டபோதும் வருடாந்த திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எல்லா மக்களும் எவ்வித பேதமும் பாராட்டாது தொடர்ந்து வல்வை மண்ணின் ஒற்றுமையைக் காப்பாற்ற எல்லாம் வல்ல அன்னை முத்துமாரியம்மன் அருள்புரிவாராக.

**R.T Jayaseelan (பிரதேச செயலர்)**
**பிரதேச செயலகம், வடமராட்சி, பருத்தித்துறை.**

## அன்னை முத்துமாரியின் அருள் பரவுவதாக



''வந்தாரை வாழ வைக்கும் வல்வை மண்''

என்று போற்றிப் புகழப்படும் வல்வெட்டித்துறை நகரத்திற்குப் பெருமை சேர்க்கும் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் அன்னை முத்துமாரியம்மன் ஆலய உற்சவம் ஆரம்பித்துவிட்டால், ஊரே பக்தி மயமாகும்.

தாயகத்தில் வாழ்கின்ற எமது உறவுகளையும், புலம் பெயர்ந்தும் வல்வையின் நினைவால் வாழ்கின்ற எமது உலகத் தமிழ் உறவுகளையும் ஒன்றிணைக்கவும், பிரிந்து பிரிந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்கின்ற உறவுகள் ஒன்று சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடவும் அன்னையின் வீதி உலா வருகை வழி ஏற்படுத்திக்கொடுக்கின்ற புனிதமான நாள்களாக வல்வை முத்துமாரியம்மன் உற்சவ காலம் விளங்குகின்றது.

தினமும் ஆலயத்தில் நடைபெறும் பூசை முறைகளும் உற்சவகால திருவிழா முறைமைகளும் எமது மக்களைப் பக்திப் பரவச நிலைக்குக்கொண்டு செல்வதை அம்மன் ஆலய வீதிகளில் காணலாம்.

உற்சவ காலத்தில் நடைபெறும் வேட்டைத் திருவிழா, பூங்காவனம் மற்றும் சங்ககாலத் தமிழர் வாழ்வை நினைவூட்டும் வகையில் நிகழ்த்தப்படும் புலிவேட்டைத் திருவிழா, ஊறணி தீர்த்தக் கடற்கரையில் கோலாகலமாகவும், பக்திமயமாகவும் நிகழும் இந்திர விழா என ஒவ்வொரு உற்சவமும் வல்வெட்டித்துறையின் தனித்துவத்தையும், மக்களின் ஒன்றுபட்ட பக்தி உணர்வையும் வெளிக்காட்டும்.

இன்று நடைபெறும் அம்பாளின் தேர்த் திருவிழாவில் எமது உறவுகள் ஒன்று சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடி எங்கள் முத்துமாரித் தாயை வணங்குகின்ற இந்த நாளில் வல்வை நகராட்சி மன்றத்தின் சார்ப்பில் வல்வை நகர மக்களுக்கும், உலக இந்துக்களுக்கும் எதிர்கால சுபீட்சமான வாழ்வுக்கான அனுக்கிரகம் கிடைக்கவேண்டு மென்று ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

எங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் நீடித்த மகிழ்ச்சியும், ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தும் மனப்பக்குவமும், அமைதியும், சாந்தியும் என்றும் கிடைக்க இன்று தேரேறிவரும் அன்னை முத்துமாரி அம்மன் அருள் பாலிப்பாராக.

ந. அனந்தராஜ் (நகர பிதா)
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்தம் ஆடிவரும் வாசல்பாட்டு

வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
மேடையிது மேடையிது எங்கள் மெல்லியலாளுடை மேடையிது
நாங்கள் பூசைபண்ணி அநுதினமும் புகழ்ந்தேற்றும் மாரி வாசலிது
ஆயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் அலங்காரி வரும் வாசலிது
பதினாயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் பராசக்தி வரும் வாசலிது
வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடை வாசலிது

கங்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் கிளிமொழியாள் வரும் வாசலிது
வைகையிலே மாரி தலைமுழுகி எங்கள் வனமயிலாள் வரும் வாசலிது
பொய்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் பூங்கொடியாள் வரும் வாசலிது
சித்திரை பறுவத்திலே அம்மன் தீர்த்தமாடி வரும் வாசலிது
வீதிசுத்தி பவனிவரும் எங்கள் மேகவண்ணன் தங்கை வாசலிது
வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது

உலகளந்தோன் தங்கையராம் அம்மன் உத்தமியாள் வரும் வாசலிது
கோடியா கரையை விட்டு இங்கே குதித்துவந்தாள் வரும் வாசலிது
அரனுடனே வாதாடும் எங்கள் ஆங்கார மாரி வாசலிது
சிவனுடனே வாதாடும் எங்கள் தேவி நல்லாளுடைய வாசலிது
வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது.

## மாரியே தேரேறி வந்துவிட்டாய்

வரம் தருவாய் வல்வை முத்துமாரி....
எனக்கொரு வரம் தருவாய் வல்வை முத்துமாரி....
வாட்டமுடன் வாடும் தனியனுக்கு நீ....
வரம் தருவாய் வல்வை முத்துமாரி.... (வரம் தருவாய்)

உலகெங்கிலும் உனைப்போல் கண்டதில்லைத் தாயே....!
உன்னழகும், உன்பூஜையும் தனித்துவம் தானம்மா....!
கண்ணழகும், கன்னக்குடுமியும், கனகாம்பர
மாலையும்....!
பொன்னழகும் மிகச்சேர்ந்துமே பெருமை யென்று
முடையவளே....! (வரம் தருவாய்)

காலையும் மாலையும் உனைத் துதித்தேனம்மா
சிலையாக இல்லாமல் என் தாயாகத் தேர்ந்துவிட்டேன்
அலைபாயும் மனதடக்கம் பயின்றேனே உந்தனிடமே!
மலைத்தேனே! உன் பேரழகினை அகக்காட்சியில்
கண்டதனால். (வரம் தருவாய்)

ஆழியிலே பள்ளி கொள்ளும் ஆயன் சோதரியே!
சூலியே! மாரியே! தேரேறி வந்துவிட்டாய்
கலியுகத்துக் கொடுமைகள் கரைபுரண் டோடுதம்மா,
ஊழித் தாண்டவமாட பெருந்தவசு நோற்கும் வல்லவளே.
(வரம் தருவாய்....)

ஸ்ரீவாணிசிவகுமாரன்


எமது ஒருங்கிணைந்த சேவைகளாக
O/L, A/L எடுத்த மாணவர்களுக்கு India, UK ஆகிய நாடுகளில் கல்விகற்க உடனடி அனுமதிகள், Student Visa எடுப்பது தொடர்பான அனைத்து வகையான ஆலோசனைகள்
IELTS, Key English Test, O/L English மற்றும் இலகு சிங்களம் ஆகிய பாடங்களுக்கான கற்கைநெறிகள்
சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள், பிரயாண திகதி மாற்றுதல் (Ticket date change)
பிரயாண திகதியை மீள் உறுதிப்படுத்தல்.(Ticket date confirmation)
India, Thailand, Malaysia, England போன்ற நாடுகளுக்கு சுற்றுலா Visa ஏற்பாடுகள்
சகல நாடுகளுக்குமான பொதிகள் சேவை. (Courier Service)
சகல விதமான கணினிகள், கணினி உதிரிப்பாகங்கள் விற்பனை.
V2 TRAVELS & TOURS (Pvt) Ltd,
No: 23, Modern Market, Valvettithurai.
Tel: 0773867257

அம்பாள் அருள்பெற்று இன்பம் அடைவோம்.அனைத்து வகை மருந்து, பால்மா, இதர பொருள்களுக்கும்
R.V.G MEDICALS
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.Dமுன்பாக) யாழ்ப்பாணம்.
R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

அம்பாளின் இரதோற்சவத்தில் தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகளாக அம்பாளின் அற்புதங்களடங்கிய நூல்களை இலவசமாக விநியோகிக்க வரமருளிய அன்னைக்கு இருகரம் கூப்பி வணக்கம்
ஸ்ரீவாணி வெளியீட்டகம்
வன்னிச்சி அம்மன் கோவிலடி
வல்வெட்டி- 0778285...

KMC Kobika Multi Centre
Grocery, Fancy, Food & Drinks, School Itms, Electrical
Alady, Valvettithurai. Tel:021 226 5101
எம்மிடம் சகல விதமான வீட்டு உணவுப் பொருள்கள் பாடசாலை மாணவர்களின் பொருள்கள், விளையாட்டு உபகரணங்கள், பன்சி பொருள்கள் என பலதரப்பட்ட பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள.

24 மணித்தியால சிகிச்சை பெற்றுக்கொள்ள
WELWISH MEDICAL CENTRE
குமரக் கோட்டம், ஆலடி, வல்வெட்டித்துறை.

அலங்காரத் தேர் மீது ஏறி வலம் வரும் அன்னை வல்வை முத்துமாரியம்மன் அனைவருக்கும் அவல வாழ்க்கை நீங்கி அமைதி திரும்ப அருள வேண்டும்.
சிவகாமி இரும்பகம்
கட்டடப் பொருள்கள், பெயின்ட் வகைகள், ... விற்பனையாளர்.
யாழ் வீதி, வல்வெட்டித்துறை T.P: 0779382357


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் பிடிவாதமாகச் செயற்படுவதன் மூலம், சில நட்டங்களைச் சந்திக்க வாய்ப்பு உண்டு. சற்று, எதிலும் புரிந்து செயற்படுங்கள். பணவரவுகள் சீராக இருக்கும். தொழிலாளர்கள், நிர்வாகத்தினரை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**இடபம்:** எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். கடன் பிரச்சினைகளால் சங்கடங்களுக்கு ஆள்படலாம். தொழிலில் கவனக் குறைவுகளால், சில தவறுகளைச் சந்திக்க நேரலாம். பண விடயங்களை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**மிதுனம்:** மனநிலையில் ஏற்படும் உற்சாகத்தால் கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். விலகிப் போன நண்பர் ஒருவர், மீண்டும் உங்கள் நட்பை நாடி வருவார். பெண்கள் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** வசதியான வீடு, வீடு மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். தொழில் தொடர்பான விவகாரங்களில் விழிப்புடன் செயற்படுதல் அவசியம். உத்தியோகத்தர்கள் முன்னேற்றமான பலன்களைக் காண்பர். வெளிநாட்டுத் தொடர்புகளால் அனுகூலம் உண்டு.

**சிங்கம்:** புதிய தொழில் முயற்சிகளில் சாதகமான பலன்களைக் காணலாம். அலுவலகப் பணிகளில் நிலவிய வெறுப்பு, விரக்தி அகலும். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நிலவிய சச்சரவுகள் தீர்வுக்கு வரும். தம்பதியரிடையே ஒற்றுமை, அன்னியோன்யம் கூடும்.

**கன்னி:** மறதியின் காரணமாக சிக்கல்கள் ஏற்பட்டபோதும் அதை சாதுர்யமாகச் சமாளித்து வெற்றி காண்பீர்கள். கௌரவத்தை பாதிக்கும் செயல்களில் ஈடுபட வேண்டாம். தொழில் ரீதியான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவீர்கள்.

**நாளை**

சித்திரை 24 ஞாயிற்றுக்கிழமை 06.05.2012
திதி: பூரணை மு.ப 09.53 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.இ 04.53 வரை
சுபநேரம்: 08.55- 10.25 வரை
ராகு காலம்: 04.25- 05.55 வரை

**துலாம்:** வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். பெண்களால் உதவிகள் பெற்று உற்சாகம் பெறுவீர்கள். தொழிலில் லாபம் கூடும். சில விவகாரங்களில் மாறுபட்ட பலன்களைக் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பணியில் எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்ட போதும் அதை பொருட்படுத்தாமல் செய்து முடிப்பீர்கள். ஆசைகள், எண்ணங்கள் நிறைவேறும். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** ஒரு முடிவோடு எதிலும் செயற்பட எண்ணுவீர்கள். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் இருக்கும். இல்லறத் துணையின் முரண்பாடுகள் சில காரியங்களை முடிக்க இடையூறாக இருக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு முயற்சிகள் சாதகமாக அமையும்.

**மகரம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். நிதி நிலைமையில் ஏற்பட்ட பற்றாக்குறைகள் தீரும். பெண்கள் முன்னேற்றம் காணலாம். தொழிலில் புதிய ஒப்பந்தங்களுக்கு அவசரப்பட வேண்டாம். தெய்வ வழிபாடு மன நிறைவு தரும்.

**கும்பம்:** பிரச்சினைகள் குறைந்து மனதில் நிம்மதி, குதூகலம் அதிகரிக்கும் நாள். வழக்கு விவகாரங்களில் இழுபறி காணப்படும். உறவு வகையில் சில ஆதாயங்களை எதிர்பார்க்கலாம். உத்தியோகத்தில் உழைப்பு கடுமையாகும்.

**மீனம்:** திடீர் பணவரவு ஏற்படும். புது விதமாக சில பிரச்சினைகளைச் சந்தித்தபோதும், அதிலும் சாமர்த்தியமான செயற்பாடுகளை வெளிப்படுத்துவீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தொழில் தொடர்புகள் விரிவடையும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 1 | 5 | 2 | 3 | |
| | 4 | 2 | | 6 | | | | |
| | 3 | 5 | | 8 | | | 4 | 7 |
| | | 3 | | | 1 | | | 6 |
| | 2 | | | | | | 1 | |
| 5 | | | 6 | | | 3 | | |
| 2 | 7 | | | 3 | | 4 | 6 | |
| | | | | 7 | | 1 | 5 | |
| | 5 | 9 | 1 | 2 | 4 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 8 | 5 | 7 | 9 | 4 | 1 | 3 |
| 5 | 9 | 4 | 3 | 2 | 1 | 7 | 8 | 6 |
| 1 | 7 | 3 | 8 | 6 | 4 | 5 | 2 | 9 |
| 2 | 3 | 9 | 7 | 1 | 8 | 6 | 5 | 4 |
| 7 | 8 | 6 | 4 | 5 | 2 | 9 | 3 | 1 |
| 4 | 5 | 1 | 6 | 9 | 3 | 2 | 7 | 8 |
| 9 | 6 | 7 | 1 | 3 | 5 | 8 | 4 | 2 |
| 8 | 1 | 2 | 9 | 4 | 7 | 3 | 6 | 5 |
| 3 | 4 | 5 | 2 | 8 | 6 | 1 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஆறாம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## செல்வி கணபதிப்பிள்ளை கலாமதி (அபிராமி)

(இ.போ.ச.கணக்காய்வாளர், வவுனியா)

**பிறப்பு** 02.12.1981 திதி:- சித்திரை பூர்வபக்க அட்டமி **இறப்பு** 05.05.2006

எம் இல்ல அகல் விளக்கொளியில்
தினம் தினம் நிழல் உருவாய் நித்தம் ஆடும்
எம் பாச அபிக் குட்டியே, தவப் புதல்வியே
உன் நிஜ உருவைக் கண்டு
ஈர் மூன்று ஆண்டுகள் ஆனதம்மா
இற்றைவரை எங்கள் மனம் ஆறவில்லை
உந்தன் பிரிவை எண்ணி
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைக்
கண்ணீர் பூக்கள் சொரிந்து பிரார்த்திக்கின்றோம்.

**நன்றி நவிலல்**

29.04.2012 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற நினைவுப் பிரார்த்தனையில் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்த எம் அன்பு உள்ளங்களுக்கு எமது குடும்பத்தின் சார்பில் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அண்ணிமார், மருமகன்கள்.
கணபதிப்பிள்ளை,
சிறிமூர்த்தி அகம், கந்தசாமி கோயிலடி, நீர்வேலி.

(17418)(2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முத்துமாரி அம்மன் துணை



# வல்வையின் இந்திர விழா

வரலாற்றுச் சிறப்புமிக்க
வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால்
நாளைய தினம் இரவு (06.05.2012 ஞாயிற்றுக்கிழமை)
மிகச் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

# இந்திர விழா

- ★ சமநேரத்தில் 7 மேடைகளில் நிகழ்வுகள்
- ★ 3½ கிலோ மீற்றர் தூரத்துக்கு வீதிச் சோடனைகள்
- ★ வானுயர தெய்வ உருவங்கள் (போட்டிக்கோ)
- ★ அதி உச்ச மின் அலங்காரங்களுடன் மின்னொளிகள்
- ★ புகைக்கூடுகள் வான் நோக்கிப் பறக்க விடுதல்

என்பவற்றுடன் இன்னும்பல கண்கவர் காட்சிகளும், நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு: 3 பிரதான வீதியிலும் சைக்கிள் உட்பட வாகன பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**வல்வை மக்கள்**

# கணபதி
## மின் அமைப்பாளர்கள்
## நெடியகாடு – வல்வெட்டித்துறை



கணபதி மின் அமைப்பாளர்களின் மின் அலங்காரங்கள் உட்பட மிகப் பிரமாண்டமான மின்னொளிச் சேவையை நாளைய தினம் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் நடத்தப்படவுள்ள இந்திர விழாவில் கண்டு மகிழலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

கணபதி மின் அமைப்பாளர்கள்
நெடியகாடு - வல்வெட்டித்துறை.
தொடர்புகளுக்கு: இ. சண்முகதாஸ், தொ.பே. 0777212846
மின்னஞ்சல்: www. nediyakadu.com.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹெரோயின்' வலையமைப்புக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே. 5

ஹெரோயின் விநியோகிக்கும் வலையமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த ஐவருக்கும் யாழ். நீதிமன்றினால் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 28 ஆம் திகதி யாழ். பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து பிரதான நபரான பேபியனைக் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து ஏனைய நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட 3ஆம், 4ஆம், 5ஆம் சந்தேகநபர்கள் யாழ். நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். 2 ஆவது சந்தேகநபர் பொலிஸ் விசாரணையிலிருந்து நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. முதலாவது சந்தேகநபர் பொலிஸ் விசாரணையில் உள்ளார். அவர் எதிர்வரும் 8 ஆம் திகதி மன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (10-4)

# சந்தேகநபர்கள் இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே. 5

பணக்கொடுக்கல் வாங்கல் முரண்பாடு காரணமாக கைகலப்பில் ஈடுபட்ட இருவரையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்வேலியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டனர். கோப்பாய்ப் பொலிஸார் சந்தேகநபர்களை யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தினர். அதன் போதே இருவரையும் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது.

(10-4)


## நெல்லியடியில் கணினி நிறுவனத்தில்

வேலை வாய்ப்பு
VACANCIES

**கணினிப் போதனாசிரியர்**

கணினி டிப்ளோமா கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம் இல்லாதவர்களுக்கு ஊதியத்துடனான இலவசப்பயிற்சியுடன் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

**வரவேற்பாளர்**

G. C. E A/L or O/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம். 4355
உதயன் பப்பிளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# பௌர்ணமி விரதம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் இன்று சனிக்கிழமை சித்திரா பௌர்ணமி விரத விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன. பல இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகளுடன் சித்திர புத்திர நாயனார் கதை படிக்கப்பட்டு கஞ்சி வழங்குதல் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (ம-8)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே. 5

நிலாமுற்றம் சிறப்புக் கருத்தரங்கு இன்று மாலை 6மணிக்கு 'நேஷன் பொப்புலர் ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ்' இன் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

''தேசிய சமூக வாழ்வியல் முன்னேற்றத்துக்கு சீதனம் அனுகூலமாய் உள்ளதா'' எனும் தொனிப் பொருளிலான இந்தக் கருத்தரங்கை ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், பொருளியல் துறை கலாநிதி எஸ். சந்திரசேகரம், தாயகம் சஞ்சிகை ஆசிரியர் கே. தணிகாசலம் ஆகியோர் தலைமையேற்று நடத்தவுள்ளனர். (10-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி தங்கராசா



தவசிக்குளம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நாகராசா நேற்று (04.05.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 1.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் லக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் நாகராசாவின் (குணரத்தினம்), அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், நாகேஸ்வரன் (கட்டார்), ஆனந்தி, தனுஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருளானந்தம் (கட்டார்), ஜெனதாசன் (இத்தாலி), சிவகலா (ஆசிரியை, கிளி/முகாவில் அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விமலினி (A/L, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), லக்சிகன், லக்சனா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2012) சனிக்கிழமை ஐயனார் கோயிலடி கொடிகாமத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் தகனத்திற்காக கொடிகாமம் வேவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்

## தாமோதரம்பிள்ளை கந்தவனம்

(முன்னாள் இ.போ.ச. சாரதி- காரைநகர்)



நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஒன்ராறியோ- கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கந்தவனம் கடந்த (02.05.2012) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் பாலேஸ்வரின் அன்புக் கணவரும், துரைசிங்கம் (கனடா), காலஞ்சென்ற துஷ்யந்தன் மற்றும் துவாரகன் (லண்டன்), துர்க்கா லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகலா (கனடா), சுபாசினி (லண்டன்), சிவபஞ்சதரன் ஆகியோரின் அன்பு மாமனும், தர்ஷித் (கனடா), பிரகீஷா (கனடா), நிரோஷன் (கனடா), சிந்துரா (கனடா), மாதுளா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கண்ணகைப்பிள்ளை, வைத்திலிங்கம், செல்லம்மா மற்றும் அன்னமுத்து, காலஞ்சென்ற ஆச்சிமுத்து மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் தேவபாலன் (ஜேர்மனி),சந்திராதேவி (கிராமசேவையாளர் - நுணாவில் மத்தி), இந்திராதேவி (லண்டன்) செல்வரதி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும்சாந்தினிதேவி (ஜேர்மனி),கனகேஸ்வரி, தேவகாந்தன் (லண்டன்), சுமித்திரா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.05.2012) திங்கட்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
து. சிவபஞ்சதரன்
(மருமகன்)


## விஷேட ஆங்கில வகுப்பு

★ சரளமான ஆங்கில பேச்சு பயிற்சியும்
★ இலகு முறையில் இலக்கணமும்
அனைத்து வயதினருக்கும் அடிப்படையில் இருந்து சிறப்பாக கற்பிக்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 077 7070711
(யாழ்.இந்து கல்லூரி அருகில்)

## தவறி விட்டது

திருநெல்வேலிக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில், பசுபதி புவீந்திரன் என்பவருடைய வாகன வரிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், கணக்குக் கொப்பி, சிறுதொகைப் பணம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 0775973045

## தேவை

நகரை அண்டியுள்ள மருந்தகத்திற்கு விற்பனையாளர்கள்தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:
075 2431018 / 075 4300276

## வான் விற்பனைக்கு/ குத்தகைக்கு

NKR Isuzu High Roof 252 - xxxx
நல்ல நிலையிலுள்ள வான் விற்பனைக்கு அல்லது வியாபார நிறுவனங்களுக்கு குத்தகைக்கும் உண்டு.
(லீசிங் வசதியும் செய்து தரப்படும்)
தொடர்பு : 077 4683316,
077 2410327

## விற்பனைக்கு உண்டு

1. NPVV - xxxx - Passion Pro
மோட்டார் சைக்கிள்
2. 270 - xxxx - உழவு இயந்திரம் -
Massey Ferguson (UK)
நல்ல நிலையிலுள்ள மேற்குறிப்பிட்ட வாகனங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் திங்கள் - வெள்ளி மு.ப. 9.00 பி.ப 4.00 வரை அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.
T.P.: 021 2221808
Trade Finance and Investments PLC



## வட்டுக்கோட்டை சங்கரத்தை
## பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலயம்
## மகா கும்பாபிஷேகம்

யாகாரம்பம்: 05.05.2012 சனி மாலை

எண்ணெய்க்காப்பு
பால்காப்பு
06.05.2012 ஞாயிறு
காலை 7.00 மணி
மாலை 5.00 மணிவரை

மஹாகும்பாபிஷேகம்
07.05.2012 திங்கள் காலை
9.15 - 10.30 மணி வரை உள்ள சுப முகூர்த்தம்.
பிரதமகுரு வாகீசவாரிதி, முத்தமிழ்குருமணி
நா.சர்வேஸ்வரக்குருக்கள் (சுன்னாகம்).

அம்பாள் பணியில்
புனருத்தாரண சபையினர்.
(வி/1434) (2-6-9)


## சேவை நலன் பாராட்டு

திருமதி
சுசீலா
சிலுவைதாசன் சோசை
(S.L.T.S - I)



தி/சேனையூர் மகாவித்தியாலயம் - 2 வருடங்கள்
வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம் - 3 வருடங்கள்
ம/முருங்கன் மகாவித்தியாலயம் - 5 வருடங்கள்
யா/வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி - 2 வருடங்கள்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி - 18 வருடங்கள்

சீரோங்கும் யாழ்ப்பாணத்தில் சிறப்புடனே அவதரித்து
நல்லைக்கந்தன் அருளினாலே நற்றமிழை நயந்து கற்று
பல்கலைக்கழகமதில் பல்கலையும் தான் பயின்று
பாரிலுள்ளோர் போற்றும் வண்ணம்
ஆசிரிய சேவையில் அர்ப்பண சிந்தையோடு
பணிகள் பல புரிந்து
மாணவ சமூகத்தை மாண்புடனே உருவாக்கி
தமிழையும் வரலாற்றையும் தரமாகவே கற்பித்து
மாணவரின் உயர்வு கண்டு மனமிக மகிழ்ந்த
சுந்தர வதனம் கொண்ட மங்கை மாதருள் நல்லாள் - சுசீலா
பணியின்று ஓய்வு பெறும் இவ் வேளை
நலங்கள் பல பெற்று சுகமாய் வாழ
நலம் தரும் விநாயகனை வேண்டுகின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி




## திருநாள்
## திருப்பலியும் நிகழ்வுகளும்

முல்லைத்தீவு இரணைப்பாலை
## புனித பற்றிமா அன்னை

ஆலய திருநாளை முன்னிட்டு
இரணைப்பாலை செ்ன் அன்ரனீஸ்
விளையாட்டுக் கழகத்தினால்
இரணைப்பாலை பொது அமைப்புகளின்
அனுசரணையுடன் விளையாட்டுப் போட்டியும்,
கலை நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன.
அன்னையின் திருநாள் திருப்பலி (13.05.2012) காலை 7மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் அதனைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

### காலை நிகழ்ச்சி

01. ஆண்களுக்கான 70 Km தூர சைக்கிள் ஓட்டம்
02. பெண்களுக்கான 30 Km தூர சைக்கிள் ஓட்டம்
03. ஆண்களுக்கான 15 Km தூர மரதன் ஓட்டம்

மாலை மைதான நிகழ்வுகளும் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
விளையாட்டுப் போட்டியில் பங்குபெற விரும்புவோர்
12. 05. 2012 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பத்தினை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 3454 583
077 4688 422
077 0365895

சென். அன்ரனீஸ்
விளையாட்டுக் கழகம்.
(17698) (6.9.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பல்கலைப் பதிவாளரை இடம் மாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

எருவில்,மே5

மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் கற்றல் நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சிரேஷ்ட உதவிப் பதிவாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிரேஷ்ட உதவிப் பதிவாளரினால் எந்த விதமான அபிவிருத்தி வேலைகளும் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெறவில்லை. அத்துடன் மாணவர்களின் நலன்களில் இவர் அக்கறை செலுத்தவில்லை. இதனாலேயே குறித்த உதவிப் பதிவாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவ தாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தருடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழக வேலை நிமித்தம் தற்போது கொழும்பில் தங்கியுள்ளேன். மட்டக்களப்பு திரும்பியவுடன் குறித்த பிரச்சினை தொடர்பில் மாணவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளேன் - என்றார்.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் புதிய பணிப்பாளர் கலாநிதி எம்.பிரேம்குமாரை தொடர்புகொண்டு கேட்டபோது:-

கூட்டமொன்றுக்காக கொழும்பில் தங்கியுள்ளேன். இந்த மாணவர்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றேன். இந்த நிலையத்தின் பணிப்பாளராக நான் பதியேற்று ஒருவாரமே கடந்துள்ள நிலையில் மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற கால அவகாசம் தேவை- என்றார்.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் கடந்த மாதம் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். இதனையடுத்து பணிப்பாளர் இடமாற்றப்பட்டு புதிய பணிப்பாளராக கிழக்கு பல்கலைக் கழக முன்னாள் பதில் துணைவேந்தர் பிரேம்குமார் அண்மையில் நியமிக்கப்பட்டார் குறிப்பிடத்தக்கது. (ச)

# விகாராதிபதிக்கு அச்சுறுத்தல்

மட்டக்களப்பு,மே 5

மட்டக்களப்பு, மங்களாராம விகாராதிபதியைக் கடத்தி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெல்லாவெளி பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட நபர்கள் தன்னைக் கடத்தினர் என்று விகாராதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

சிங்களவர்களின் காணி விவகாரங்களில் தலையீடு செய்ய வேண்டாம் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த பிரதேசசபைத் தலைவர் உள்ளிட்ட நபர்கள் அச்சுறுத்தல் விடுத்தனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிங்கள மக்களின் காணிகளை தமிழ் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# லொறி – பஸ் மோதி விபத்து ஒருவர் சாவு: 30 பேர் காயம்

கலஹெதர,மே 5

பாதுக்க, கலஹெதர பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 6 மணிக்கு இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பஸ் வண்டி ஒன்றும் லொறி ஒன்றும் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஹோமாகம மற்றும் பாதுக்க வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் எனவும், அவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஆலோசகர்கள் கவனித்தால் அடைவுமட்டம் அதிகரிக்கும்

## அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

எருவில்,மே 5

மாணவர்களின் அனைத்து விடயங்களிலும் ஆசிரிய ஆலோசகர்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகின்றபோதுதான் மாணவர்களின் கல்விமீதான அடைவு மட்டம் அதிகரிக்கும் என்று அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேய்க் ஏ.எல். எம்.காசீம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரிய ஆலோசகர்களை வரவேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவீன உலகின் சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய, சமூகவிழுமியமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதானால் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் வலயக் கல்வி அலுவலக கல்வி தொடர்பான அதிகாரிகளும் இணைந்து உந்து சக்தியாக அமைகின்றபோதுதான் இது சாத்தியமாகும்.

வெறுமனே ஆசிரியர்களை மட்டும் கண்காணித்து விட்டு கடமை முடிந்துவிட்டது என்றிருக்காமல் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஆசிரிய ஆலோசர்கள் தங்களது கடமை தவறாத மனிதாபிமான நோக்குடன் சேவையாற்றுதல் நன்மை பயக்கும். அத்துடன், மாணவர்களது மேம்பாட்டுக்குத் தம்மாலான அனைத்து உதவிகளையும் புரிதல் வேண்டும் - என்றார். (ச-31)

# ஓட்டோ திருடியதாக முறைப்பாடு

அக்குறணை,மே5

அக்குறணை நகருக்கு அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்ட ஓட்டோ திருடப்பட்டுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அக்குறணை நகரிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் நிறுத்திவைக்கப்பட்ட ஓட்டோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பார்த்தபோது காணாமல் போயிருந்ததாக ஓட்டோ உரிமையாளர் பொலிஸிடம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் புனரமைக்கப்பட்ட கடற்கரையோர நான்காம் குறுக்கு வீதி திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதேசசபை தவிசாளர் புவிராஜன், கிராம அலுவலகர் சிவகுமார் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்த நிதி

அம்பாந்தோட்டை,மே 5

அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்த நெதர்லாந்து அரசு நிதியுதவி வழங்கத் தீர்மானித்துள்ளது.

13 மில்லியன் ரூபாவை நெதர்லாந்து அரசு வழங்கவுள்ளது. இந்த நிதியைக் கொண்டு அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் 850 கட்டில்களுடன் கூடிய புதிய கட்டடம் ஒன்றும் நுவரெலியா வைத்தியசாலையில் 800 கட்டில்களைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. (ச)

# மதுபான நிலையம் முற்றுகை

பதுளை,மே5

பதுளை - மொரகொல்லவத்தை பகுதியில் சட்ட விரோதமாக நடத்தப்பட்டு வந்த மதுபான உற்பத்தி நிலையம் ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டுள்ளனர். இதன்போது ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இடத்தில் இருந்து சட்டவிரோத மது 30 லீற்றர், கோடா 150 லீற்றர் மற்றும் மது தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்கென சந்தேகநபர் பதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு நேரில் வருகை

## நலத் திட்டங்களைப் பார்வையிட்டனர்

மட்டக்களப்பு,மே 5

பாதிக்கப்பட்ட உங்களது பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் உதவி செய்கிறோம், அதே போன்று எங்களது நாடுகளுக்கு உதவிகள் தேவைப்படும் போது ஒத்துழைப்புக்களைத் தர வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் மட்டக்களப்பு மாவட்ட மக்களிடம் கேட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்ற ஐரோப்பிய ஒன்றியப் பிரதி நிதிகள் மக்களிடம் இதனைத் தெரிவித்தனர்.

தெற்காசிய நாடுகளுடனான நட்புறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், இயற்கை இடர்களால் ஏற்பட்ட பாதிப்புக்களை மீளமைப்பு செய்வதற்கும் என தாங்கள் வழங்கிய உதவியை மதிப்பிடும் நோக்கில் இந்த ஐரோப்பிய பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர்.

''கடந்த வருடம் நாங்கள் வருகை தந்தபோது மட்டக்களப்பு மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அபிவிருத்தியைக் கண்டுள்ளது. எதிர் காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் தேவைகளை நிறைவு செய்வதற்கான திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா'' என்றும் அவர்கள் மக்களிடம் கேட்டுக் கொண்டனர்.

சந்திப்பில் கலந்து கொண்ட மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கமலதாஸ், முரண்பாடுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்ற மகாவலி அபி விருத்தித் திட்டம், தேக்கு மர அபிவிருத்தி வளர்ப்புத் திட்டம், சூறாவளி காரணமாக அழிந்து போன தென்னை முந்திரிகைத் தோட்டங்களை மீளக் கொண்டுவருதல் வேண்டும் எனக் கோரினார்.

''இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினையால் மத்திய கிழக்கு போன்ற வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நிலை காணப்படுகிறது.

அதனால் உள்நாட்டிலேயே வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்ட சிறந்த தொழிற்சாலைகளை நிறுவ முடியும்.

சுற்றுலாத்துறை மற்றும் ஏனைய துறைசார் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், தகுதி பெற்ற வளதாரிகளோ போதுமான உபகரண வசதிகளோ இல்லை.

அரசால் தொழில் நுட்பக் கல்லூரிகள் மேலும் நிறுவப்பட்டு வருகின்றன. அவற்றிலும் வளப்பற்றாக் குறைகள் காணப்படுகின்றன. அவற்றினை நிவர்த்திப் பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்பட்டால் சிறப்பாக அமையும்'' என்று ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் அவர் தெரிவித்தார்.

தமது திட்டங்களின் பயன்கள் மற்றும் மக்களது தற்போதைய பிரச்சினைகள், தேவைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டதுடன், குறித்த தகவல்களை தாம் நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்துவதாகவும் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவில்.....



பிறப்பு 11 03 1934

இறப்பு 17 04 2011

அமரர்
## சந்திரவதனா இராசையா

திதி: சித்திரைப் பூரணை 23 (05-05-2012)

அன்பும், ஆளுமையும் உம்மிரு கண்கள்
கொடையும், கருணையும் உம்மிரு கரங்கள்
பேசும் வார்த்தைகள் உள்ளம் குளிரும் தென்றல்

அன்புப் பார்வையெங்கே...
அரவணைத்த கரங்களெங்கே...
மகிழ்விக்கும் வார்த்தையெங்கே...
எல்லாம் ஓய்ந்து ஓராண்டானதிங்கே...

உம் நினைவின் நிழலில் தொடர்ந்தும் நடையிடுவோம்..
நீர் தந்த பாதையில் பயணத்தைத் தொடர்ந்திடுவோம்..
எமை ஏற்றம் பெறவைத்த எம் குலத்தெய்வமே
மறவாதுன் திருவடிகளை வணங்குகின்றோம்!...

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்..

# மின்னியலாளர் இலவசப் பயிற்சி

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் கீழ் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு, யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரம் வரை கற்றிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இல, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.06.1953

இறப்பு 17.04.2011

## அமரர் வைத்திலிங்கம் செல்லக்கணேசன்

திதி:- சித்திரைப் பூரணை

பாசத்தின் உறைவிடமே, பண்பின் ஒளிவிளக்கே
அறிவின் இருப்பிடமே ஆண்டு ஒன்று ஆகியும்
ஆறவில்லை எங்கள் மனம் சென்ற இட மெல்லாம்
உனது உருவம்தான் கேட்கும் ஒலி எல்லாம்
உனது குரல்தான் காலங்கள் எத்தனை கடந்தாலும்
உன் நினைவுகள் என்றும் மாறாது

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். – முருகதாஸ் குடும்பம்.

(17709) (2-6-9)


### வான் விற்பனைக்கு

டொயாட்டோ LH 102,
சுப்பர் GL, 59-xxxx, 1993.
டுவல் AC, 2 L எலோ வீல்,
அட்ஜஸ்டபிள் சீற்,

T.P:
077 691 2223



### J.C.B வாடகைக்கு (பைக்கோ)



* போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது
* குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்

இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம்

தொடர்புகளுக்கு:
077 7712482


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
30★ 11★ 1922

மறைவு
07★ 04★ 2012

கடந்த (07.04.2012) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## திருமதி செல்லம்மா ஆறுமுகம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் பருத்தித்துறை தம்பசிட்டி தெணியம்மன் அந்தியேட்டி மண்டபத்திலும், வீட்டுக்கிருத்தியம் 07.05.2012 திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் கோண்டாவில் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4/1, இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (17682) (2-6-9) - குடும்பத்தினர்


### மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும்
கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு
உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம்
நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில்
செயன்முறைப் பயிற்சிகள்

**Knowledge Universe**
No 75, Temple Road, Jaffna
Call : 0213208342
www.kugroup.info



### வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகில் 6 அறைகள் கொண்ட மாடிவீடு வாடகைக்கு விடப்படும்.
(வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மட்டும்)
தொடர்பு: 0756743165



### வயறிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும்

உங்கள் வீடுகளில் வயறிங், பைப் லைன் மற்றும் AC திருத்த வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:
0771970395, 021 3006140



### வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு அம்மன் வீதியில் நிலப்பரப்பு ஏழேகால் (நிலப்பரப்பு 7¼) விஸ்தீரணம் உள்ள சகல வசதிகளும் அமைந்த வீடு விளவு விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:
021-3735170, 021-4916274



### ஒடியல் கூழ் விற்பனைக்கு

உங்கள் உடலில் உள்ள உபாதைகளை நீக்கி உடலை வலுவடையச் செய்யக்கூடிய தரமான சுவையான ஒடியல் கூழ் எம்மிடம் உண்டு.

நாளை (06.05.2012) ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஒவ்வொரு ஞாயிறும் மு.ப 11.00 மணியிலிருந்து மாலை வரை பெற்றுக்கொள்ளலாம்.

குட்லக் ஹொட்டல்
59, K.K.S வீதி, கொக்குவில்.
(கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்திற்கும் இடையில்)


# பத்தாம் ஆண்டு நினைவுகளில்.....



அமரர்
## வைரவி சுபாஸ்

ஆண்டவன் தருகை
24★10★ 1950
அரக்கர்களின் அழிப்பு
26★05★ 2002
திதி:சித்திரா பௌர்ணமி

ஆலய முன்றிலில் அரக்கர்கள் உங்கள்
ஆவி பறித்தின்றுடன் ஆண்டுகள் பத்து
ஓடிப்போனதுவா ஐயா - சுபாஸ்
தேடிப் பார்த்திடினும் உம்மைப்போல் ஒரு
தெய்வப் பிறவி வாய்த்திடுமா எனியிங்கு
தேற்றிட முடியவில்லை - எங்கள்
தேம்பிய நெஞ்சங்களை
ஆற்றுப் படுத்திட ஒரு நாள் தெய்வம்
தேடியே வரும் உங்கள் உயிர் பறித்தவர் வாழ்வுதனை
உருக்குலைத்த பின்பே அது மீளும்...
அதுவரை அமைதி கொள்!!! பிரிவால் துயருறும்

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் மேயர் வேட்பாளர்கள் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள்

## இலங்கை அரசு குற்றச்சாட்டு

லண்டன்,மே 05

லண்டன் நகருக்கான மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் முக்கிய இரு வேட்பாளர்கள் அங்கு வாழும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக, விடுதலைப் புலிகள் சார் அமைப்புக்களுக்கு தமது ஆதரவுகளை வழங்கி வருவதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளது.

2009இல் இலங்கைப் பாதுகாப்பு படையினர், தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த மே 18ஆம் திகதியை நினைவு கூரும் வகையில், பிரிட்டனில் உள்ள தமிழ் மக்கள் 'தமிழர் நாளாக' வரலாற்று சிறப்பு மிக்க றபல்கர் சதுக்கம் மற்றும் லண்டனின் வேறு சில முக்கிய இடங்களில் கொண்டாடுவதற்கான அனுமதியை பிரிட்டனின் முன்னாள் மேயரும், லண்டன் மாநகரசபைத் தேர்தலில் தொழிற்கட்சி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளருமான கென் லிவிங்ஸ்ரன் வழங்கியுள்ளதாக அரச இணையத் தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

''பிரிட்டன் தமிழர் அமைப்புடன் ஒன்றிணைந்து பணியாற்ற நான் விரும்புகிறேன். இது போன்ற தினங்களை ஒவ்வொரு ஆண்டிலும் லண்டன் ரபல்கர் சதுக்கத்தில் கொண்டாடுவதற்கான அனுமதியைப் பிரிட்டன் தமிழர்களுக்கு வழங்கமுடியும்'' என விடுதலைப் புலிகளுக்குச் சார்பான அமைப்புக்களால் ஒழுங்குபடுத்தப்பட்டு கிழக்கு லண்டனில் மேற்கொள்ளப்பட்ட பரப்புரைக் கூட்டம் ஒன்றிலேயே லிவிங்ஸ்ரன் இவ்வாறு தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

**தமிழீழ விடுதலைப் புலிகளை அரசு தோற்கடித்த மே 18ஆம் திகதியை தமிழ் மக்கள் நினைவு கூரும் வகையில், 'தமிழர் நாளாக'க் கொண்டாடுவதற்கு அனுமதி பிரிட்டனில் வழங்கப்பட்டுள்ளது.**

இதேபோன்று புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பிரிட்டன் தமிழர் அமைப்புக்களின் ஊடாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், பழமைவாதக் கட்சியின் லண்டன் மாநகர சபை வேட்பாளரான பொரிஸ் ஜோன்சன் செயற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

''லண்டனிலும் பிரிட்டனின் ஏனைய நகரங்களிலும் வாழும் பல பத்தாயிரக்கணக்கான பிரிட்டன் தமிழர்களின் வீடாக லண்டன் காணப்படுகின்றது. இவர்கள் பிரிட்டன் தலைநகரான லண்டனில் தமது வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் உணவு, இசை உற்பத்திகள் போன்றவற்றின் ஊடாகவும் எமது வாழ்வில் முக்கிய சேவையை வழங்குகின்றனர்'' என ஜோன்சன் தனது பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

2009 இல் புலிகள் அமைப்புக்குச் சார்பான தமிழ் குழுக்கள் இலங்கை அரசு 79 இல் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன. இலங்கை அரசு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல் தொடர்பாகப் பிரிட்டனில் செயற்படும் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழ் சமுகம் அழுத்தங்களை வழங்கி, இலங்கை அரசுக்கு எதிராகப் பரப்புரையை மேற்கொள்வதற்கான உத்வேகத்தை தற்போது தேர்தலில் போட்டியிட்ட இரு பிரதான வேட்பாளர்களும் வழங்கியுள்ளதாகவும், பிரிட்டன் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் இது பங்களித்துள்ளதாகவும் இலங்கை அரசு இணையத்தளம் குற்றம் சாட்டியுள்ளது.

(த)

## தமிழ்த்தினப் போட்டிகள்

கிண்ணியா, மே5

திருகோணமலை மாவட்ட மட்டத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என்று கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம். ஹாஸிம் தெரிவித்தார்.

12ஆம் திகதி காலை 9 மணிக்கு 15-28 வரையிலான போட்டி இலக்கங்களுக்கான நிகழ்ச்சிகளும், 41- 50வரையிலான போட்டி இலக்கங்களுக்கானபோட்டிகளும்கிண்ணியாஅல்-அக்ஷா கல்லூரியில் நடை பெறவுள்ளன.

13ஆம் திகதி காலை 9 மணிக்கு 29-42 வரையிலான போட்டி இலக்கங்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.


**HSCMF**



வலி. தென்மேற்கில் சிறுவர் நல அபிவிருத்திக்காக நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியத்தின் 17ஆம் ஆண்டு நிறைவுக்கு காரணமான ஸ்தாபகத் தலைவரில் ஒருவரான

**திருமதி செ. செல்வராணி**யை

(HSCMF) இன்று 05.05.2012இல் நினைவு கூருகின்றோம்.

பணிப்பாளர் சபை,
நவாலி.


## கிழக்கு எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்க நடவடிக்கை

திருகோணமலை,மே5

கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களின் இலக்கிய நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2011 ஆம் ஆண்டு வெளியான நூல்களின் விவரங்களை மாகாண பண்பாட்லுவல்கள்திணைக் களம் கோரியுள்ளது.

இந்தப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றும் எழுத்தாளர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். இவர்களின் நூல்கள் 2011 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் வெளி வந்ததாக இருக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் க.அன்பழகன் தெரிவித்தார்.

நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சிறுவர் இலக்கி யம், இலக்கிய ஆய்வு, விமர்சனம், உயர் கல்வி, பல்துறை ஆகிய துறைகளில் வெளியான நூல்களைப் போட்டிக்கு அனுப்பலாம் என்று அவர் தெரிவித்தார்.

ஒரு எழுத்தாளர் எல்லாத் தேர்வுகளிலும் பங்கு பற்றலாம். ஒவ்வொரு துறைத் தேர்வுக்கும் நான்கு பிரதிகள் வீதம் எதிர்வரும் ஜூன் மாதம் [illegible] அனுப்பிவைத்தல் வேண்டும். (ச-40)


**O/L Day Class**

மாணவர்களுக்கான கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் மட்டும்

- குழு/தனி வகுப்புக்கள்
- மாதிரி வினாத்தாள்களுடன் சிறந்த பெறுபேற்றுக்கான உத்தரவாதத்துடனும் விஷேட கவனத்துடனும் கற்பிக்கப்படுகிறது.

| பிரிவு-II | பிரிவு-III | |
|---|---|---|
| திங்கள் / வெள்ளி | சனி / ஞாயிறு | 9-12 |

தொடர்புகளுக்கு:-0777070711
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்)



**தவறிவிட்டது**

தர்மராசா திலகவதி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 607383463V), வங்கி புத்தகம் மற்றும் ஒரு தொகைப் பணம் அடங்கிய கைப்பை ஒன்று 30.04.2012 அன்று நெல்லியடிக்கும், மாலி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் உள்ள எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779647754



**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல புடவையகத்தின் புதிய கிளை நிறுவனம் மிக விரைவில் திறக்கப்படவுள்ளது. இந்த நிறுவனத்துக்கு விற்பனை பிரதிநிதிகள் மற்றும் காசாளர் (கணினி அறிவுடைய ஆண், பெண்) தேவை. பழகவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். 4 மைல் சுற்றாடலுக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
இல. 121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம்மா சிவசம்பு



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா சிவசம்பு நேற்று (04.05.2012) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதர் சிவசம்புவின் (ஓய்வு பெற்ற கிறாப்பர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற மனோகரசீலன் மற்றும் ரூபாவதி (ஜேர்மனி) குலேந்திரசீலன், பிறேமாவதி(லண்டன்), உருத்திராவதி (லண்டன்), சத்தியவதி, நிர்மலாதேவி (நோர்வே), வத்சலாதேவி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயும் விஜயராணி, சிவநாதன் (ஜேர்மனி), சிவரஞ்சினி, குணரத்தினம் (லண்டன்), விஜயதரன் (லண்டன்), பரமானந்தம், இராமகிருஷ்ணா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்

தகவல்:
சத்தியவதி பரமானந்தம் [illegible]

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி யூடி தர்ஷினி இம்மானுவேல் - தி.கு.



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி யூடி தர்ஷினி இம்மானுவேல் 03.05.2012 வியாழக்கிழமை அன்று இறைபதம் இணைந்துவிட்டார்.

இவரது பூதவுடல் திங்கட்கிழமை (07.05.2012) பி.ப. 3.30 மணிக்கு திம்பிரிகசாய புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாவத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
அருட்சகோதரி
யோலன்ட் மத்தியாஸ்,
(மாகாணத் தலைவி)

### சுப்பையா சிவபாதம் (இன்பன்)



சந்நிதி றோட், பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சிவபாதம் நேற்று (04.05.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவகுமாரி மற்றும் சுகிர்தினி ஆகியோரின் அன்புக் கணவரும், சாம்பவி (2013 உயிரியல் பிரிவு, வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), சாரங்கன் (தரம் 9, பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனொளிபாதம் (இளைப்பாறிய அதிபர்), மங்கையற்க்கரசி, மல்லிகாதேவி, ஈஸ்வரபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2012) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி றோட்,*
*பத்தமேனி, அச்சுவேலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 5

ஈ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

காலை 8.30 மணியளவில் இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பி.ப 1.30 மணியளவில் இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ங-23)

* * *

கைதடி, மே 5

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கம் நடத்தும் 15 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இன்றைய தினம் இடம் பெறும் முதலாவது போட்டி கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுகழக அணியை எதிர்த்து கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவதாக இடம் பெறும் ஆட்டத்தில் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவன் விளையாட்டுகழக அணி மோதவுள்ளது. (5-288)

## அடிமேல் அடி...



திருகோணமலை மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இதில் ஓர் அங்கமாக நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஈடுபட்டுள்ள வீரர்கள். (ங-23)

## மன்னார் சென். லூசியா வென்றது

யாழ்ப்பாணம்,மே 5

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் ஏவ் .ஏ ஹொல்சிம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித்தொடரின் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் அனுராதபுரம் யுத்விளையாட்டுக் கழகத்தை மன்னார் சென். லூசியா விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டது.

(ங-23)

## விளையாட்டு விழா

வவுனியா, மே. 5

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந்த விளையாட்டு நிகழ்வில் வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. எனவே இந்தத் தகவல் அந்த அந்த பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன. தகவல் கிடைக்காத விளையாட்டுக் கழகங்கள் 0775381742 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இந்த விளையாட்டு நிகழ்வில் பங்குபற்ற முடியும் என புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் பாக்கியநாதன் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

(ங-421)

# 'மைலோ' வெற்றிக் கிண்ணம் வவுனியா முஸ்லிம் ம.வி.க்கு



வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவினருக்கான "மைலோ" கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 5 பாடசாலை அணிகள் பங்குபற்றியதாக வவுனியா மாவட்ட 'மைலோ'க் கிண்ணச் சுற்றுப் போட்டிக்கான இணைப்பாளர் ம.அனக்ஸ்தின் தெரிவித்தார்.

இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகாவித்தியாலயமும், வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயமும் மோதின.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் முஸ்லிம் மகா வித்தியாலயம் 1 கோல்களைப் பெற்று 1:0 என்ற அடிப்படையில் முன்னணியில் இருந்தது.

முஸ்லிம் மகா வித்தியாலயம் ஒரு கோல் அடித்த பின்னர் சரஸ்வதி வித்தியாலய வீரர்கள் பதிலடி கொடுக்கும் முயற்சியில் இறங்கினர். ஆனாலும் அவர்களது பந்து நகர்வை மிகச் சாதுரியமாக முஸ்லிம் மகா வித்தியாலய வீரர்கள் முறியடித்தனர்.

இதனால் முதற்பாதி ஆட்டத்தில் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கையே ஓங்கியிருந்தது.

இதனை அடுத்து இடைவேளையின் பின் மீண்டும் ஆட்டம் சூடுபிடித்தது. இரு அணி வீரர்களும் தத்தமது அணிக்கான கோலைப் பெறுவதற்கு கடும் முயற்சி எடுத்தனர்.

இரு அணியினரும் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் கோல் கம்பங்களுக்கு அருகாக பந்தை நகர்த்திச் சென்ற போதும் கடைசிக் கணத்தில் அந்த முயற்சிகள் கைகூடாமல் போவது தொடர்ந்தது.

ஆயினும் எப்படியாவது ஒரு கோலை அடித்து ஆட்டத்தை சமநிலையில் முடிக்க சரஸ்வதி வித்தியாலய வீரர்கள் தொடர்ந்தும் முன்னேறித் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அதேவேளை, எதிரணி வீரர்கள் கோல் அடிக்காமல் இருந்தாலே போதும் என்ற நிலையில் தற்காப்பு ஆட்டத்தில் முஸ்லிம் மகா வித்தியாலய வீரர்கள் இறங்கினர்.

இந்நிலையில் தொடர்ந்து ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் ஆட்டத்தின் இறுதிக் கணத்தில் சரஸ்வதி வித்தியாலய வீரர்கள் துவளத் தொடங்கினர். இதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட முஸ்லிம் மகாவித்தியாலய அணி இறுதி நேரத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி மேலதிக ஒரு கோலைப் பெற்று 2:0 என்ற அடிப்படையில் வென்று மைலோ கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

போட்டி இணைப்பாளர் அனக்ஸ்ரின் தலைமையில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் விருந்தினர்களாக வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்க செயலாளர் எஸ். ஸ்கந்தன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சுபைர் மற்றும் வவுனியா பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ்.கமலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ங-400)

## எல்லே, வலைப்பந்து வென்ற அணிகள்



வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய எல்லே சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடத்தை வவுனியா உதயதாரகை இளைஞர் விளையாட்டுக் கழகமும், இரண்டாமிடத்தினை செட்டிக்குளம் இளைஞர் கழகமும் பெற்றுக் கொண்டன.

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் செட்டிக்குளம் இளைஞர் கழக அணியும், இரண்டாமிடத்தினை வவுனியா நகர இளைஞர் கழக அணியும் பெற்றுக் கொண்டன.

இதே வேளை வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் இளைஞர் கழக அணி முதலாமிடத்தினையும் நெடுங்கேணி பெரியமடு இளம்பிறை இளைஞர் கழக அணி 2 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

(ங-40)

## ஆடி முடித்தவர்கள் கூடி இருக்கையில்...



வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான '[illegible]டியில் பங்குபற்றிய வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் [illegible] வீரர்கள் விருந்தினர்களுடன் அமர்ந்திருக்கின்றனர். (ங-400)

## வவுனியா மாவட்ட கபடிப் போட்டியில் பரக்கும் ம.வி., பூவரசங்குளம் ம.வி. சம்பியன்

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்டக் கபடிப் போட்டியில் 15 வயது ஆண்கள் பிரிவில் பரக்கும் மகாவித்தியாலயமும் பெண்கள் பிரிவில் பூவரசங்குளம் மகாவித்தியாலயமும் இந்த வருட சம்பியனாகின.

இந்தப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான போட்டியில் வவுனியா தெற்கு வலயத்தை சேர்ந்த பரக்கும் மகாவித்தியாலயமும் பாவற்குளம் கணேஸ்வர மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இதில் பரக்கும் மகாவித்தியாலயம் கடுமையான போட்டியின் பின் வென்று சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தை புதுக்குளம் மகாவித்தியாலயம் பெற்றது. அடுத்து இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பூவரசங்குளம் மகாவித்தியாலயமும், ஓமந்தை மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் பூவரசங்குளம் மகாவித்தியாலயம் வெற்றியீட்டியது. இதில் மூன்றாமிடத்தினை குளவி சுட்டான் அ.த.க பாடசாலை பெற்றுக் கொண்டது.

இதே வேளை 19 வயது ஆண்களுக்கான கபடிப் போட்டியில் சம்பியனாக பரக்கும் மகாவித்தியாலயம் பெற்றது. இரண்டாம் மூன்றாமிடங்களை முறையே கல்மடு மகாவித்தியாலயமும் ஓமந்தை மகாவித்தியாலயமும் பெற்றன.

பெண்களுக்கான போட்டியில் பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயம் முதலாமிடத்தினையும், இரண்டாமிடத்தினை கல்மடு மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தினை பரக்கும் மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (ங-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை 'த்ரில்' வெற்றி





ஐ.பி.எல்., பரபரப்பான லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி ஓர் ஓட்டம் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. கடைசிப் பந்து வரை போராடிய புனே அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

புனேயில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 45 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணித் தலைவர் ஹர்பஜன், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

மும்பை அணிக்கு சச்சின், பிராங்ளின் இணைந்து விவேகமான தொடக்கம் கொடுத்தனர். புனே பந்து வீச்சாளர்கள் துல்லியமாக பந்துவீச, ஆரம்பத்தில் அடக்கி வாசித்தது மும்பை. முரளி கார்த்திக் வீசிய முதல் பந்து பரிமாற்றத்தில் 4 ஓட்டங்கள் மாத்திரமே கிடைத்தது. டிண்டா வீசிய அடுத்த பந்து பரிமாற்றத்தில் சச்சின் திணற, அது ஓட்டமற்ற பந்து பரிமாற்றமாக அமைந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக டிண்டாவின் இரண்டாவது பந்து பரிமாற்றத்தில் சச்சின் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்து, அதிரடிக்கு மாறினார். மறுபக்கம் நெஹ்ராவின் பந்து பரிமாற்றத்தில் பிராங்ளின் 'வரிசையாக இரண்டு பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடிக்க, ஓட்ட எண்ணிக்கை விரைவாக உயர்ந்தது. புவனேஷ் குமார் பந்தில் பிராங்ளின் (25) ஆட்டமிழந்தார்.

பின்னர் மைக்கல் கிளார்க் பந்தில் ரோகித் சர்மாவுக்கு 'எல்.பி.டபிள்யூ' கேட்கப்பட்டது. நடுவர் மறுத்தார். இதையடுத்து ஓர் ஓட்டத்துக்கு ஓட முற்பட்ட ரோகித் சர்மா (3) அநியாயமாக 'ரன் அவுட்டானார்'. சிறிது நேரத்தில் நெஹ்ரா வேகத்தில்' சச்சின் (34), ரொபின் பீட்டர்சன் (13) வெளியேற, மும்பை அணி 13.3 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 88 ஓட்டங்கள் எடுத்து தவித்தது.

இதற்குப் பின் வந்த துடுப்பாட்ட வீரர்களும் சொதப்ப, ஓட்ட எண்ணிக்கை அப்படியே படுத்தது. புவனேஷ் குமார் பந்தில் ராயுடு (1) 'போல்டானார்'. திசரா பெரோ (0) 'ரன் அவுட்டானார்'. டிண்டா பந்து வீச்சில் அணித்தலைவர் ஹர்பஜன் 'டக் அவுட்டானார்'. கடைசிக் கட்டத்தில் அதிரடி காட்டிய மலிங்க, டிண்டா பந்து பரிமாற்றத்தில் பவுண்டரி, சிக்சர் அடித்தார். இவர் 14 ஓட்டங்களுக்கு 'ரன் அவுட்டானார்'. மும்பை அணி 20 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளுக்கு 120 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. தினேஷ் கார்த்திக்(18) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சுலப இலக்கை விரட்டிய புனே அணிக்கு மும்பை பந்து வீச்சாளர்கள் 'ஷொக்' கொடுத்தனர். முனாப் பந்தில் உத்தப்பா (18) வெளியேறினார். ஹர்பஜன் சுழலில் ஜெசி ரைடர் (9), மைக்கல் கிளார்க் (14) சிக்கினர். ஓஜா வலையில் ஸ்டீவன் ஸ்மித் (2) 'போல்டாக', 9.5 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 47 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

பின்னர் அணித்தலைவர் கங்குலி, மிதுன் மன்ஹாஸ் இணைந்து போராடினர். மலிங்க வீசிய, ஆட்டத்தின் 17 ஆவது பந்து பரிமாற்றத்தில் கங்குலி ஒரு பவுண்டரி அடித்தார். இதே பந்து பரிமாற்றத்தில் இவர் 16 ஓட்டங்களுக்கு 'போல்டாக', சிக்கல் ஆரம்பமானது. முக்கியமான 19 ஆவது பந்து பரிமாற்றத்தை துல்லியமாக வீசிய மலிங்க, பார்னலை (2) வெளியேற்றியதோடு 4 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து, ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்படுத்தினார். கடைசிப் பந்து பரிமாற்றத்தில் புனே வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முனாப் பந்துவீசினார். முதல் பந்தில் ஓட்டம் இல்லை. அடுத்த பந்தை அகலப் பந்தாக வீச, உதிரியாக ஓர் ஓட்டம் கிடைத்தது. 2, 3, 4 ஆவது பந்துகளில் ஒவ்வொரு ஓட்டமே பெறப்பட்டது. 5 ஆவது பந்தில் புவனேஷ் குமார் ஒரு பவுண்டரி அடிக்க, 'டென்ஷன்' எகிறியது. 6 ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட, புனே அணி 20 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 119 ஓட்டங்கள் எடுத்து, தொடர்ந்து நான்காவது தோல்வியை பெற்றது. போராடிய மன்ஹாஸ்(42), புவனேஷ் குமார் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை மலிங்க வென்றார். (5)



# நான் தயார்!



மேற்கிந்தியத் தீவுகள் அணிசார்பாக அனைத்து வகையான ஆட்டங்களிலும் விளையாட தாம் தயாராகவுள்ளதாக அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் குறிப்பிட்டுள்ளார்.

வானொலி சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியை அடுத்து மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் நிறுவனத்துடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஒரு வருட காலமாக கிறிஸ் கெய்ல் அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார். எனினும் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் குழாமில் கிறிஸ் கெய்ல் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

இருப்பினும் சர்வதேச ஒருநாள் மற்றும் 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் கிறிஸ் கெய்ல் இணைத்துக் கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கிலாந்தின் சமசெட் அணியுடனான 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்களுக்கான ஒப்பந்தத்தில் இருந்து மேற்கிந்திய கெய்ல் விலகியுள்ளார்.

இங்கிலாந்துடன் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் இணைந்துகொள்வதற்கான நகர்வாக அவரின் இந்த செயற்பாடு அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (5)

# சுசந்திகா உபதலைவராகத் தெரிவு



ஒலிம்பிக் பதக்கம் வென்றவரான சுசந்திக்கா ஜயசிங்க இலங்கை மெய்வல்லுநர் சம்மேளன உபதலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த முறை மெய்வல்லுநர் சம்மேளன தேர்தலில் ஆறு உப தலைவர்கள் பதவிக்கு 14 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்ததுடன், அவர்களில் பொதுநலவாய பதக்கம் வென்றவரான சுகத் திலகரத்னவும் உள்ளடங்கியிருந்தார்.

எனினும் நேற்று நடைபெற்ற மெய்வல்லுநர் சம்மேளனத் தேர்தலில் சுகத் திலகரத்ன தோல்வி[illegible] துறை அமை[illegible] அபேகோன் கூறினார். (5)

# விடுதலையாகிறார் ஆஷிப்



இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக இங்கிலாந்தில் ஓர் ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் மொகமட் ஆஷிப் சிறையிலிருந்து விடுதலையானார். தென்கிழக்கு இங்கிலாந்தில் உள்ள கேண்டர்பரி சிறையிலிருந்து அவர் நேற்று முன்தினம் காலை விடுவிக்கப்பட்டதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

ஒகஸ்ட் 2010 இல் மொகமட் ஆஷிப், மொகமட் ஆமீர், சல்மான் பட் ஆகியோர் லோர்ட்ஸ் டெஸ்ட் ஆட்டத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது. மேலும், சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஆஷிப் விளையாடுவதற்கு 7 ஆண்டுகள் தடைவிதித்துள்ளது. இதனை எதிர்த்து அவர் மேல் முறையீடு செய்யவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொகமட் ஆமீர் மூன்று மாத சிறை தண்டனைக்கு பின்பு கடந்த பெப்ரவரி மாதம் விடுவிக்கப்பட்டார். பாகிஸ்தான் டெஸ்ட் ஆட்டத்தின் அணித்தலைவராக இருந்த சல்மான் பட் 30 மாத சிறைத் தண்டனையை இன்னும் அனுபவித்து வருகிறார். இவர்களை சூதாட்டத்தில் ஈடுபடுத்திய மஷர் மஜீத் என்ற சூதாட்டக்காரர் 32 மாத சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியல் மட்ரிட் வெற்றி

ஸ்பெய்ன் கால்பந்தாட்டத் தொடரான லா லிகா தொடரை ரியல் மட்ரிட் கழகம் வெற்றி பெற்றுள் ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் அத்லெட்டிக் பில்பாவோ கழகத்தை 3-0 என்ற அடிப்படையில் அபார வெற்றி பெற்றதன் காரணமாகவே இந்தச் சம்பியன் பட்டம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.



**லா லிகா சம்பியன் தொடரை ரியல் மட்ரிட் கழகம் பெற்றுக் கொள்ளும் 32 ஆவது சந்தர்ப்பம் இது.**

இந்தப் போட்டியில் அத்லெட் டிக் பில்பாவோ கழகம் 72 ஆவது நிமிடத்தில் தனது வீரரொருவரை சிவப்பு அட்டை காரணமாக இழந்த நிலையில் 10 பேர் கொண்ட அணியால் ரியல் மட்ரிட் கழகத்துக்குத் தேவையான அழுத்தத்தை வழங்க முடிந்திருக்கவில்லை.

போட்டியின் 12 ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் கழகத்திற்குக் கிடைத்த பெனால்ட்டி வாய்ப்பொன்றை கிறிஸ்டி யானோ ரொனொல்டோ தவற விட்டிருந்தார். எனினும் 16 ஆவது நிமிடத்தில் ஹிக்குவைன் ஒரு கோலையும், 20 ஆவது நிமிடத் தில் ஓஷில் இன்னுமொரு கோலை யும் பெற்று முதற் பாதியில் ரியல் மட்ரிட் கழகம் 2-0 என்ற அடிப்படை யில் ஆதிக்கம் செலுத்த உதவினர்.

இரண்டாம் பாதியிலும் தொடர்ந்து சிறப்பாக ஆடிய ரியல் மட்ரிட் கழகம் சார்பாக போட்டியின் 50 ஆவது நிமிடத்தில் கிறிஸ் டியானோ ரொனால்டோ கோலொன்றை பெற்றுக்கொடுத்து 3-0 என்ற முன்னிலையைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் இரு அணிகளும் முயற்சித்த போதிலும் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இந்தத் தொடரில் இன்னமும் இரண்டு போட்டிகள் மாத்திரமே எஞ்சியிருக்கும் நிலையில் 7 புள்ளிகளால் ரியல் மட்ரிட் முன்னிலை வகிக்கிறது. இதன் காரணமாகவே அந்த அணி சம்பியன் பட்டத்தை வெல்வது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் ரியல் மட்ரிட் கழகம் 115 கோல்களை அடித்துள்ளதுடன் 30 கோல்கள் மாத்திரமே அந்த அணிக்கு எதிராக அடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பருவ காலத்தில் லெவன்ரே அணியுடன் 0-1 என்ற அடிப்படையிலும், பார்சிலோனா அணியுடன் 1-3 என்ற அடிப்படையிலும் தோல்வியடைந்ததைத் தவிர, வேறெந்தத் தோல்வியையும் அந்த அணி சந்தித்தி ருக்கவில்லை.

லா லிகா சம்பியன் தொடரை ரியல் மட்ரிட் கழகம் பெற்றுக்கொள்ளும் 32 ஆவது சந்தர்ப்பம் இதுவென்பதோடு, கடந்த 4 வருடங்களில் அந்த அணி இந்தப் பட்டத்தை வெற்றிகொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## அரையிறுதியில் சானியா

எஸ்டோரியல் ஓபன் ரெனிஸ் தொடரின் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா ஆஸ்திரேலியாவின் அனஸ்டாசியா ரோடியோனோவா ஜோடி முன்னேறியது. பெண்கள் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சானியா-ரோடியோனோவா (ஆஸ்திரேலியா) ஜோடி, அமெரிக்காவின் மேகன் மோல்டன்-லீவி, லிண்ட்சே லீ-வாட்டர்ஸ் ஜோடியை தோற்கடித்தது.

# யூவிக்கு 20 ஏக்கர்



'ஸ்போர்ட்ஸ் அக்கடமி' அமைக்க இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங்கிற்கு 20 ஏக்கர் நிலம், பஞ்சாப் அரசு சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது.

புற்றுநோய் பாதிப்பில் இருந்து சமீபத்தில் மீண்ட இவர், தற்போது ஓய்வில் உள்ளார். இவர் தனது தாயார் ஷப்னத்துடன், பஞ்சாப் மாநில அரசின் அழைப்பின் பேரில், முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் வீட்டுக்குச் சென்றார். அங்கு வேகமாக குணமடைந்த யுவராஜ் சிங்கை முதல்வர் வாழ்த்தினார்.

இதையடுத்து யுவராஜ் சிங் அமைக்கவுள்ள 'ஸ்போர்ட்ஸ் அக்கடமிக்கு' தேவையான 20 ஏக்கர் நிலத்தை வழங்கினார்.

சண்டிகருக்கு அருகே வரவுள்ள இந்த அக்கடமியில் வளர்ந்து வரும் கிரிக்கெட், ரெனிஸ், கோல்ப் மற்றும் ஹொக்கி வீரர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (5)

# சச்சினை மிரட்டுகிறது அரசியல்



இந்திய கிரிக்கெட் அணியின் சதச் சாதனை உட்படப் பல சாதனைகள் செய்த நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் ராஜ்ய சபா நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுத் செய்யப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பிறந்த நாளன்று தேசிய கொடி பொறிக்கப்பட்ட கேக்கை வெட்டியதாக சச்சின் மீது மதுரை கிளையில் ஏற்கனவே ஒரு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தற்போது மேலும் ஒரு வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை இன்று நடைபெற உள்ளது. (5)


## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 23,000/- அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு கண்ணா 0776766499


## மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து யூலியஸ் ஜெயரட்ணம்

(ஓய்வுபெற்ற ஊழியர், யா/ அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்)



குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து யூலியஸ் ஜெயரட்ணம் நேற்று முன்தினம் (03.05.2012) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து-லில்லிமலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மருசலின் - அருளம்மா தம்பதியரின் மருமகனும் மேரி இமில்டாவின் அன்புக் கணவரும் ஜஸ்ரினாவின் அன்புத் தந்தையும் மேரி ஜொய்சிலின், ஜெயநாயகி, மரியதாஸ், மேரிஸ்ரெலா ஆகியோரின் அருமைச் சகோதரனும் பேர்லின், ராகுலன் ஆகியோரின் மைத்துனரும் யூலியானா, யூலி ஆகியோரின் பெரிய தந்தையும் ஜசிந்தன், கோஷிகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி யாத்திரை இன்று (05.05.2012) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குளமங்கால் புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால், மல்லாகம்.

தகவல்: குடும்பத்தினர்.


## படிவங்கள் விற்பனையாகிறது

* முகாமைத்துவ உதவியாளர்
* விவசாய போதனாசிரியர்
* விவசாய போதனாசிரியர் பயிலுனர்
* கணக்காளர் - Accountant's
* Audit Superintendents
* S.L.A.S (Limited)
* Statistical officer -II
* இலங்கை HDFC Bank

பூபால சிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

## London College of Achievers

திருமகள் சோதி வீதி, நெல்லியடி

French, German மொழி வகுப்புகளின் 2ஆவது பிரிவு 07.05.2012 திங்கள் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றது.

தொடர்புகளுக்கு : T.P. 021 226 4206 H.P. 0777224994

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## SUBRA(14)

சித்தன்கேணி

C.B.F, D.B.F பரீட்சைக்கான வகுப்புகள்.

ஆரம்பம்- 05.05.2012.

இவ் வகுப்புகள் மாலை 6 - 8 மணி வரை நடைபெறும்.
துறைசார் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படும்.
அனுமதிகளுக்கு முந்துங்கள்

## SUBRA(14)

சித்தன்கேணி - வட்டுக்கோட்டை இரு இடங்களிலும் ஆரம்பம்

2014 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் பிரிவு II - 05.05.2012

★ காரைநகர் பிரதேச மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
★ தகுதியான, தரமான ஆசிரியர்களின் வழிகாட்டல்.

## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ மணமகன் 40 வயது London வியாபாரத்துறை தகுதி பெற்று ஆசிரியராக பணிபுரிபவருக்கு படித்த, தொழில்புரிகின்ற மணமகள் தேவை. போரினால் கணவரை இழந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0776110802.

## பணிநிலை வெற்றிடங்கள்

புத்தகம் ஸ்ரேசனரிப் பொருள்கள் விற்பனையில் முன் அனுபவம் உள்ள விற்பனையாளர்கள் தேவை. இருபாலாரும் விரும்பப்படுகின்றனர். (வேலை பழக விரும்புபவர்களும் வேண்டப்படுகின்றனர்) தகுதியுடையோர் உடன் நேரில் வரவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
82, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டிப் பரீட்சைகளுக்கான புதிய வெளியீடுகள் விற்பனையாகிறது

1) வங்கித்துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கான வழிகாட்டி
P. உமாசங்கர் -Rs. 900/=
2) கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள்
★ S.நாகராஜா - 400/=
★ S.நாகராஜா - 300/=
★ கில்பேட் குணம் 350/=
3) திட்டமிடல் சேவைக்கான வழிகாட்டி T. தவசேகர் - 350/=
4) Auditing - 300/= ( P. உமாசங்கர்)
5) S.L.A.S - P. உமாசங்கர் - 900/=
6) முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி - 250/= P. உமாசங்கர்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனிடம் அறிவு உறங்கினால் கீழான இச்சைகள் கண்விழித்து எழுந்து குதியாட்டம் போடும்
-பிளேட்டோ

வார வசந்தம் 

உதயன் 05 மே 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# சிறுவர்களை வேலைக்கமர்த்தாதீர்கள்

■ அமிர்தலிங்கம் அகன்

உரிமைக்கு குரல் கொடுப்போம், உணர்வுக்கு மதிப்பளிப்போம், உடலை நலமாக்கி உள்ளத்தை தெளிவாக்கி இதயத்தை முழுமையாக்க உழைக்கும் கரங்களை கௌரவப்படுத்தி மதிப்பளிக்க வேண்டிய இந் நாளில் தொழிலாளர் நலன் கருதி அவர்கள் பற்றியும் உழைப்பு பற்றியும் எடுத்துரைக்கலாம் என எண்ணுகின்றேன்.

உழைப்பாளர் இல்லையேல் உணவும் இல்லை உறக்கமும் இல்லை. ஏன் உழைப்பு இன்றி உலகமே செயலற்றுப் போய்விடுகிறது. மனநிம்மதியுடனும் நேர்மையுடனும் உழைக்கும் உழைப்பு உடலை நலமாகவும் உள்ளத்தை தெளிவாகவும் இதயத்தை முழுமையாகவும் கொள்வதோடு ஆழ்ந்த நிம்மதியான உறக்கத்தை நல்வாழ்வோடு கூடிய நீண்ட ஆயுளையும் தரும். நல்லதொரு உழைப்பானது தீய பழக்கத்தை முற்றாக அகற்றி எமக்கு சகிப்புத் தன்மை, பொறுமை, கூட்டு முயற்சி, விட்டுக்கொடுப்பு, ஒற்றுமை என்பவற்றைக் கற்றுத் தரும் நல் லாசானாகும். உழைப்பின்றி உலகில் ஒரு மனிதன் வாழ்வதைக் கூட இறைவன் விரும்பவில்லை. உழைத்து வாழ்கின்றவன் உழைப்பில் உயர்ந்து வெற்றியடைய வேண்டும் எனவே இறைவன் விரும்புகின்றான்.

சமூகத்திற்கும் தனது குடும்பத்திற்கும் நன்மை செய்ய விரும்புகின்றவன் எவனோ அவனே உழைப்பில் வெற்றிகண்டு ஊதியத்தால் உயர்வடைகிறான். இவ்வாறு கடுமையான மனித சமுதாயத்துக்காகவும் தனது குடும்பத்துக்காகவும் உழைத்து தேய்ந்த கரடு முரடான கரங்களே எல்லாச் செல்வத்தையும் பெற்று இன்பமாக வாழ்கின்றன என்று கூறுவதில் மாற்றுக்கருத்துக்கு இடம் இல்லை எனலாம். உழைப்பிற்காக நாம் செலவிடும் நேரம் எதுவும் வீண் விரயமாவதில்லை என்றால் அதுவே வெற்றியின் இலக்கு எனலாம். மனிதனது வாழ்வில் ஏற்படுகின்ற இடர்கள் கேடுகளுக்குத் தீர்வுகாண சிறந்த முயற்சி உழைப்புத்தான் என ஆணித்தரமாகக் கூறிவிட முடியும்.

நேர்மையில்லாது குறுக்கு வழியில் சம்பாதித்து பணம் சேர்க்க என்று ஒருவன் எண்ணுகிறானோ அன்றே அவன் வாழ்வில் இருள் சூழ்ந்து இடர்பட்ட இருட்டறையில் காலடி எடுத்து வைத்து சொல்லொணாத துன்ப வலையில் அகப்பட்டுக் கொள்கின்றான். நாணயமாக உழைத்து பாடுபட்டவன் எவனும் என்றுமே தோற்றதாக சரித்திரமே இல்லை. ஆரம்பத்தில் பல்வேறு இடர்கள் மத்தியில் தொழிலில் முன்னேறிச் செல்கின்ற போது தோற்றுவிடுபவன் போல தோன்றினாலும் இறுதியில் வெற்றி அடைந்து கொள்பவன் அவனாகவே இருக்கும்.

வாழ்க்கையில் உண்மைக்காகவும் தொழில் பயபக்தியுடன் அர்ப்பணிப்புடன் செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து செயற்படுகின்றவன் ஆணாயினும் பெண்ணாயினும் சம ஊதியம் வழங்கப்படவேண்டும்.

**சிறுவர் தொழிலாளர்கள்**

யாழ். மாவட்டமானது கல்வித் துறையில் தனக்கென ஓர் இடத்தை பிடித்து இருந்த போதிலும் கிராமப்புறங்களில் வாழ்கின்ற சிறுவர்கள் பெரும் செல்வந்தர்களால் தேநீர் கடைகளிலும், தொழிற்பட்டறைகளிலும், மேசன் தொழிலிலும் அமர்த்தப்பட்டதை இன்றைய நாளில் சாதாரணமாகக் காணக்கூடியதாக உள்ளது. சிறுவர்களை தன்னியல்பாக செயற்பட்டு இன்பமாக வாழ வேண்டிய காலத்தில் அவர்களுக்கான நல்வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு பெற்றோரும் பாதுகாவலரும் உந்துசக்தியாக இருந்து அவர்கள் எதிர்கால வாழ்விற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். 18வயதுவரை அவர்களை உழைப்பாக பயன் படுத்தக் கூடாது.



18 வயதுக்குக் கீழ் தொழிலில் அமர்த்தப்பட்ட சிறுவர்களை தொழில் ஸ்தானத்திற்கு வருபவர் எத்தனை வயது எனக் கேட்கின்ற போது 18வயது எனக் கூற வேண்டும். இது முதலாளியின் கண்டிப்பான உத்தரவு.

சிறுவர்களை தன்னியல்பாக செயற்பட்டு இன்பமாக வாழ வேண்டிய காலத்தில் அவர்களுக்கான நல்வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு பெற்றோரும் பாதுகாவலரும் உந்துசக்தியாக இருந்து அவர்கள் எதிர்கால வாழ்விற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

18 வயதுக்கு குறைந்தவர்களை பெற்றோராக இருந்தாலும், குடும்ப உழைப் பாகக் கூட பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

வறிய குடும்பங்களில் பிறந்த சிறுவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக குடும்பத்திற்கான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை பெறுவதற்காக அவர்களும் உழைப்பாளிகளாக மாற்றப்படுகின்றனர். இதைத் தடுப்பதற்கும் குடும்ப வறுமையை இல்லாது ஒழிப்பதற்குமான நடவடிக்கைகளை பொது நிறுவனங்கள் எடுக்க வேண்டும்.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. மேலும் சிறுவர்களுக்கான பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட கிராம மட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு போன்ற அமைப்புக்கள் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு பிரதேச சிறுவர்கள் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டு தொழிலில் சிறுவர்களை அமர்த்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில் சிறுவர்களுக்கான நலமான வாழ்க்கைக்கு வழியமைக்க முடியும்.

வறிய குடும்பங்களின் சிறுவர்களின் பெற்றோருக்கு சரியானதொரு வாழ்வாதாரத் திட்டத்தை வகுத்துச் செயற்படுத்துவதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சரியான பயனாளிகளைத் தெரிவு செய்து செயற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு பாடசாலையில் வறுமையின் காரணமாக சப்பாத்து போடாது செல்லும் சிறுவர்களையும் பிந்திச் செல்லும் சிறுவர்களையும் பார்த்து "பிந்தி வந்தவர்களும் சப்பாத்து போடாது வந்தோரும் சப்பாத்து வாங்க பணம் தருகின்றேன் நீங்கள் செய்ய வேண்டியது பாடசாலை மலசல கூடம் கழுவ வேண்டும், கூரையில் ஏறி குப்பை தட்ட வேண்டும்" என ஓர் அதிபர் கூறினால் அது தவறு. உண்மையில் இப்படி ஒரு சம்பவம்

இது பற்றி அதிபரிடம் கேட்க அஞ்சும் பெற்றோர்கள் அந்தப் பகுதியில் கிராம அலுவலரை தலைவராகக் கொண்டு இயங்கும் பாதுகாப்புக்குழுவுக்கு கடிதம் எழுதினார்கள்.

இது பற்றிக் கதைக்க பாதுகாப்புக்குழுக் கூட்டத்திற்கு அவரை அழைத்தபோது, இது பற்றி யாரும் கதைக்க முடியாது எனவும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை தன்னிடம் வந்து கூறுமாறும் அந்தப் பாடசாலை அதிபரால் கூறப்பட்டது. இவ்வாறு வெவ்வேறு சம்பவங்கள் வெவ்வேறு பாடசாலைகளில் இடம்பெறுகின்றன. இது பற்றியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சிறுவர்கள் நலமாக கல்வி பயில்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

சிறுவர் உரிமை பிரகடனங்கள், சட்டங்கள் நிறுவப்பட்டிருப்பினும் அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது கேள்விக்குறி. சிறுவர்கள் தொழில் புரிதலை ஒழிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை 2003 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 'சிறுவர் தொழிலுக்கு எதிராக 2002ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் செயற்பாடுகள்' எனும் தலைப்பில் ஜெனிவா நகரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உலகெங்கும் வாழும் 5 தொடக்கம் 17 வயதுக்கிடைப்பட்ட 246 மில்லியன் அளவிலான சிறுவர்கள், சிறுவர் தொழில்கள் என கணிக்கக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இத்தொகையினரில் 171 மில்லியன் சிறுவர்கள் மிகவும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சிறுவர் தொழிலாளர்கள் கூடியளவில் ஆசியாக் கண்டத்தில் இருப்பதாக ஆய்வின் மூலம் அறியப்பட்டது.

பொருளாதார ரீதியான சுரண்டலில் இருந்தும் ஆபத்தான தொழில் புரிதலில் இருந்தும் அரசினால் சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். மேலும் சிறுவர்கள் ஆரோக்கியத்திற்கோ அல்லது உடல், உள, கல்வி, மனித விழுமியங்கள் அல்லது சமூக அபிவிருத்திக்கோ குந்தகம் விளைவிக்கும் எந்தச் செயலில் இருந்தும் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

சிறுவர்கள் என்றென்றும் சுதந்திரப் பறவைகளாக வாழ்ந்து நல்லதொரு கல்வியைப் பெற்றுக் கொள்ள சிறுவர்களைத் தொழிலில் அமர்த்துவதை முற்றாக நீக்குவோம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (50)

### கல்வியில் சாதனை செய்ய எண்களின் வசியம்

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது ஆன்றோர்கள் வாக்கு. கற்றல் என்பது கணக்கில் அடங்கா இன்பம் தரும் செயல். புத்தகம் என்பது மனிதர்களை அகிம்சை வழியில் நடத்தும் ஆயுதமாகும். கல்வி கற்றவர்கள் பலபேர் தங்கள் வியத்தகு கண்டுபிடிப்புக்களால் மக்களுக்குப் பயன்படும் பணிகளில் ஈடுபடுகின்றனர். மனித சமுதாயத்திற்கு கல்வியியலாளர்களின் பங்கு மிகவும் முக்கியம். கல்வியின் முக்கியத்துவத்தை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. பலர் படிப்பைத் தொடர முடியாமல் விட்டு விட நேருகின்றது. சிலர் தங்களின் ஆயுள் முடியும்வரை ஏதாவது படித்துக் கொண்டே இருக்கின்றனர். கல்வித் தடையின்றிக் கற்று வெற்றி பெற எண்களின் இயற்கை பல சூத்திரங்களைக் காட்டுகின்றது.

1ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 4 மற்றும் 8 ஆம் எண் எழுத்துக்கள் பெயரில் அதிகம் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவும்.

2 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 9 ஆம் எண் கூட்டு எழுத்துக்கள் பெயரில் இடம்பெறாமல் கவனித்துக் கொள்ளவும்.

3 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 6 ஆம் எண் எழுத்துக்களை பெயரில் அதிகம் இடம்பெறாமல் கவனிக்கவும்.

4 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 8 ஆம் எண் வரும் எழுத்துக்களை பெயரில் அதிகம் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவும்.

5 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 8 மற்றும் 4 ஆம் எண் வரும் எழுத்துக்களை பெயரில் அதிகம் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவும்.

6 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 3ஆம் எண் எழுத்துக்களை பெயரில் அதிகம் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவும்.

7 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 7,8 வரும் எண் எழுத்துக்கள் முறையின்றிச் சேருவதைத் தவிர்க்கவும்.

8 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 4, 8 வரும் எண் எழுத்துக்கள் முறையின்றி சேருவதைத் தவிர்க்கவும்.

9 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் 2 ஆம் எண் எழுத்துக்களை அதிகம் வராமல் கவனித்துக் கொள்ளவும்.

மேற்கண்ட விதிகளைச் சரியாகக் கவனித்துப் பெயரமைத்தால் கல்வியில் பல சாதனைகள் செய்வார்கள்.

### ஞானமும் எண்களின் இயற்கையும்

அதிர்ஷ்டப் பெயரை அதிகாலை நேரத்தில் அவரவரின் இயற்கை வசிய சக்தியின் அதிர்ஷ்ட நேரத்தில் முழு ஈடுபாட்டுடன் அதிர்ஷ்ட நேரத்தில் எழுதியும், உச்சரித்தும், உச்சாடனத்துடன் செய்துவர அனைத்துச் செயல்களுக்கான ஆதாரத்தை உறுதியாகக் கண்டு ஆனந்தமடைய முடியும். இதற்கு எதையும் துறக்க வேண்டியது அவசியமில்லை. எண்களின் இயற்கை கூறும் அதிர்ஷ்டப் பெயர் பற்றிய சூத்திரங்கள் உங்கள் ஞானத்தேடுதலுக்குத் துணை நிற்கும். கடவுள் தன் வடிவத்தில் இருப்பதாக மனிதன் கற்பனை செய்து கொண்டு



இருப்பதால் தான் அவனுக்கு அளவற்ற அகம்பாவம். மற்ற ஜீவராசிகளைத் தாண்டிய திறன் கொண்டு விட்டான். தன்னுடைய நலன் பற்றி மட்டுமே சிந்தித்துத் தனக்கு சரிவராத எல்லாவற்றையும் இவ்வுலகிலிருந்தே அழிக்க முனைந்து விட்டான். இதற்குத் துணை போவது போல அமைந்திருப்பதே இன்றைய கலாசாரத்தின் குறைபாடு. எண்களின் இயற்கை கடவுள் யார் என்பதை அனுபவபூர்வமாகக் காட்டி விடும் சக்தி வாய்ந்தது. இயற்கையின் அனைத்துப் படைப்புக்களுக்குள்ளும் அதிசயமாக அமர்ந்திருக்கும் சக்தி பற்றி தெளிந்த ஞானத்தைப் புகட்டும் வல்லமை எண்களின் இயற்கைக்கு உண்டு.

எண்களின் இயற்கை உங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. வாழ்வைப் பற்றிய விழிப்புணர்வை விரிவாக்கும். தொழிலில் ஆர்வத்தை வளர்க்கும். அவலமான உண்மைகளை எதிர்கொள்வதற்கான தைரியத்தையும், கவனத்தையும் அளிக்கவல்லது. வாழ்க்கையைப் புதிய கோணங்களில் சிந்திக்கவும், உணரச் செய்யவும் செய்கின்றது. முடிவெடுக்கும் திறனை சரிவரச் செய்யும். உடல் ஆரோக்கியம், சிந்தனைத் திறன், மனத் தெளிவு, உறவுகளிடம் நட்பு, நண்பர்களிடம் உறவு, செய்தொழிலில் உற்சாகம் போன்றவற்றோடு பிரபஞ்ச ஞானம் பற்றிய அடிப்படை அறிந்து வாழச் செய்யும். எண்களின் இயக்கம் என்பது எண்களின் ஆற்றலை பறைசாற்றுவதற்கு மட்டுமல்ல, அதை சிறந்த முறையில் வடிவமைப்பதற்காகவும்தான்.

எண்களை வழிபடுதல் என்பதைவிட எண்கள் வழியாக வழிபடுவதே வாழ்க்கைக்கு வெற்றியைத் தரும். எண்களின் மீது வைக்கும் நம்பிக்கை உங்கள் ஆழ்மனத் தைரியத்தை அதிகரிக்கின்றது. இது உடற் பலத்தைவிடச் சிறந்தது. சரியான எண்களின் ஆதிக்கத்தில் நீங்கள் இருந்தால், உண்மையைச் சோதித்துப் பார்க்கும் ஊக்கத்தையும், உலக வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கான ஆற்றலையும் அதுவே செய்து விடும். வசியப் பெயர் மந்திரம் என்பது உங்களுக்குள் இருக்கும் கதவைத் திறப்பதற்கான தலைசிறந்த சாவியாகும். யாரையும் யாருடனும், எதையும், எதனுடனும் ஒப்பிடாதீர்கள். எந்தவொரு பிரச்சனைகளைக்கடக்க நிச்சயம் உதவும். உங்கள் அதிர்ஷ்டப் பெயரெண்ணை மற்றவருக்கு உள்ள அதே அதிர்ஷ்டப் பெயரெண்ணுடன் ஒப்பிட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

**(முற்றும்)**

# நல்ல படைப்பாளிகளின் தலைப்புகள் சோடை போவதில்லை

பொதுவாக நல்ல படைப்பாளிகளின் தலைப்புகள் சோடை போவதில்லை என்று ஒரு கூற்று உண்டு. பலசமயம் படைப்பை மீறி அவை நினைவில் நிற்கும். படைப்பை விடவும் ஆழமான மன அதிர்வுகளை உருவாக்கும். இதற்கு முக்கியமான உதாரணம் எழுத்தாளர் ஜெயகாந்தனின் தலைப்புகள். 'யுகசந்தி' 'புதிய வார்ப்புகள்', 'சில நேரங்களில் சில மனிதர்கள்' போன்ற தலைப்புகள் படைப்புகளின் துணை இல்லாமலேயே தமிழில் நீடித்திருக்கின்றன. அவை பல தளங்களில் நின்று மொழியில் பயன்படுத்தவும்படுகின்றன

படைப்பில் பிற அனைத்தையும் விட தேய்வழக்கு அதிகமாக நிகழ வாய்ப்புள்ளது தலைப்பில்தான். தலைப்புகள் எத்தனை மோசமாக நம் எழுத்தாளர்களுக்குப் பழக்கப்பட்டிருக்கின்றன என்று பாருங்கள். கதாநாயகி ஒரு தியாக தீபம். ஆகவே தலைப்பு மெழுகுவர்த்திகள். இங்கே பன்மை எப்படி வந்தது?

பெரும்பாலும் மோசமான குறிப்புருவகத்தை தலைப்பாகச் சூட்டுவது இங்கே வழக்கம். சிறகொடிந்த பறவை, பறக்க முடியாத கோழிகள், அலையில்லாத கடல் என்றெல்லாம் தலைப்புகள் படைப்பை விளக்காமல் இருந்தால் நல்லது. அது ஒரு வெறும் பெயராக இருக்கலாம் குறைந்த பட்சம். 'அகிலா' அவ்வளவுதான், போதும். அப்படைப்பினை உருவாக்கிய அடிப்படை உத்வேகம் வெளிப்படுவதாக அது அமையலாம். தவறுகள் குற்றங்கள் அல்ல போல. அல்லது படைப்பில் இருந்து மேலேறி ஒரு தனி மன எழுச்சியின் வெளிப்பாடாக அது இருக்க வேண்டும் பொன்னகரம் போல.

படைப்புக்கு பெயரை முன்னரே சிந்தித்து அதைச் சொல்லிச் சொல்லி பிறமன எழுச்சிகளை உருவாக்கிக் கொள்ளும் வழிமுறை உண்டு. புதுமைப்பித்தன் நாள் கணக்கில் 'நாசகார கும்பல்' என்று சொல்லிக் கொண்டிருந்ததாக சொல்வார்கள். எழுதிய பிற்பாடு தலைப்பு போடப் போனால் பெரும்பாலும் கற்பனை தரை தட்டி நிற்கும். அப்படைப்பு அடைந்துள்ள பல தளங்கள் அப்போது எழுத்தாளருக்கே தெரியாதவையாக இருக்கும் என்பதே முதல் காரணம்.

சிலசமயம் எத்தனைமுறை யோசித்தாலும் வராத தலைப்பு சட்டென்று வந்து நிற்கும். அச்சிலேறும் நிலையில் இருந்த கதைக்கு ஆற்றாமை என்று போடும் தலைப்புகள் உண்டு. மௌனியின் கதைகளுக்கு 'அழியாச்சுடர்', 'எங்கிருந்தோ வந்தான்' போன்ற அரிய தலைப்புகளைப் போட்டனர்.

'இந்நேரம் இந்நேரம்' தலைப்புகள் மிகச் சாதாரணமாக இருக்கும். சொல்லச் சொல்ல அவை வலிமை பெறும். சாதாரணமான தலைப்பு என்ற கோட்பாட்டில் சுந்தர ராமசாமிக்கு அபாரமான நம்பிக்கை உண்டு. 'ஒரு புளிய மரத்தின் கதை' சாதாரணமான தலைப்பே..

'குழந்தைகள்', 'பெண்கள்', 'ஆண்கள்' தலைப்பை சொல்லிச் சொல்லி அது நிலைபெற்று விடும். அதுவே நிகழ்ந்தது. ஆனால் இது நாவல்களுக்குத்தான் சிறுகதைகளில் அல்ல. சுந்தர ராமசாமியின் பல சிறுகதைத் தலைப்புகள் நினைவிலேயே நிற்பதில்லை. கோயில் காளையும் உழவுமாடும் விதி விலக்கு. குழந்தைகள் ஆண்கள் பெண்கள் தலைப்பையே சரியான வரிசையில் சொல்வது கஷ்டம்.

புது எழுத்தாளர்களில் தலைப்பு போடுவதில் முக்கியமானவர் எஸ்.ராமகிருஷ்ணன். 'உறுபசி', 'நெடுங்குருதி', 'விழித்திருப்பவனின் இரவு' எல்லாமே மிக முக்கியமான தலைப்புகள். என் மனதில் இத்தலைப்புகள் அந்த ஆக்கங்களையும் மீறி வளர்ந்திருக்கின்றன. யுவன் சந்திரசேகரின் 'கடல்கொண்ட நிலம்', 'நச்சுப் பொய்கை' போன்றவை நல்ல தலைப்புகள். ஆனால் மிதமிஞ்சி உருவகத் தன்மை கொண்ட புகைச்சுவருக்கு அப்பால் போன்ற தலைப்புகளைப் போட்டு நினைவில் நிற்காமல் அடிக்கும் இயல்பும் அவருக்கு உண்டு.

என் நூல்களுக்கு நான் முதலிலேயே தலைப்புகளை உருவாக்கி விடுவேன். குறிப்பாக நாவல்களுக்கு. தலைப்புகள் பலகாலம் என் நினைவில் தியான மந்திரம் போல ஓடிக் கொண்டிருக்கும். விஷ்ணுபுரம், பத்துவருடங்களாக, அசோகவனம், கொற்றவை எல்லாம் இன்னும் அதிக வருடங்கள். அத்தலைப்புகள் விதைகள் போல. அவையே நாவலை உருவாக்குகின்றன.

எனக்குத் தலைப்பில் நிகழ்ந்த முக்கியமான பிழை 'பின் தொடரும் நிழலின் குரல், தான். அந்நாவலை எழுதிய பிறகு அக்கருவுக்குப் பொருத்தமாக சூட்டிய பெயர் அந்த நாவலில் இரு இடங்களில் அந்த உருவகம் வருகிறது. அப்படி வந்த இன்னொரு தலைப்பு 'ஏழாம் உலகம்'.




பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டபோது முதல் தலைப்புக்கு ஏராளமான சிக்கல்கள். அந்நாவலைப் படித்தவர்களும் தலைப்பை சரியாகச் சொல்வதில்லை. 'பின்தொடரும் நிழல்', 'நிழலின் குரல்', 'பின்தொடரும் குரல்' என எதையாவது சொல்வார்கள். ஆகவே நான் உருவகத்தலைப்புகளை விட்டுவிட்டு காடு போன்ற நேரடியான தலைப்புகளைச் சூட்டினேன்.

ஆனால் இப்போது கிட்டத்தட்ட பத்து வருடங்கள் கழித்து பின்தொடரும் நிழலின் குரல் என்ற தலைப்பை மீண்டும் மீண்டும் பல வடிவங்களில் பலர் எழுதியதைக் கண்டு கொண்டிருக்கிறேன். அந்த தலைப்பு மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறது என்றே படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடைந்து வரும் விலங்குகள்

## பனிக்கரடி



பனிக்கரடி (துருவக் கரடி) நில உருண்டையின் கடும் உறைபனி சூழ்ந்த ஆர்டிக் பகுதியில் காணப்படும். இவை ஏறத்தாழ 20-25 ஆண்டுகள் வாழும் வெண்ணிறக் கரடி இனமாகும்.

இது இறைச்சி உண்ணும் ஊனுண்ணிப் பாலூட்டி. இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாடவல்லது. இவற்றின் முதன்மையான உணவு சீல் ஆகும். வளர்ந்த ஆண் கரடி 400 முதல் 600 கிலோகிராம் எடையுடையது. பெண் கரடிகள் 200 முதல் 300 கிலோகிராம் எடையுடையவை. இவை இளவேனிற் (வசந்த) காலத்தில் கருத்தரிக்கின்றன. இவற்றின் கருவுற்றிருக்கும் காலம் 240 நாள்களாகும். பொதுவாக இரண்டு குட்டிகள் பிறக்கின்றன. உலகில் ஏறத்தாழ 20,000 பனிக் கரடிகள் உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.


## டிங்கோ நாய்



ஆஸ்திரேலியாவில் உள்ள பழக்கப் படுத்தப்படாத காட்டுநாய் டிங்கோ என்னும் நாய்.

இதன் எடை 10 முதல் 24 கிலோ கிராம் இருக்கும். உயரம் ஏறத்தாழ 44 செ.மீ முதல் 63 செ.மீ வரை இருக்கும்; உடல் நீளம் 86 முதல் 122 செ.மீ இருக்கும். பெரும்பாலும் இவை குரைப்பதில்லை மரத்திலும் ஏறவல் லவை. ஆண்டிக்கு ஒருமுறைதான் இனப்பெருக்கம் செய்கின்றன.

## நீர்யானை



நீர்யானைகள் ஆபிரிக்காவைச் சேர்ந்த பாலூட்டி இனமாகும். இது ஒரு தாவர உண்ணி. கூட்டங்களாக வாழும். ஒரு கூட்டத்தில் 40 நீர்யானைகள் வரை காணப்படும். இவை 40 முதல் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன. இவை 3.5 மீற்றர் நீளமானவை; 1.5 மீற்றர் உயரமுடையவை; 1500 முதல் 3,200கிலோகிராம் நிறையுடையவை. பெண் நீர் யானைகள் ஆண்களைவிடச் சிறியவை.


நீர்யானைகள் தாமாக மனிதரைத் தாக்குவதில்லை. ஆனால் அவற்றின் ஆள்புலத்தினுள் நுழைவோரை மூர்க்கமாகத் தாக்கக் கூடியவை. நீர்யானைக் குட்டிகள் நீரினுள்ளேயே பிறப்பதால் தம் முதல் மூச்சுக்காகவே நீந்தி நீர்மட்டத்துக்கு வருகின்றன. நீருக்கடியிலேயே முலைப்பால் அருந்துகின்றன.

## சுலவேசி நாற்கொம்புப் பன்றி



நான்கு கொம்புள்ள பேபரூசா செலெபென்சிசு என்னும் அறிவியற் பெயர் கொண்ட சுலவேசி நாற் கொம்புப் பன்றி இனம் இந்தோனேசியத் தீவுகளில் வடக்குசுலவேசியையும் அருகே உள்ள லெம்பேத் தீவுகளையும் இயற்கை வாழிடமாகக் கொண்டுள்ள ஓரினம். நான்கு கொம்புகள் உள்ள விலங்கு என்று கூறினாலும் அவற்றுள் இரண்டு கொம்புகள் இவ்விலங்கின் கீழ்த் தாடையின் நாய்ப் பற்கள் அல்லது புலிப்பற்கள் ஆகும். இதனை எயிறு என்றும் கூறுவர்.

## சிவிங்கிப்புலி



சிவிங்கிப்புலி பூனைக்குடும்பத்தைச் சேர்ந்த ஊனுண்ணி வகையைச் சேர்ந்த பாலூட்டி விலங்காகும். இது நிலத்தில் வாழும் விலங்குகளிலேயே மிகவும் வேகமாக ஓடக்கூடியதாகும். இதனால் மணிக்கு 105 கிமீ வேகத்துக்கு மேல் ஓடமுடியும். ஓடும் போது வெறும் மூன்று நொடிகளில் 110 கிமீ வேகத்தை எட்டிப் பிடிக்கும்

இதன் உடல் முழுவதும் 2 முதல் 3 செமீ அளவுள்ள வட்டவடிவ கருப்புப் புள்ளிகள் காணப்படும். அதன் கீழ் வயிற்றுப்பகுதியில் புள்ளிகள் எதுவும் காணப்படாமல் வெள்ளை நிறத்தில் இருக்கும். வயதுவந்த ஒரு சிவிங்கிப்புலி 40 முதல் 65 கிகி எடையும் 112 முதல் 135 செமீ நீளமான உடலும் 84 செமீ நீளமுடைய வாலும் கொண்டிருக்கும். ஆண் சிவிங்கிப் புலிகள் பெண் சிவிங்கிப்புலிகளை விடச் சற்றுப் பெரிய தலையை உடையவையாய் இருக்கும்.


## நாற்கொம்பு மான்



தெற்காசியாவின் திறந்த வெளிக்காடுகளில் வாழும் ஒரு மானினமாகும். இவை இந்தியாவில் கங்கை நதியின் தெற்கிலிருந்து தமிழ்நாடு வரையிலும் ஒரிசா மாநிலத்திற்கு மேற்கிலிருந்து குஜராத்தின் கீர் காடுகள் வரை வாழ்கின்றன. மேலும் இவ்வினத்தின் ஒரு சிறிய உயிர்த்தொகை நேபாளத்திலும் வாழ்கின்றன; வளர்ந்த விலங்கு 55-60 செ.மீ உயரமும் 20 - 22 கிலோ எடையும் கொண்டிருக்கும்.

பெண் விலங்குகளுக்கு கொம்புகள் காணப்படாது. ஆண்களுக்கு நான்கு கொம்புகள் இருக்கும். இதில் பின்புறம் உள்ள இரண்டு கொம்புகள் பிறந்த சில மாதங்களிலேயே முளைக்கத் தொடங்கிவிடும். முன்புறம் உள்ள கொம்புகள் பிறந்ததிலிருந்து 14-15 மாதங்களுக்குப் பின் முளைக்க ஆரம்பிக்கும். இந்த மான் இனம் இன்னமும் அழியவாய்ப்புள்ள இனமாகக் காணப்படுகிறது. இவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. இவற்றின் எண்ணிக்கை 1000 முதல் 10000 வரை இருக்கலாம் என கருதப்படுகின்றது.

# வேஷம் போட்ட கழுதை



ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அந்தக் கழுதைக்கு தேவையான தீவனத்தை அவரால் வைக்க முடியவில்லை. வயிறாரப் புல் மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும் இல்லை.


இந்தக் காரணத்தால் கழுதை நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. சலவைத் தொழிலாளி கழுதையின் நிலை கண்டு மிகவும் கவலைப்பட்டார். ஒருநாள் சலவைத் தொழிலாளி காட்டு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு புலி செத்துக் கிடப்பதைக் கண்டார். அதைக் கண்டதும் சலவைத் தொழிலாளிக்கு ஒரு யோசனை தேன்றியது.

இந்தப் புலியின் தோலை உரித்து அதைக் கழுதை மீது போத்தி நெல் வயல்களில் விட்டு மேயச் செய்தால் உண்மையாகவே புலி மேய்வதாக எண்ணிப் பயந்து கொண்டு வயலுக்குச் சொந்தக்காரர்கள் பேசாமலிருந்து விடுவார்கள். கழுதை வயிறார மேயும் என்று நினைத்துக் கொண்டார். புலித் தோலை உரித்து எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

மறுநாள் கழுதை மீது புலித்தோலைப் போர்த்தி விளைந்திருந்த வயல்கள் பக்கமாக போகச் செய்தார். புலிதான் பயிரை மேய்கிறது என்று எண்ணிக் கொண்டு குடியானவர்கள் அதை விரட்டப் பயந்து கொண்டு பேசாமலிருந்து விட்டார்கள். கழுதை விளை நிலத்தில் அன்றாடம் வயிறார மேய்ந்து நன்றாக கொழுத்துவிட்டது.

ஒரு நாள் கழுதை புலித் தோலைப் போர்த்திக் கொண்டு நெல் வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒரு பெண் கழுதை உரத்த குரல் எடுத்துக் கத்தத் தொடங்கியது. அதைக்கேட்ட புலித்தோல் போர்த்திய ஆண் கழுதை உற்சாகமடைந்து தானும் உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கிவிட்டது. குடியானவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. எல்லோரும் ஒன்று சேர்ந்து தடிகளை எடுத்துக் கொண்டு வந்து கழுதையை நன்றாக அடித்துக் கொன்று விட்டார்கள்.

# வான்வீதிப் பாலம்



மில்லோ என்னும் பாலம் தென் பிரான்ஸிலே உள்ள வியாழுட்டும் பொறியியல் சாதனை படைத்த வான் வீதி என அழைக்கும் மிகவும் உயர்ந்த பாலம். இப் பாலம் டார்ன் ஆற்றுப் பள்ளத்தாக்கைக் கடக்க 2,460 மீற்றர் நீளமுடைய பாலம்.


பிரான்ஸின் இரும்புடைத் தொங்கு பாலம் ஏழு கம்பங்கள் தாங்கி நிற்கும் 2460 மீற்றர் நீளமான வான்வீதிப் பாலம் பிரான்ஸின் தெற்குப் பகுதியில் மாஸ்ஸிப் மைய மலைப் பிரதேசப் பள்ளத்தாக்கில் 886 அடி 270 மீற்றர் உயரத்தில் படுத்திருக்கும் வானவில் போலக் காட்சி அளிக்கிறது!




மெலிந்த, எளிதான, மென்மையான மில்லோ வான் வீதிப் பாலத்தைப் படைத்தவர், பிரிட்டிஷ் கட்டமைப்புக் கலை நிபுணர் நார்மன் பாஸ்டர். ரைஸ்ஸ்டாக் என்னும் ஜேர்மன் நாடாளுமன்றத்தைப் பேர்லினில் டிசைன் செய்த கட்டட நிபுணரும் இவரே. வான் வீதிப் பாலத்தின் நீளம்: 8200 அடி. அகலம்: 106 அடி. பாலத்தின் தடிப்பு: 14 அடி. இரட்டைப் பாதைகளை இருதிசைகளிலும் அமைக்கப்பட்டுப் பாலம், ஒரே சமயத்தில் இரண்டு வாகனங்கள் இணையாகச் செல்லும் வசதி படைத்தது.

1989 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதி ஆய்வு செய்யப்பட்ட நான்கு பாதை அமைப்பு முறைகளில் ஒன்றாக வான் வீதிப் பால அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.

# கடல் ஆமை



உலகம் முழுவதும்225 வகைகள் கடல் ஆமைகள் காணப்படுகின்றன. இதன் மேலோடு கடினமயான பலம் பொருந்தியதாகவும் இதன் உட்பகுதி மிகவும் பாதுகாப்பானதாகவும் அமைந்துள்ளது. விலா எலும்புகளும் முதுகு எலும்புகளும் ஒன்றாகி உடல் தசைகள் சுருங்கிக் காணப்படுகின்றன. இவற்றின் நுரையீரல் மேலோட்டினை ஒட்டியவாறு அமைந்



திருக்கும்.

பற்களுக்குப் பதிலாக கொம்புகளால் ஆன அசையாத அலகு போன்ற அமைப்பு இரு தாடைகளிலும் இருக்கிறது. இதன் கை, கால்கள் நீர் மற்றும் நிலத்தில் வாழ ஏற்றதாகவும் உள்ளது. முன்கால்கள் துடுப்புகளைப் போன்று இருப்பதால் மிக வேகமாக கடலில் நீந்திச் செல்கின்றது.

நிலத்தில் வாழும் ஆமை தன்னுடைய தலை [illegible] தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். ஆனால் கடல் ஆமைகளால் இப்படிச் செய்ய முடியாது.

# நெதர்லாந்து



நெதர்லாந்து ஐரோப்பாக் கண்டத்தில் அமைந்துள்ள ஒரு நாடாகும். வடக்கிலும் மேற்கிலும் வடகடலும் தெற்கில் பெல்ஜியமும் கிழக்கில் ஜேர்மனியும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. ஆம்ஸ்டர்டாம் இதன் தலைநகரம் ஆகும். இது ஒரு மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு. இந்நாடு இங்கு அமைந்துள்ள காற்றாலைகளுக்குப் புகழ்பெற்றது.


நெதர்லாந்தானது கடல்மட்டத்தை



விடத் தாழ்மட்டத்தில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றாகும். அதிகளவான சமவெளிகளைக் கொண்டுள்ளது. இந் நாட்டில் கண்டக் காலநிலை காணப் படுகின்றது.

இந் நாட்டில் ஒல்லாந்து இனத்தவர்களே அதிகளவாக வாழ்கின்றனர். இரண்டாம் உலகப்போரின் பின்னர் அதிகளவான ஆசிய, ஆபிரிக்க நாட்டினர் குடியேறியுள்ளனர். உலகின் அதிகளவான மக்கள் அடர்த்தி கொண்ட நாடு நெதர்லாந்து ஆகும். ஒல்லாந்த மொழியே இந்நாட்டின் அரச கரும மொழியாகும். உரோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, இஸ்லாம் மதங்களைப் பின்பற்றுபவர்களும் எந்தவொரு மதத்தினையும் பின்பற்றாதவர்களும் பெருமளவில் வாழ்கின்றனர்.

ஐரோப்பியப் பொருளாதாரத்தில் நெதர்லாந்து முக்கிய இடம் வகிக்கிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்தை பின்பற்றும் ஒரு நாடுமாகும். கப்பல் கட்டுதல், மீன்பிடி, வர்த்தகம் போன்ற துறைகளின் மூலம் பொருளீட்டுகிறது.



காலனித்துவ காலத்தில் கைப்பற்றிய நாடுகளிலிருந்து வளங்களைச் சுரண்டிய நாடுகளிலொன்றாகும். நாணயம் யூரோ. மன்னராட்சி இடம்பெறும் நாடாகும். எனினும் நாடாளுமன்ற ஆட்சி முறையே இப்போது நடைபெறுகின்றது. மன்னர் நாட்டின் தலைவராக இருந்த போதிலும் அதிகாரங்கள் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதமரிடம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கு அடியில்




# தமிழர் நகரம்

கிறிஸ்து பிறப்பதற்கு 7,500 ஆண்டு முந்தைய நகரம் இது வாகும். அதாவது 9,500 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடல் கொந்த ளிப்பில் இந்த நகரங்கள் மூழ்கின. பூம்புகாரும் குஜராத்தின் காம்பேயும் ஹரப்பா, மொகஞ்சதரோ நாகரிகங்களை விடப் பழமையானவை ஆகும்.

கண்காட்சியில் ஒரு மணிநேரத் துக்கும் மேலாக பூம்புகார், காம்பே நகரங்கள் பற்றிய வீடியோ காட்சிகள் காண்பிக்கப்பட்டது. கடலுக்கடியில் சென்று எடுக்கப்பட்ட முக்கியமான வீடியோ படங்கள் அவை. இந்திய நிலவியல் விஞ்ஞானிகள், மீனவர்கள் உதவியுடன் எடுக்கப்பட்டது.

கடலுக்கடியில் நகரங்களின் சுவடு கள் ஆங்காங்கே உள்ளன. ஏறக்குறைய பூம்புகார், காம்பே நகரங்கள் ஒரே காலத்தவை. இரண்டும் ஒரே காலத் தில்தான் கடலில் மூழ்கி இருக்க வேண் டும் என்று கிரகாம் குக் கருதுகிறார்.

வீடியோ படத்தில் மண், கல்லாலான கருவிகள், மனித எலும்புகள், வீட்டுச் சுவர்கள், பாத்திரங்கள், ஆபரணங்கள், வீட்டு முற்றங்கள் ஆகியவை காணப் படுகின்றன. பூம்புகார் அருகே மூழ்கிய நகரம் பற்றி எடுக்கப்பட்ட வீடியோ படத்தில் பெரிய குதிரை வடிவ பொம்மைகள் காணப் படுகின்றன. இதைப் பற்றி தெரிய வந்ததும் விஞ் ஞானிகள் வியப்பில் மூழ்கிப் போயுள்ளனர். இதைப் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்தால் கூடுதல் விவரங்கள் கிடைக்கலாம் என்று விஞ் ஞானிகள் கூறுகின்றனர்.

இதைப் படித்தவர்கள் என்ன செய்தீர்கள்? கிர காம் குக் பற்றி நமது மேடைகளில் பள்ளி வகுப்புகளில் நீங்கள் பேசினீர் களா? அறிவியல் அடிப்படையில் பூம்புகார் 9500 ஆண்டு பழமை வாய்ந்தது.

ஈராயிரம் ஆண்டுகள் என அடிக்கடி நமது பழமை பற்றிப் பேசுவதை நிறுத்தி விட்டு பத்தா யிரமாம் ஆண்டு நாகரிகம் படைத்தவர்கள் என்று பேசத் தொடங் கினீர்களா?

உங்கள் மூளை ஈராயிரமாண்டுகள் வரை மட்டுமே சிந்திக்குமா? உறைந்து போய் விட்டதா? புதிய உண்மை மெய் பிக்கப்பட்டவுடன் நமது பாட நூல்களில் ஏற்றப்பட்டிருக்க வேண்டாமா? காம்பே நகரம் கண்டுபிடிக்கவுடன் இந்தியா டுடே அட்டைப்படக் கட்டுரை வெளி யிட்டது.

பூம்புகார் பற்றிய உண்மைகள் வெளிவந்ததும் ஊடகங்கள் அதைப் பெரிதாக வெளியிடவில்லை. தமி ழினம் பற்றிய அக்கறையுள்ள தொலைக்காட்சிகளுமில்லை.

தமிழறிஞர்கள் நடத்தும் சிற்றிதழ்க ளாவது பதிவு செய்ய வேண்டாமா? பூம்புகார் பற்றி மேலும் ஆய்வு தேவை என்று தமிழறிஞர்கள் குரல் எழுப்பி யதுண்டா? சென்னையில் உள்ள தேசிய கடற்பொறியியல் ஆய்வு நிறுவனம் தானே இந்த ஆய்வில் ஈடுபட்டது.

தமிழகத்தில் உள்ள அரசு அமைப்பு கடலில் மூழ்கிய தமிழக நகரங்களை, தமிழனின் குமரிக் கண்டத்தை ஆய்வு செய்ய வேண்டும் என ஏன் எந்த அரசியல் கட்சியும் குரல் கொடுக்க வில்லை? நாடாளு மன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்க வேண்டாமா?

**உங்கள் மூளை ஈராயிரமாண்டுகள் வரை மட்டுமே சிந்திக்குமா? உறைந்து போய் விட்டதா? புதிய உண்மை மெய்ப்பிக்கப்பட் டவுடன் நமது பாட நூல்களில் ஏற்றப்பட்டிருக்க வேண்டாமா?**

அறிவியல் அடிப் படையில் நம் நாகரி கச் சிறப்பு அவனி யில் மெய்ப்பிக்கப்பட மாற்றார் முன் சான் றுகளை நிறுத்த ஏன் நாம் துடிப்பதில்லை? கடற்கரை ஓரங்களில் மாறுதல் ஏற்படுவது இயற்கை இடைய றாது நடத்தும் அழி வுச் செயல்களில் ஒன்றா கும். குமரிக் கண்டம் சோழர்களின் புகழ் பெற்ற பூம்புகார் துறை முகம் தற்போது கடலுக் கடியில் உள்ளது.

அதே சமயத்தில் முன்னொரு காலத்தில் கடற்கரையோரம் இருந்த சீர்காழி நகரம் தற்போது கடற்கரை யிலிருந்து உள்ளடங்கி பல கி.மீ. தூரத் தில் உள்ளது.

(தொடரும்)

# பிரபஞ்சத்

# எல்லாமே விள

வலயவன்



**பொ**ய்யை திருப்பத் திருப்பச் சொன்னால் அது உண்மையாகிவிடுகிறது என்பது இந்த உலகில் பல உண்மைகள் புழங்குவதிலிருந்து தெரிகிறது. இந்தப் பாதையில் பொய் ஏறத்தாழ உண்மையாக ஆகிநிற்கும். ஒரு பரிணாமப் படி நிலையை விளம்பரம் என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாமே மூன்றுவகை இருப்புநிலைகள் கொண்டவை. இகம், பரம், விளம்பரம். நம்மிடம் இருப்பவை இகம். இல்லா தவை பரம். இருக்க நாம் ஆசைப்ப டுவையே விளம்பரம்.

எத்தனை முறைதிருப்பச்சொன்னால் ஒரு பொய் விளம்பரமாக மாறும் என்பதற்கு ஒரு கணக்கு இருக்கிறது. அளக்கிறான் பையன் என்று கேட்பவர் நினைப்பதுதான் பொய். என்ன இது திருப்பத் திருப்பச் சொல்கிறானே என்று கேட்பவர் எண்ணும் போது அது விளம்பரமாக ஆகிவிட்டிருக்கிறது. 'ஐயோ ஐயோ' போதுமய்யா நிப்பாட்டு; கொல் லாதே என்று கேட்பவர் கதறும்போது அது உண்மை ஆக வளர்சிதைமாற்றம் அடைந்திருக்கிறது.

விளம்பரம் என்பது தொன்மைக்காலம் தொட்டே இருந்து வந்திருக்கிறது. அப் போதெல்லாம் விளம்பர முகவர்கள் நேரடியாக நுகர்வோரை தேடிச்சென்று விளம்பரம் செய்தார்கள். உதாரணமாக ஞானப்பழத்தைக் கொண்டு சென்று ஈசன் குடும்பத்தில் விற்ற நாரதரைச் சொல்லலாம். மலைமீது யேசு தியானத்தில் இருந்த போது வந்து நின்று ஈரேழு உலகங்களின் அருமைகளைப் பற்றிப் பேசிய லூஸிங் பரையும் சிறந்த விளம்பர முகவராகக் கொள்ளலாம்.

விளம்பரத்தில் ஐந்து வகை இருக் கிறது. ஒரு பொருளில் உள்ள சிறப்புகளை நம்பும்படியாக எடுத்துச் சொல்லி விளம் பரம் செய்வது. நம்பிறமாதிரித்தான் இருக்கு என நுகர்வோர் தயங்குமிடத்தில் விளம்பரம் வெற்றிபெறுகிறது. தொலைக் காட்சிப்பெட்டியின் திரை ஐஸ்வரியா ராயின் இடுப்பைப்போல் இருப்பதாகச் சொல்லும் விளம்பரம் இதற்கு உதாரணம்.

இரண்டாவது வகை, ஒரு பொருளில் இல்லாத அருமை பெருமைகளை கொஞ் சம்கூட நம்ப முடியாதபடி எடுத்து ரைப்பது. ஒரு சேவிங் கிறீமை பயன் படுத்தினால் பெண்கள் கொக்கிபோட் பட்டவர்களைப்போல பின்னால்வரு வார்கள் என்னும் விளம்பரம் உதாரணம். 'என்னய்யா இதெல்லாம்!' என்று நுகர் வோர் அலறிக் கூவும்போது விளம்பரம் வெற்றிபெறுகிறது. குறிப்பிட்ட சோப் அல்லாததை பயன்படுத்தி தன் மகளுக்கு ஏதாவது நடக்கக் கூடுமென பதறியபடி தெரு வில் ஓடும் தாய் இன்னொரு உதாரணம்.

மூன்றாம் வகை விளம்பரம் பொரு ளின் தீமையைப் பற்றி எடுத்துச் சொல் வது. அதற்குச் சிறந்த உதாரணம் ஒனிடா தொலைக்காட்சிப்பெட்டி விளம்பரம் தான். சும்மா தட்டினாலே திரை உடைந்து விடும் என்பதைச் சொல்லியே அதையும் தான் பாப்பமே என்ற உரிமையாளர்களின் அகங்காரத்தைத் தூண்டி வெற்றிபெற்றது அந்த விளம்பரம்.

நான்காம் வகை விளம்பரம் பொரு ளுடன் எந்த சம்பந்தமும் இல்லாத விட யங்களைச் சொல்வது. 'பட்டுக்கோட் டைக்கு வழிகேட்டால் கொட்டைப்பாக்கு காசுக்கு எட்டு' என்பது இதன் சூத்திரம். ஒரு பெண் ஒருவனைக் காதலிக்கிறாள். ஒரு பையன் ஐஸ்கிரீம் சாப்பிடுகிறான். ஆகவே அந்த சோப் நல்ல சோப். இப்படி கற்பனையைத்தூண்டும் தொடர் பில்லாமைகளை விளம்பரமாகப் பயன் படுத்தலாம்.

ஐந்தாம் வகை விளம்பரமே நேரடியானது, தொன்றுதொட்டு வருவது. விற்பவரே கூவி விற்பது இந்த வகைப்படும்.

இதையே கடைகளில் சிறப்பாகப் பயன் படுத்துகிறார்கள். விமானத்தில் தவறவிட்ட ஜெயச் சந்திரனை அழைப்பது போல நொடிக்கு இருபதுமுறை ஜெயச்சந்திரன், ஜெயச்சந்திரன், ஜெயச்சந்திரன் என்று கூப்பாடுபோடும் விளம்பரம். வாய் மணக்க நிஜாம் பாக்கு. பல் கறுக்க நிஜாம் பாக்கு செம்புள்ளிபோட நிஜாம்

## அறிவென்பது
## உண்டு!

### பயம் (அச்சம்)

பயமென்பதோர் அறிவு, உயிரின
பரிணாமத்தில் பாதுகாப்பு உணர்வு
வலியும் நோவும், நோய்களை
இனங்காண, நோய்களின் மீதான பயமே
மருத்துவ ஆராய்சி கண்டுபிடிப்புக்கள்!
தேவைகள் மீதான பயமே சேமிப்பு!
ஆசைகள் மீதான பயமே மறுபிறப்பு,
அப்பாற் பட்டவை மீதான பயமே சமயம்
அவசியமானவை மீதான பயம் ஆரோக்கியம்!
அனைத்தின் மீதான பயம்-மனநோய்!

### வெட்கம் (நாணம்)

உணர்வுகளின் சேமிப்பு(உடைமை)
உறவுகளை இணைக்கும் பாலம்
வாரிசுகளை வளர்தெடுக்கும் தந்திரம்
இன்பங்களைக் கூட சிதறவிடாமல் காக்கும்
புலனைந்தின் வழியான அனுபவிப்பு!
இடைவெளிகளே இன்பத்தைக் கூட்டும்!
பட்டும் படாமலும், பார்த்தும் பார்க்காமலும்
தொட்டும் தொடாமலும், ஏங்கவைத்து
படபடக்கும் இதயங்களே காதலர் சின்னம்!

### துக்கம் (

ஆசைகளை வளர்காததால் விலங்
துன்பப்படுவதில்லை, மனதில்
மறைத்து வைப்பதில்லை, மறந்து
இயற்கைக்கிசைவானதே அவற்றி
மகான்களுக்கில்லைத் துன்பம்-பு
ஐந்தையும் அடக்கும் அறிவைப்
கௌதம புத்தருக்கு துக்கமே தந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தில்
# ...ளம்பரம்



“

விளம்பரம் என்பது தொன்மைக்காலம் தொட்டே இருந்து வந்திருக்கிறது. அப்போதெல்லாம் விளம்பர முகவர்கள் நேரடியாக நுகர்வோரைத் தேடிச்சென்று விளம்பரம் செய்தார்கள். உதாரணமாக ஞானப் பழத்தைக் கொண்டு சென்று ஈசன் குடும்பத்தில் விற்ற நாரதரை சொல்லலாம்.

பாக்கு என்று கூச்சலிடுவது இன்னொரு உதாரணம்.

விளம்பரங்களில் இதுவே ஆக வெற்றி கரமான வழிமுறை என்பதை நிரூபித்தது கோபால் பல்பொடி. தினமும் இலங்கை வானொலியில் பன்னிரண்டாயிரத்து நானூறு முறை கோபால் பல்பொடி என்று கூவிக்கூவி பெரும்பாலானவர்கள் மனதில் பல்பொடி என்னும் சொல்லுடன் கோபாலும் இணைந்து விட்டது. இதை பாலர் வகுப்பு விளைவு என்று விளம்பரத்துறையில் சொல்கிறார்கள். (தொடரும்)

## ... அனைத்திலும்

### துணிவு (வீரம்)

நோய் நொடி, விபத்து மரணம், யுத்தம்
இயற்கையனர்த்தங்கள், குடும்பப்பிரிவு
கல்வி கேள்விகளில் பின்னடைவு வசதி
வாய்ப்பு இழப்பு, இவைகளைத் தாண்டி
வாழும் துணிவும் வாழவைக்கும்
துணிவும்!அறிவும்!

### தூண்டல் (உணர்வு)

இறப்புத்தான் வரினும் பசியின் காண்டல்
இல்லாது யாரும் உணவையும் கொள்ள
விரும்புவதில்லை, உணர்வின் தூண்டல்
இல்லாது யாரும் புணர்வில் ஈடுபடுவதில்லை
இவை எல்லா உயிர்களுக்கும் பொது வாயினும்
இவை இல்லாமல் இயங்குபவையுமுண்டு
ஆனாலும் இயற்கையின் தூண்டல்
இல்லாமல் துலங்கல் இல்லை இவை
கடந்து அவரவர் காலக்கிரக விதியின்படி
போட்டி பொறாமை, கோபம் குரோதம்
ஈவு இரக்கம், அன்பு கருணை
மனித நேயம், மனிதப் பண்பு-இயற்கையின்
இயங்கலின் மாறுபாடுகள்
அவதாரங்கள் பிறப்பதும் இயற்கையே!

...யம்!
...ம்)
...கும்
...ம்!
...லும்
...னம்!


### (துன்பம்)

...ல் விலங்குகள்
...னதில் எவற்றையும்
..., மறந்தும் போய் விடும்
...அவற்றின் வாழ்க்கை
...ன்பம்-புலன்கள்
...றிவைப் பெற்றதால்.
...மே தந்தது ஞானம்!

இ.ஜெயபாலன்,
கொட்டடி.

# கருங்காலிக்கு இணையான கற்பகதரு

அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.



இப்பூவுலகில் கோடிக்கணக்கான தாவரங்கள் (PALNTS) நிலத்திலும் நீர்நிலைகளிலும் பரிணமித்துள்ளன என்பது தாவரவியலாளரது (BIOLO-GISTS) கூற்றாகும். விலங்குகளைப் (ANIMALS) பொறுத்தவரை இனப்பெருக்கம் (REP-RODUCTION) மேற்கொள்வதற்கு ஆணைவிட (MALE) பெண் (FEMALE) இனமே கூடுதலான பக்குவத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

பொதுவாக தாவரங்களில் ஆண், பெண் என்ற பேதம் மிகவும் குறைவு இருப்பினும் ஆண் பனை, பெண் பனை, ஆண்பப்பாசி, பெண் பப்பாசி என்று இரு வெவ்வேறு இனங்கள் வளர்வதை நாம் அவதானிக்கலாம். ஆண்பனையும், ஆண் பப்பாசியும், பூரண வளர்ச்சி அடைந்த பின்னர் பூத்துக் குலுங்குவதோடே தமது வாழ்நாளைக் கடத்தி வருகின்றன என்றும் கூறலாம். காய், பழம், விதை என்பவற்றை இவற்றிலிருந்து பெறுவது இயலாத காரியமாகும்.

ஏலவே இலங்கையின் வடபுலத்திலுள்ள யாழ்.குடாநாட்டில் அதிகளவில் வளர்ந்து பயன் தருகின்ற பனை மரம் (PALMYRA TREE) பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.


காட்டு மரங்களான தேக்கு, பாலை, கருங்காலி என்பவற்றை வீட்டுத் தேவைகள் சிலவற்றுக்கு நாம் பயன்படுத்துகின்றோம். இந்த மரங்கள் கொண்டுள்ள வலிமையே இதற்கு முக்கிய காரணியாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கணிசமான அளவு பனை வளர்வதால் அவற்றை அங்குள்ள மக்கள் வீட்டுநிர்மாணிப்பு வேலையில் கூரைக்கு பயன்படுத்துகிறார்கள் இது மட்டுமன்றி பனை மரத்தை இன்னோரன்ன தேவைக்கும் உபயோகித்து வருகின்றனர்.

பனை மரம் வளரும் பிரதேசத்தில் வாழும் ஒருவர் சுமார் நூற்று ஐம்பது பனை மரங்களுக்குச் சொந்தக்காரராக இருந்தால் அவரது குடும்பப் பொருளாதாரம் (ECONOMYCS) நலிவடைவதற்கு சந்தர்ப்பம் உண்டாகாது என்பது கண்கூடு. கற்பகதரு என்று சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்ற பனைமரத்திலிருந்து பெறப்படுகின்ற அனைத்து பொருள்களும் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயன்பட்டுக் கொண்டே இருக்கின்றமை உள்ளங்கை நெல்லிக்கனியாகும். பனை மரத்திலிருந்து குருத்தோலை, காவோலை, பனை ஓலை, பனை மட்டை, பனஞ்சிராய், பனை ஈர்க்கு, பன்னாடை, பனஞ்சாறு, வெல்லம், பனம் கற்கண்டு, சக்கரை, நுங்கு, பனம் பழம், பனாட்டு, பனை விதை, பனம் கிழங்கு, புளுக்கொடியல், ஒடியல், பனம்கள் (PAL MYRA TODDY) பனஞ் சாராயம் (PALMY-RA ARRACK) போன்றவற்றை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

> பனை மரம் வளரும் பிரதேசத்தில் வாழும் ஒருவர் சுமார் நூற்று ஐம்பது பனை மரங்களுக்குச் சொந்தக்காரராக இருந்தால் அவரது குடும்ப பொருளாதாரம் நலிவடைவதற்கு சந்தர்ப்பம் உண்டாகாது என்பது கண்கூடு. கற்பகதரு என்று சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்ற பனை மரத்திலிருந்து பெறப்படுகின்ற அனைத்து பொருள்களும் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயன்பட்டுக் கொண்டே இருக்கின்றமை உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இனி பனைமரத்தை வளர்ப்பது எப்படி என்பது பற்றி சிறிது பார்ப்போம். இலங்கையில் யாழ்.மாவட்டம் அடங்கலாக உலர் வலயங்களில் பனைமரங்கள் செழித்து வளர்கின்றன. கற்பகதருவை உற்பத்தி செய்ய பெரும் உழைப்போ மிகுந்த செலவோ தேவைப்படாது. பனம் விதையை நாற்பது சென்ரிமீற்றர் ஆழத்தில் புதைத்து விட்டால் அது தானாகவே முளைத்து வளரக் கூடிய ஆற்றல் உடையது. வேலி (FENCE) அடைத்து காவல் காக்கவோ அல்லது செழித்து வளர ஊக்குவிக்கக் கூடிய பசளை (FERTILIZ ER) வகையினங்களை கொள்வனவு செய்து உரமிட வேண்டிய அவசியமோ இல்லை. பனங்கன்று முளைத்தலை (GER-MIN-ATION) உற்று நோக்குமிடத்து பெரும்பாலும் நூறு சதவீத விதைகள் முளைக்கின்றன. முளைத்த பனங்கன்றுகள் முதிர்ச்சியடைந்த பின்னரே ஆண்பனை, பெண்பனை என்று வகைப்படுத்தலாம். இது பனை மரத்திலுள்ள சிறப்பு அம்சமாகும். பெண்பனை முழுமையாக வளர்ச்சியடைந்த பின் பாளை பூத்துக் காய்த்து பழுத்து இனவிருத்தியைத் தொடருகின்றது. ஆண்பனை, பூத்துக்குலுங்கும் ஆனால் அதற்கு காய்க்கும் வாய்ப்பு இல்லை. தென்னை மரத்தில் பூக்கின்ற பாளையினுள் ஆண்பூ, பெண்பூ இரண்டும் சிருஷ்டிக் கப்பட்டுள்ளதனால் மகரந்தச் சேர்க்கை (POLL UTION) நடைபெற்று காய்கள், பழங்கள் என்பன வெகுவாகக் கிடைக்கின்றன. பனை மரத்தில் குருத்தோலையை எடுத்து ஈர்க்குகளை நீக்கிவிட்டால் பல்வேறு வகையான பாய்கள், ஓலைப் பெட்டி, பை, கடகம், விசிறி, சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாதனங்கள், தொப்பி, வெற்றிலைபாக்கு மற்றும் பணப்பை என்பவற்றைத் தயாரிக்கலாம். முதிர்ந்த பனை மரத்தின் முற்றிய ஓலைகள் கிராமத்து மாட்டுக் கொட்டகை, வீடு போன்றவற்றை வேய்வதற்குப் பயன்படும். பனை ஓலைகளினால் வேயப்பட்ட வீடுகளில் வாழ்பவர்கள் வெயில்வெப்பத்தினால் சிறிதும் பாதிப்படைய வேண்டியதில்லை. மட்டையோடு கூடிய பனை ஓலை வேலி அடைப்பதற்கு பயன்படும். (தொடரும்)



கருங்காலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## வழிபாட்டுக் கோலங்கள்




அச்சங்களும், துன்பங்களும் நிறைந்துவிட்ட சூழலில் அவற்றிலிருந்து விடுபடவும் மன அமைதி காணவும் இறைவழிபாடும் தியானமும் அவசியம் என்பதை இன்றைய சமூகம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அத்தகைய சிந்தனையோடு பக்திநெறிச் சிந்தனைக்கு வலுவூட்டும் வகையில் 'வழிபாட்டுக் கோலங்கள்' என்னும் நூல் வெளிவந்துள்ளது.

பிரார்த்தனை மூலம் மனித வாழ்வின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளவும்! வழிபாட்டு முறைகளில் புதைந்து கிடக்கும் உண்மைகளை விளங்கிக் கொள்ளவும் மக்கள் யாவரும் தெளிவுறும் வண்ணம் நூலின் உள்ளே செறிவான கருத்துக்களை சிறப்பாகச் சொல்லியுள்ளார் நூலாசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.

ஒவ்வொரு தலைப்பின் உள்ளேயும் உரைநடை ஒழுங்கும் செய்யுள்களின் தெரிவும் மிக மிகப் பொருத்தமாக வாசிக்கும்போதே வழிபாட்டின் உணர்வுக் கோலத்தை வாசகர் பெறும்வகையில் மொழிவலு அமைந்துள்ளது. 'நல்ல மனம் உண்டாம்', ''தாயும் நீயே தந்தையும் நீயே'', ''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்'', ''அனைத்திலும் மேவி இருப்பவனே'', ''உலையிலே ஊதி உலகக் கனல்வளர்ப்பாள்'', '' வணங்கும் பேய் வடிவம்'', ''உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே'', ''அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பவள்'', ''தேச முத்துமாரி'', ''தமிழர் வழிபாட்டில் இளமையின் செவ்நெறி'', ''காலத்தை உணர்த்தும் கன்னியர் நோன்பு'', ''சிவபுராணம் காட்டும் சிறப்பு வழிபாடு'', ''திருக்கார்த்திகை விளக்கீடு'' ஆகிய தலைப்புகளில் தெய்வ வழிபாட்டுக் கோலங்களைத் தெரியத் தந்திருக்கும் ஆசிரியரின் முயற்சி சிறப்பு பாராட்டுக்குரியதாகும்.

ஒவ்வொரு தலைப்பின் கீழும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் என்ற ஆசிரியரின் பெயர் அவசியமற்றதுபோலவே தோன்றுகின்றது. வழிபாட்டுக் கோலங்கள் பற்றி அறியவும் அவற்றை வழிபடுங்கலை பேணவும் இந்த நூலின் வழிகாட்டல்கள் யாவராலும் ஆய்ந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற ஆசிரியரின் நோக்கம் நிறைவேறும் என்பது திண்ணம். மன அமைதியும் நிம்மதியும் தரும் வழிபாட்டுக் கோலங்கள் எமது நாடு கடந்த சமயப் பக்திமான்களுக்கும் பயன் தரும் என்றே நம்பலாம்''

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் புலோலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சதாசிவம் உருத்திரேஸ்வரன் B.A. கடந்த 2ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அருகில் சிரேஷ்ட சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன்.



சில்லாலை மேற்கு சாந்தை பண்டத்தரிப்பை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தம்பித்துரை குணதிலகம் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரிய சேவையை ஆரம்பித்த இவர் இறுதி 23 வருட காலத்தை தான் கல்வி கற்ற கல்லூரியாகிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சேவையாற்றி ஓய்வுபெற்றார். ஓய்வின் பின்னர் சமூக சேவையில் இணைந்தார். சில்லாலை கமக்கார அமைப்பின் தலைவராகவும் பனிப்புலம் சமுதாய முன்னேற்ற நிரந்தர நிதியத்தின செயலாளராகவும் சில்லாலை பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் குழு உறுப்பினராகவும் உள்ளதுடன் சாந்தை சித்திவிநாயகர் ஆலய திருப்பணிச் சபையின் பொருளாளராக மிகக் கண்ணியமாகச் செயலாற்றியுள்ளார். மேலும் சில்லாலை முன்னோடி விவசாயிகளில் ஒருவராக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



யாழ்.பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற்ற சிறந்த பெண்மணிக்கான தெரிவில் யாழ்.பாஷையூர் மேற்கைச் சேர்ந்த திருமதி பி.குணரத்தினம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் கோரப்பட்ட தலைமைத்துவம், சொந்தத்திறமை, நவீன அணுகுமுறை, நாட்டிற்கும் சமூகத்துக்கும் செய்த சேவை, பிரதேச கலாசாரம், சமயம், சமூகம், தேசியம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் தெரிவுப் போட்டி இடம்பெற்றது. இதேவேளை யாழ்.மாவட்டத் தெரிவிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14)

## வள்ளுவத்தில் காலூன்றிய கவிஞர்கள்



(கடந்தவாரத் தொடர்ச்சி)

''சூழலும் யாழும் இனியவெனக்
கூறா வண்ணம் மென்கனிவாய்
மழலை பொழிந்தும் உடற்கின்பம்
மருவி ஒடி மேல் விழுந்தும்
விழையும் அமிழ்தின் மிகவினிமை
அனைய நுகரும் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும்
செய்தாள் மோகம் ஈன்றாள்''

என்ற பிரபுலிங்கச் செய்யுளில்,

*''அமிழ்தினு மாற்ற வினிதேதம்*
*மக்கள்*
*சிறுகை யளாவிய கூழ்'',*

*''மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்*
*சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'',*

*''குழலினிது யாழினி தென்பதம் மக்கள்*
*மழலைச் சொற்கேளா தவர்''*

என்ற மூன்று குறட்பாக்கள் நிறைந்து நின்று அணி செய்கின்றன.

*கொலைகள வழக்கா றவாவொடு வெகுளி*
*கொடுஞ்சொல் பொய் பயனிலை கூறல்*
*நிலையாதி ஒருவன் செய்ந்நன்றி மறத்தல்*
*நிந்தனை வஞ்சனை பிறர்தம்*
*சிலைநுதல் மடவார்க் கருதலென் நினைய*
*தீமைகள்....''*

என்ற பிரபுலிங்கப் பாடலில் வள்ளுவரின் வான் மறைக்கண் தகாதன வென ஒதுக்கிய தீமைகள் யாவும் நினைவில் எழுதுகின்றன. குறளின் கருத்தொடு கூடிய தொடர்களை எடுத்தாண்டு அணி செய்வது ஒருபுறமிருக்க, அந்நூலின் தொடர்களை மட்டும் சிவப்பிரகாசர் எடுத்தாளும் இடங்கள் மிகப் பலவாகும்.

*''கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை*
*எடுக்க வல்லதும் இம்மனம்....''*

என்ற இடத்தில் வருகின்ற தொடர் அமைப்பும்,

*'' கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று,*
*ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை''*

என்ற குறளை நம் மனத்தே எழுப்புகின்றது. ஆனால் ஒன்று குறளின் வான்சிறப்புக் கூறுமிடம்; மற்றது மனப் பண்பு கூறும் பாலாகும். திருவள்ளுவரைக் "கற்றுணர்பழையோர், புலவர், தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், ஆற்றற் பெரியோர், இணையில் திருவள்ளுவப் பெயர்கொள் எம்மான்" என்றும் திருக்குறளை " நவத் தமிழ்வேதம்" என்றும் பல படப் பாராட்டிப் போற்றுகின்றவர் சிவப்பிரகாசர் ஆவார்.

**திருவருட்பாவில் குறள்:**

திருக்குறளின் ஒளி தமிழ் இலக்கியம் முழுவதிலும் ஊடுருவிச் செல்கின்றது. காலந்தோறும் தோன்றும் கவிஞர்கள் குறளை எடுத்தாண்டுள்ளனர். அங்ஙனம் எடுதாண்டவர்களுள் ஒருவரே வள்ளலார் ஆவார். தம் நெஞ்சை விளித்துக்

*''கூத்தாட்டவைசேர் குழாம் விளித்தாற் போலுமென்ற*
*சீர்த்தாட் குறள் மொழியும் தேர்ந்திலையோ''*

என வள்ளலார் பாடுகின்றார். இந்தப் பாட்டில் குறளைச் *'சீர்த்தாட் குறள்'*என்கிறார் வள்ளலார்.

*'சீர்த்தாள்'*என்பது சீரடி எனப் பொருள்படும். சிறந்த அடிகளுடைய குறள் என்பது பொருளாகும்.

'' கூத்தாட்ட வைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று''

என்ற குறளின் கருத்தும் இந்தப் பாடல் வரிகளில் ஊடுருவி உள்ளதை உணரலாம். வெகுளாமை என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இரு குறளைப் பயன்படுத்தும் வள்ளலார் அதற்கு மறுதலையான பொறையுடையமை என்னும் அதிகாரக் குறள் ஒன்றையும் இணைத்து ஓரிடத்து மும்மணிகளைப் பதித்ததுபோல் பதித்துள்ளார்.

''செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீயதன்ற தென்னனிலையே - மல்லல்பெறத்
தன்னைத்தான் காக்கின் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப் போல் போற்றிப் புகழ்ந்திலையே - துள்ளி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னும்
திகழ்வாய் மையுநீ தெளியாய்''

இந்தப்பாட்டில் குறள் 'திகழ் வாய்மையாக' வள்ளலாரால் காட்டப்பட்டுள்ளது.

**பாரதி பாட்டில் குறள்:**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்தவர் பாரதியார் ஆவார். தமிழ் நாட்டின் அருந்தவச் செல்வராகிய திருவள்ளுவரை அவர் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தியுள்ளார்.

*''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான் புகழ் கொண்ட தமிழ்நாடு''*

என்று வள்ளுவரை உலகத்தார்க்கு உரிமைப்படுத்துகின்றார். வையத்தார்க்கெல்லாம் ஒளிநெறி காட்டிய வள்ளுவப் பெருமானைத் 'தெய்வவள்ளுவன்' என்று பாராட்டிப் பரவுகின்றார். மாந்தரனை வரும் ஓரினம் என்பது குறளின் மூலக்கருத்துக்களுள் ஒன்றாகும். இளம்பிள்ளைகளின் உள்ளத்தில் வள்ளுவரின் வாய்மொழி நிலை பெறும் வண்ணம்

*''சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்*
*தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''*

என்று சின்னஞ்சிறு பெண்ணுக்கு அறிவூட்டுகின்றார்.

*(தொடரும்)* ■ சங்கரவள்ளி நாயகம்

# சிறுவனின் சாமர்த்தியம்

ஓர் ஊரில் ஓர் அம்மா இருந்தார். அவருக்கு ஒரு மகன். 'வயதான காலத்தில் அம்மாவைக் காப்பாற்ற வேண்டும்' என்று அந்த மகன் நினைத்தான். அதனால் அவன் பிழைப்புத் தேடி நகரத்துக்கு வந்தான். அங்கும் இங்கும் வேலை தேடினான். ஆனால் அவனுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒருவர் அவனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். முதலில் அவர் சில நாள்களுக்கு அவனுக்கு எந்த வேலையும் கொடுக்கவில்லை. சில நாள்களுக்குப் பின் ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு, ஒரு எருமை மாட்டுத் தோலைக் கொடுத்தார்.

அவர் கொடுத்ததை இவன் "ஏன்? எதற்கு?" என்று கேட்காமல் வாங்கிக் கொண்டான். முதலாளி நான்கு பைகளை எடுத்துக் கொண்டு பிரயாணத்துக்கு ஓர் ஒட்டகத்தை ஏற்பாடு செய்தார். இவனும், "ஏன்? எதற்கு?" என்று எதுவும் கேட்கவில்லை. அவருடன் புறப்பட்டு விட்டான்.

இருவரும் ஒரு பெரிய செங்குத்தான மலையை அடைந்ததும் முதலாளி ஒட்டகத்தை நிறுத்தி அவனை ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கச் சொன்னார். முதலாளியின் உத்தரவுப்படிஅவன் செய்தான். அப்போது முதலாளி, "இதோ! இந்த மாட்டுத் தோலைக் கீழே விரித்துப் போட்டு அதில் நீ படுத்துக்கொள்" என்றார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும், 'முதலாளி சொல்கிறார்' என்பதால் அவர் கூறியபடியே படுத்துக் கொண்டான். உடனே முதலாளி அந்த எருமைத் தோலை நான்கு பக்கமும் எடுத்து ஒன்றாகச் சேர்த்து ஒரு கயிற்றால் கட்டிப்போட்டு விட்டு விலகி வந்து ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டார். இவர் அவனை கட்டிப் போட்டது, பார்ப்பதற்கு ஓர் எருமை மாடு படுத்திருப்பது போல் இருந்தது.

சிறிது நேரத்தில் அங்கு இரண்டு பெரிய கழுகுகள் பறந்து வந்தன. அவை அந்த எருமைத் தோல் மூட்டையை அப்படியே தூக்கிக் கொண்டு உயரப் பறந்து, அந்தச் செங்குத்தான மலையுச்சிக்குப் போய் அந்த மூட்டையை வைத்து தங்கள் அலகால் குத்திக் கட்டை அவிழ்த்தன.

அப்போது மூட்டைக்குள்ளிருந்து ஓர் இளைஞன் வெளியே வருவதைப் பார்த்ததும் கழுகுகள் பயந்து அங்கிருந்து ஓடிவிட்டன.

வெளியே வந்த இளைஞனின் காலடியில் ஏராளமான நவரத்தினங்கள் கொட்டிக் கிடந்தன. "ஏன் சும்மா நின்று கொண்டிருக்கிறாய்? உன் காலடியில் இருக்கும் நவரத்தினக் கற்களைப் பொறுக்கிக் கீழே போடு " என்றார் முதலாளி. அதன்படி அவன் நவரத்தினக் கற்களை எடுத்துப்போட்டுக் கொண்டிருக்கையில் "முதலாளி! நான் எப்படி இங்கிருந்து கீழே இறங்கி வருவது?" என்று கேட்டான்.

அதற்கு முதலாளி, "நீ முதலில் அங்கிருக்கும் கற்களை எடுத்துக் கீழே போடு. அதன்பின் நீ அங்கிருந்து கீழே இறங்கி வருவதற்கு வழி சொல்கிறேன்" என்றார். அவன் மேலேயிருந்து நவரத்தினக் கற்களை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

அவற்றை முதலாளி பைகளில் போட்டு நிரப்பிக் கொண்டிருந்தார். நான்கு பைகளும் நிரம்பியதும், அவற்றைச் சேர்த்து கட்டி முதலாளி ஒட்டகத்தின் முதுகில் ஏறிப் புறப்பட்டார். அதைப் பார்த்த இளைஞன் அவசர அவசரமாக, "முதலாளி..." என்று கத்தினான்.

"முட்டாளே.. என்னுடைய வேலைக்காரர்களுக்கு நான் எப்படிப்பட்ட வேலை கொடுக்கிறேன் என்று உனக்குப் புரியவில்லையா? மலையுச்சியின் பின்னால் திரும்பிப் பார்.. அங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது உனக்குப் புரியும்" என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

இளைஞன் திரும்பிப் பார்த்தான். அங்கே ஏராளமான எலும்புக்கூடுகள் இருந்தன. 'சிறிது நேரத்தில் ஒரு கழுகு அவன் தலைக்கு மேலே பறந்து வந்தது. இவன் மிகவும் சாமர்த்தியமாக ஒரே தாவலாகத் தாவி அதன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். பறந்துகொண்டிருந்த கழுகு களைத்துப் போய் ஓர் இடத்தில் கீழே இறங்கியபோது இளைஞன் தரையில் குதித்துத் தப்பி விட்டான்.

சில நள்களுக்குப் பின் அவன் மீண்டும் அதே முதலாளியிடமே சென்று வேலை கேட்டான். முதலாளி இவன் வேறு யாரோ.. அவன் சாயலில் இருக்கிறான்' என்று நினைத்து வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். இரண்டு நாள் கழித்து வழக்கம் போல் நான்கு பைகள், எருமைத் தோல் ஆகியவற்றுடன் அவனையும் அழைத்துக் கொண்டு முதலாளி அந்த மலையின் பக்கம் போனார். அங்கு எருமைத் தோலைத் தரையில் விரித்து இளைஞனை அதில் படுக்கச் சொன்னார். உடனே பையன் புத்திசாலித்தனமாக, "முதலாளி! இதில் எப்படி படுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கொஞ்சம் படுத்துக் காட்டினால் நல்லது" என்றான். அவரும் யதார்த்தமாக, "இது கூட உனக்குத் தெரியவில்லையா? என்று சொல்லிக் கொண்டே அதில் படுத்தார். அவ்வளவுதான். உடனே அவன் முதலாளியைச் சுருட்டிக் கயிற்றால் கட்டிவிட்டான்.

சிறிது நேரத்தில் வழக்கம்போல் அங்கு இரண்டு கழுகுகள் வந்தன. அவை முதலாளி இருந்த எருமைத் தோல் மூட்டையைத் தூக்கிக்கொண்டு போய் அந்த நவரத்தின மலையின் உச்சியில் போட்டு மூட்டையைப் பிரித்தன. அதிலிருந்து முதலாளி வெளியே வந்தார். அப்போது கீழே இருந்த இளைஞ்ன், "நேரத்தை வீணாக்காதீர்கள்; அங்கிருக்கும் ரத்தினக் கற்களை எடுத்துக் கீழே போடுங்கள்" என்றான்.

முதலாளிக்கு 'இவன் பழைய ஆள் என்பது அப்போதுதான் புரிந்தது. அவர், " மலையுச்சியிலிருந்து நீ எப்படி கீழே இறங்கி வந்தாய்? அதை முதலில் சொல்?" என்று கேட்டார். அதற்கு அவன், "முதலில் ரத்தினக் கற்களைப் பொறுக்கிக் கீழே போடுங்கள்; அதன்பின் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன்" என்றான். முதலாளிக்கு இப்போது வேறு வழியில்லை. நவரத்தினக் கற்களைப் பொறுக்கிக் கீழே போட்டார்.

பையன் நான்கு பைகளிலும் நவரத்தின கற்களைக் நிரப்பி எடுத்துக் கொண்டு ஒட்டகத்தில் ஏறிப் புறப்பட்டான். அப்போது முதலாளி "இங்கிருந்து தப்பிப்பதற்கு என்ன வழி? அதைச் சொல்லாமல் போகிறாயே" என்று மேலே இருந்து அலறினார்.



"தப்பிப்பதற்கு என்ன வழி என்பதை உங்களுக்குப் பின்னால் இருக்கும் எலும்புக் கூடுகளிடம் நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் சென்றுவிட்டான்.

ஏமாற்ற நினைப்பவர்களை ஏமாற்றித்தான் திருத்தவேண்டும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## முத்துஐயன்கட்டு எப்போது விடியும்?

மின்சாரம் என்பது மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று. தற்போது வளர்ந்து வரும் கல்வி வளர்ச்சியில் அதீத பங்கை வகிப்பது மின்சாரமே ஆகும். இது உலகம் அறிந்த உண்மை. ஆனால் எமது முத்து ஐயன் கட்டு கிராமம் மின்சாரம் இல்லாத நிலையில் இருளில் காணப்படுகிறது. மாணவர்கள் இரவு நேரங்களில் கல்வி கற்க முடியாது பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாணவர்கள் மட்டுமன்றி மக்களும் கூட மின்சாரம் இல்லாது சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி மந்த நிலையாக மாறிச் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா? ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து அந்தப் பகுதி மக்கள் சார்பில் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கே.சரோஜன்.

## குத்தாட்டம் போடுபவர்களே கொஞ்சம் கவனியுங்கள்

போருக்குப் பின்னரான களியாட்டங்கள் (Post War Entertainments). இதுவும் எமக்கு ஒரு சாபக்கேடு. அன்றைய நாள்களில் 'சின்ன மேளம்' என்ற பெயரோடு ஆரம்பித்த இந்தக் களியாட்டமானது இப்போது 'குத்தாட்டம்' என்ற பெயரோடு பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது.

அதுமட்டுமல்ல அன்று 'கோஷ்டி' என்று அழைக்கப்பட்ட இசைக்குழு இப்போது 'குரூப்' என்று அழைக்கப்படுகிறது.

ஆலயங்களில் பக்தி பெருகுதோ இல்லையோ, அன்று தொட்டு இன்றுவரை பண்பாட்டுச் சீரழிவு நடந்து கொண்டேயிருக்கிறது. அன்று சின்ன மேள ஆட்டங்களை ரசிப்பதற்கென்றே ஓர் இளைஞர் கூட்டம் ஆலயங்களுக்கு அலைமோதும். நடன மாதுக்களின் அங்க அசைவுகளை இரசிப்பதற்காக ஓர் இளைஞர் கூட்டம் அண்ணாந்து பார்த்தபடி அமர்ந்திருக்கும். ''இவளுகள் காசுக்காக ஆடுவாளுகள்' என்ற நாகலிங்கத்தாரின் நக்கல் பேச்சும் எங்கள் காதுகளில் வந்து விழும். அன்றைய நாள்களில் வீடு விற்றுத் தாலிவிற்று போட்டித் திருவிழாக்கள் நடத்தி கெட்டழிந்தவர்கள் பலருண்டு.

விடிய விடியத் திருவிழா நடத்தி விடிந்த பின் கோஷ்டிக் காரருக்கு டிமிக்கி குடுத்து விட்டு கொழும்புக்கு ஓடிப்போன உபயகாரர்களும், புகையிலை மருந்து குடித்தவர்களின் வரலாறும் உண்டு. வடமராட்சிப் பண்டிதர் ஒருவரின் அன்றைய நகைச்சுவைக் கவிதை ஞாபகத்துக்கு வருகிறது.

"வீட்டுக்கு வேலியில்லை
பெண்டிலுக்கு தாலியில்லை
போட்டிக்குத் திருவிழா செய்து
பொன்னன் புகையிலை மருந்து குடிச்சான்
நாட்டுக்கு உதவாத சின்னமேள மோகத்தால்
நாறுதடி நம்சமூகம் ஞானப்பெண்ணே."

இன்று வெளிநாட்டவர்கள் அங்கே கஷ்ரப்பட்டு சம்பாதித்து அனுப்பும் பணத்தில் இங்குள்ளவர்கள் திருவிழாச் செய்து தம்மை விளம்பரப்படுத்துகிறார்கள். இனியென்ன, வைகாசி பிறந்தாச்சு. வடமராட்சி விடிய விடிய விழாக்கோலம் கொள்ளப் போகுது. கோடி கோடியாகக் கொட்டித் தீர்க்கும் கனவான்களே, இல்லை இல்லை தனவான்களே நாற்பத்தையாயிரம் போருக்குப் பிந்திய விதவைகளை (Post War Widows) பார்த்து [illegible] கண்ணீர் [illegible] அந்த ஹிந்திக்காரர்களுக்கு உள்ள அனுதாபம் கூட உங்களிடம் இல்லையா?. இதுவும் ஒரு பக்திமார்க்கமா? இக்களியாட்டப் பக்தி மார்க்கத்தின் மூலம் அந்த நாற்பத்தையாயிரம் விதவைகளுக்கும் அவர்களின் ஏதிலிப் பிள்ளைகளுக்கும் விடிவு ஏற்படுமானால் கூறுங்கள். நீங்கள் செய்வது சரியென நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால் நாங்களும் வந்து உங்களோடு சேர்ந்து 'குத்தாட்டம்' போடுகிறோம். உறுதியாக.

யாழ்.வதிரிவாசன்

## கையைப் பலப்படுத்துங்கோ என்று எந்த முகத்தோடு கேட்கினம்?

தமிழ் அமைச்சர் என்று கூறிக் கொண்டு திரிபவராலும் அவருக்குக் கொடி, குடை, ஆலவட்டம் பிடிக்கும் அடிவருடிகளாலும் தமிழ் இனம் பட்ட அவஸ்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

அவருடைய கூட்டம் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் அமைதியாக வாழ்ந்த மக்களை எப்படி எல்லாம் வருத்தி வதைத்து மகிழ்ந்தார்கள் என்பது உலகத்திற்கே தெரியும்.

வன்னியில் முள்ளிவாய்க்கால் கடற்கரையோரங்களில் விதம் விதமாக குண்டு மழையிலும், ஆட்லெறி எறிகணை மழைக்குள்ளேயும் எங்களின் உறவுகளின் உடல்கள் தசைத் துண்டங்களாகவும் இரத்த வெள்ளத்திலும் துடிதுடித்து செத்துக் கொண்டிருந்தபோது அதனைச் செய்தவர்களுக்கு ஆதரவாக வாக்களித்து வாங்கிக் கொண்டிருந்த இவர்கள் இப்போது வன்னிக்கு வந்து தன்னுடைய காலைப் பலப்படுத்துங்கோ, கையைப் பலப்படுத்துங்கோ என்று கேட்கிறார்கள். இவர்களுக்கு வெட்கமே இல்லையா?

வன்னியில காடுகள்தானே அதிகம், அதனால் வன்னியில இருக்கிறவர்கள் எல்லாருமே ஏதும் அறியாத காட்டு மனிதர்கள் தானே என்று நினைக்கினம் போல.

சுந்தரமூர்த்தி
முல்லைத்தீவு.

## மக்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பைக் கொடுங்கள்

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு உள்ளிட்ட குற்றச் செயல்களால் யாழ்ப்பாண மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

இவ்வாறான குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக சந்திகள் தோறும் குடிமனைகள் தோறும் பொலிஸார் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபடவேண்டும்.

அவ்வாறு மக்களின் குடியிருப்புகள் மத்தியில் நிறுத்தப்படும் பொலிஸாரின் நோக்கம் முற்று முழுதாக மக்களின் பாதுகாப்புக் கருதியதாகவே இருக்க வேண்டும். மக்களுக்கு அசௌகரியத்தையும் இடைஞ்சலையும் கொடுப்பதாக இருக்க முடியாது. பொலிஸாருக்கு பற்றாக்குறை என்று காரணத்தைக் கூறி எந்தச் சந்தர்ப்பத்திலும் இராணுவத்தையோ உளவுப் பார்ப்பவர்களையோ நிறுத்த முடியாது.

நீதித்துறை, சட்டத்துறையின் உத்தரவின் பேரில் மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க பொலிஸ் அதிகாரிகள் முன்வர வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்திலிருந்து அரசு புடுங்கிய பகுதிகளில் மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் கடமையே.

சிவகௌரி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூந்தலை கருமையாக்கும் செம்பருத்தி எண்ணெய்!

அழகுக்காக கூந்தலுக்கு எத்தனையோ வர்ணம் பூசினாலும் கார் கூந்தல்தான் பெண்களுக்கு அழகு என்கின்றனர் நிபுணர்கள். கூந்தலை கருமையாக்க இயற்கையே செம்பருத்தியை அளித்துள்ளது. செம்பருத்தி இலையும், பூக்களும், கூந்தல் பராமரிப்பில் முக்கிய பங்காற்றுகின்றன.

### செம்பருத்தி தைலம்

செம்பருத்தி இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப்பொடி, கறிவேப்பிலைபொடி கலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து போத்தலில் அடைத்து வைத்து தினமும் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்தல் நீங்கி, முடி நன்கு வளரும்.

செம்பருத்திப் பூவை காயவைத்து பொடி செய்து கோப்பி, தேனீர் போல காலை மாலை கசாயம் செய்து அருந்தி வந்தால் இரத்தம் தூய்மையடையும், உடல் பளபளப்பாகும்.

### கூந்தல் உதிர்வை தடுக்கும்

கூந்தல் உதிர்வால் பாதிக்கப்பட்டவர்கள் செம்பருத்தி தைலத்தை பூசலாம். இது சிறந்த மூலிகை தைலமாக செயற்படுகிறது. இளநரையை தடுக்கிறது. கூந்தலை கருமையாக்குவதோடு, கூந்தலை அடர்த்தியாக்குகிறது.

### பொடுகுத் தொல்லை நீங்கும்

சிலருடைய தலையில் பொடுகு, பேன், ஈறு தொல்லைகள் அதிகமாக இருக்கும். இவர்கள் எவ்வளவுதான் மருந்துகள், ஷாம்புகள் உபயோகித்துப் பார்த்தாலும் அவர்கள் முழுமையாக இந்தத் தொல்லையிலிருந்து விடுபடமுடிவதில்லை. இதற்கு அருமையான மருந்து செம்பருத்திதான். செம்பருத்திப் பூவின் இதழ்களை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் பேன், பொடுகு நீங்கும்.

# லிப்ஸ்டிக்கிற்கு ஏற்ற மேக் அப் போடுங்க...

முகத்துக்கு மேக் அப் போட்டு அழகுபடுத்துவது ஒருவிதமான கலை. முக அழகை அதிகரித்துக் காட்டுவதில் லிப்ஸ்டிக் முக்கிய பங்கு வகிக்கிறது. முகத்தின் அழகை கூடுதல் அழகூட்ட லிப்ஸ்டிக்கை சரியான அளவில் உபயோகித்தால் போதும். அவையே கொஞ்சம் அதிகமாகி விட்டால் மொத்த அழகையும் அது கெடுத்துவிடும்.

### சரியான அவுட்லைன்

லிப்ஸ்டிக் போட வேண்டிய பகுதியில் அதே நிறத்திலான லிப்ஸ்டிக் லைனரைக் கொண்டு அவுட் லைன் போட வேண்டும். பின்னர் லிப் பிரஷ் கொண்டு லிப்ஸ்டிக் போட வேண்டும். போட்ட பிறகு ரிசூவால் ஒற்றியெடுக்கவும். இதனால் உதட்டில் திட்டுத்திட்டாக இருக்கும் லிப்ஸ்டிக்குகள் சரியாகிவிடும்.

### நிறத்திற்கு ஏற்ற வர்ணம்

லிப்ஸ்டிக்கைத் தெரிவு செய்யும் போது தங்கள் நிறத்திற்கு ஏற்ற வகையில் வாங்க வேண்டும். விலை குறைவானவற்றை வாங்காதீர்கள். அவை வாய்க்குள் சென்று உடலுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும்


மெலிதான உதடுகளைக் கொண்டவர்கள், உதடுகளின் வெளிப்பகுதியில் அவுட் லைன் வரைய வேண்டும். பருமனான உதடு கொண்டவர்கள் உள்பகுதியில் அவுட்லைன் போட்டு அதன் பின் லிப்ஸ்டிக்கினால் பில்அப் செய்யலாம்.

### சரியான ஐ ஷடோ

லிப்ஸ்டிக் நிறத்துக்கு ஏற்ப பொருத்தமான ஐ ஷடோ போடவும். ஆரஞ்ச், பிரவுண், அல்லது சிவப்பு நிறங்கள் அனைத்து வகையினருக்கும் ஏற்றது. அதேபோல் செந்தூரம் வைப்பது கூட லிப்ஸ்டிக் நிறத்துக்கு ஏற்ப இருந்தால் கூடுதல் மெருகூட்டும். சிவப்பு நிற லிப்ஸ்டிக் அதற்கேற்ப செந்தூரம் அழகு அள்ளிக் கொண்டு போகும்.

### பொருத்தமான உடைகள்

நாம் அணியும் ஆடைகளை லிப்ஸ்டிக் நிறத்திற்கு ஏற்ப அணியலாம். இதனால் லிப்ஸ்டிக் எடுப்பாக தெரியும். பார்ட்டி, ரிசப்ஷன் போன்ற விழாக்களுக்குச் செல்லும்போது அடர்ப்ரௌவுன் நிற லிப்ஸ்டிக் உபயோகிக்கலாம். அதற்கேற்ப ஆடைகளும் அணிவது கூடுதல் அழகு தரும்.



# கண்களின் அழகை பாதிக்கும் கருவளையம்

முகத்திற்கு முத்தாய்ப்பாய் அழகைத் தருபவை கண்கள். அந்தக் கண்களில் ஏற்படும் சோர்வு முக அழகையே மாற்றி விடும். கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் கண்களின் அழகைப் பாதித்துவிடும். எனவே கண்களை கவனமாக பாதுகாக்க வேண்டும் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.

### உடல் உஷ்ணம்

உடல் உஷ்ணம் நேரடியாக கண்களைப் பாதிக்கும். கண்களுக்கு எரிச்சலைத் தரும். கண்களை குளிர்விக்க ஐஸ் தண்ணீரில் நனைத்த பஞ்சு அல்லது கைக்குட்டையை கண்களை மூடி பத்து நிமிடங்கள் வைத்து எடுக்கவும். கண்கள் புத்துணர்ச்சி பெறும். ஓய்ந்து போய்க் காணப்படும் கண்களை பளீர் என்று பிரகாசிக்கச் செய்ய ஒரு பஞ்சு உருண்டையை பன்னீரில் நனைத்து மூடிய கண்களின் இமைகள் மீது 15 நிமிடங்கள் வைத்து எடுக்கவும்.

### புத்துணர்ச்சி தரும் தண்ணீர்

சோர்ந்துபோய் காணப்படும் கண்களை புத்துணர்வு பெறச்செய்ய, ஒரு கிண்ணத்தில் நீர் நிரப்பி அதை கண்ணோடு ஒட்டி வைத்து இந்தக் கரைசலுக்குள் விழியை அழுத்தி கண்களைத் திறந்து, கண் விழியை இடமும், வலமும், மேலும் கீழுமாக உருட்டவும், இது கண்களில் உள்ள அழுக்கு, தூசு போன்றவற்றை அகற்றிவிடும்.

### அழகைப் பாதிக்கும் கருவளையம்

கண்களை சுற்றி ஏற்படும் கருவளையம் அழகை முற்றிலும் பாதிக்கும். தூக்கம் குறைவாக இருந்தாலே கருவளையம் ஏற்படும். அதிகமான கணினி பயன்பாடும் கருவளையம் தோன்றக் காரணமாகும். எனவே 7 மணி நேரம் தூக்கம் அவசியம். உணவில் கீரை வகைகளை சேர்க்க வேண்டும். விற்றமின் எண்ணெய் வைத்து கண்ணை சுற்றி மசாஜ் செய்வதும் கருவளையத்தைப் போக்கும்.

## எளிதில் போக்க டிப்ஸ்!



### பளிச் பாதாம் பருப்பு

கண்களுக்குக் கீழ் வரும் கருவளையத்தைக் குறைக்க, தினமும் உருளைக் கிழங்கைத் துருவி சாறு எடுத்துப் பூசிக் காயவிட்டபின் கழுவ வேண்டும். பாதாம் பருப்பை ஊறவைத்து பால் விட்டு அரைத்து அந்த விழுதை கண்களைச் சுற்றிப் பூசி வந்தால் கருவளையம் மறையும்.

### வசீகரிக்கும் ஆரஞ்சு

கண் வசீகரத்திற்கும், உடல் அழகுக்கும் ஆரஞ்சுப் பழம் ஏற்றது. தூக்கமின்மையைப் போக்கி கண்களை புத்துணர்ச்சியாக்கும் தன்மை ஆரஞ்சுக்கு உண்டு. சிறிதளவு ஆரஞ்சு ஜூஸை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து அது கட்டியானதும் மெல்லிய துணியில் கட்டி வைத்து, கண்ணுக்கு மேல் ஒற்றி எடுக்கவேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் இப்படி செய்து வர கண்கள் பளிச் ஆகிவிடும்.

### வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காயை வட்டமாக நறுக்கி கண்களின் மீது வைத்து சிறிது நேரம் ரிலாக்ஸாக இருப்பது கண்களின் கரு வளையத்தை போக்கும்.

# வயதானாலும் அழகாய் தெரிய



தினம் தினம் நமக்கு வயதாகிறது. ஒருநாள் உறங்கி எழுந்தாலே போதும் நம்முடைய வாழ்நாளில் ஒருநாள் முடிந்து விடுகிறது. நமக்குத்தான் வயதாகிவிட்டதே என்று எண்ணாமல் உற்சாகத்தோடு இருந்தாலே இழந்த இளமையை மீட்டெடுக்கலாம் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள். ஐம்பது வயதிலும் அழகாய் தெரிய சில ஆலோசனைகளையும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஆணோ, பெண்ணோ அவர்களின் தலைமுடி இப்போதெல்லாம் முப்பது வயதிலேயே நரைக்கத் தொடங்கிவிடுகிறது. நரை முடிதான் முதுமையின் அடையாளத் தோற்றம் என்பதால் அதை மறைக்க பெரும்பாலோனோர் பிரயத்தனப்படுகின்றனர். நரையை மறைக்க டை உபயோகியுங்கள்... கருங்கூந்தலை கண்ணாடியில் பார்க்கும் போது உற்சாகம் பிறக்கும்.

டை உபயோகிப்பதில் உங்களுக்கு விருப்பமில்லை என்றால் பூவரசங்காய் முக்கால் பங்கும், கரிசலாங் கண்ணி கால் பங்கும் எடுத்து பக்குவமாக அரைத்து தலையில் பூசிக்கொள்ளுங்கள் முடி நல்ல பொலிவோடு அழகாக இருக்கும்.

வயதானால் கண்களில் சுருக்கம் ஏற்படுவது இயல்பு. முதுமையில் கண்களுக்கு கீழே கருவளையம் வரும் அது உங்கள் வயதைக்கூட்டி முதியவராக தோற்றமளிக்கச் செய்யும். எனவே கண் சுருக்கத்தைப் போக்க கண்களுக்கு அதிக சிரமம் தரும் வேலைகளை தவிர்க்கவேண்டும். அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது, அதிகம் நேரம் புத்தகம் படிப்பது போன்ற பழக்கங்களைக் குறைத்துக் கொள்ளுங்கள். கண்களின் கருவளையத்தை தவிர்க்க ஆரஞ்சுப்பழச் சாற்றை கண்ணுக்குக் கீழே தேய்த்து சற்று நேரம் கழித்து இதமான வெந்நீரில் கழுவிவிடுங்கள் பிறகு அந்த இடத்தில் வெள்ளரிப் பிஞ்சை தேயுங்கள். மெல்ல மெல்ல கருவளையம் காணாமல் போய்விடும். கழுத்துச் சுருக்கம் என்பதும் உங்களின் வயதை கூட்டும் அதனை அகற்ற சொர சொரப்பாக அரைக்கப்பட்ட அரிசி மாவையும், கடலை மாவையும் கழுத்துப் பகுதியில் தேய்த்து சிறிது நேரம் ஊறவைத்து பிறகு நீரில் கழுவுங்கள். இதனால் கழுத்துச் சுருக்கம் காணாமல் போகும்.

கால்வெடிப்புகள் உங்கள் முதுமைத் தோற்றத்தை மேலும் அதிகப்படுத்தும் என்பதால் இதமான சுடுநீரில் பாதத்தை நனைய விட்டு நன்கு கழுவுங்கள். பிறகு வெடிப்பு உள்ள இடத்தில் கற்றாழைச் சாற்றை தடவி சிறிது நேரம் ஊறவிடுங்கள். மஞ்சள் போட்டாலும் பித்த வெடிப்பு கால் ஆணி ஆகியவை குணமாகிவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org